# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 287 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 23, வியாழக்கிழமை 08.09.2016



மஹஜன சம்பத

இன்றைய சுப்பர் பரிசுத் தொகை

ரூ. 39,131,170/-

www.nlb.lk

தேசிய லொத்தர் சபை




அதிகாரத்தைப் பகிர்ந்து விட்டே ஆள்சேர்ப்பு செய்வது நல்லது பாருங்கோ...

## 41,746 வாக்காளர்கள் வடக்கில் நீக்கம்

யாழ்ப்பாணம், செப். 8

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த 41 ஆயிரத்து 746 பேர் நீக்கப்படுவதாக தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு, கிராம அலுவலர்களால் முழுமைப்படுத்தப்பட்டு மீளப் பெறப்பட்டன.

அதனடிப்படையில் நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலில் புதிதாக இணைக்கப் >> 24ஆம் பக்கம்

## தாஜுதீன் படுகொலைத் தினத்தன்று மகிந்த வீட்டிலிருந்து அழைப்புக்கள்

*தொலைபேசித் தொடர்பாடல் குறித்து நீதிமன்றில் விளக்கம்*

கொழும்பு, செப். 8

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று சம்பவத்தை மூடி மறைக்கும் செயலுடன் ஜனாதிபதி மாளிகையிலிருந்தும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சொந்த வீடான >> 23ஆம் பக்கம்

## இராணுவத்துக்கு அருகில் தமிழ் மக்கள் வாழலாம்

*கொழும்பிலும் அவ்வாறே நடக்கிறது என்கிறார் யாழ். தளபதி*



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 8

கொழும்பில் இராணுவ முகாம்களுக்கு அருகில் தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்றனர். அதேபோன்று இங்கும் தமிழ் மக்கள் வாழ முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க. >> 23ஆம் பக்கம்

## 2017 மே இல் இலங்கை வருகிறார் பிரதமர்மோடி

சென்னை, செப்.8

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த ஆண்டு மே மாதம் இலங்கைக்கு வருகை தருவார் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் இந்தியாவின் >> 25ஆம் பக்கம்

## லண்டனிலிருந்து வந்தவர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், செப். 8

மோட்டார் சைக்கிள்கள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், அவற்றில் பயணித்தவர்களில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் >> 25ஆம் பக்கம்

## தமிழரின் எதிர்பார்ப்புக்கு அமையவே அரசமைப்பில் மாற்றம் வரவேண்டும்

*யாழ். வந்த அமெரிக்கக் குழுவினரிடம் எடுத்துரைத்தார் வடக்கு முதலமைச்சர்*

யாழ்ப்பாணம், செப். 8

தமிழ் மக்களின் மன வேதனைகளையும் – சரித்திர பின்னணிகளையும் - எதிர்பார்ப்புகளையும் கொழும்பு அரசுக்கு எடுத்துக் கூறவேண்டும். அதனடிப்படையில் அரசமைப்பில் மாற்றங்கள் நடைபெறவேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவருக்கு எடுத்துரைத்தார் வடக்கு மாகாண >> 24ஆம் பக்கம்



## திசைமாறியதால் தப்பியது தலை

யாழ்ப்பாணம், செப். 8

காற்று வாங்குவதற்காக வழமைக்கு மாறாக திசை மாறித் தலை வைத்துப் படுத்திருந்த குடும்பத் தலைவர் இனம் தெரியாத நபர்களால் கால் பகுதியில் வாள் வெட்டுக்கு இலக்கா >> 24ஆம் பக்கம்

## காயமடைந்தவரைக் காப்பாற்ற ஓடியவர் விபத்தில் சிக்கி சாவு

கிளிநொச்சி, செப்.8

கட்டடவேலையில் ஈடுபட்டிருந்தபோது காயமடைந்தவரை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற இளைஞர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி அறிவியல் நகரில் நேற்றுக்காலை >> 25ஆம் பக்கம்

## அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுவிக்கவேண்டும்

### மைத்திரி, ரணிலுக்கு மனு

யாழ்ப்பாணம், செப். 8

அரசியல் தீர்மானத்தை மேற்கொண்டு எந்தவித நிபந்தனையுமின்றி அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான இயக்கம் மனு மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்தது.

அரசியல் கைதிகளின் உடன் விடுதலை செய்யக் கோரும் மனுவில் கையெழுத்திடும் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது. அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: >> 23ஆம் பக்கம்

## காணி பறிக்க இடைக்காலத் தடை

*மன்னார் நீதிமன்றம் பிறப்பித்தது*

மன்னார், செப். 8

கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பள்ளிமுனை 25 வீட்டுத்திட்ட காணியின் வழக்கு முடிவடையும் வரையில், அந்தக் காணியில் எந்தவிதமான வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ள முடியாது.

இவ்வாறு நேற்று இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்தார் மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா.

கடற்படையினரின் தேவைக்காக அபகரிப்பதற்கு, மேற்படி காணி அளவீடு செய்யப்படவிருந்த நிலையிலேயே மன்னார் மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பள்ளிமுனை 25 வீட்டுத்திட்டத்தில் >> 24ஆம் பக்கம்

## முப்படைகள், பொலிஸில் தமிழர்கள் இணைக்கப்படுவர்

*பிரதமர் சபையில் அறிவிப்பு*

கொழும்பு, செப். 8

முப்படைகள் மற்றும் பொலிஸ் துறைகளில் எதிர்காலத்தில் தமிழர்களைக்கூடுதலாகஇணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதில் வழங்கிய போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

போர் ஆரம்பித்த பின்னர் அரசு பாதுகாப்புத் தரப்பில் கடமையாற்றிய தமிழ அதிகாரிகள் விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டிய பிரதமர், அதன் காரணமாக தமிழர்கள் பாதுகாப்பு படைகளில் இணைவதற்கு தயக்கம் காட்டியதாகவும் தெரிவித்தார்.

உள்நாட்டுப் போர் இனவாத ரீதியில் மேற் கொள் >> 25ஆம் பக்கம்


Apply Now For September,2016 Intake

076 928 978 4

Cardiff Metropolitan University

ICBT CAMPUS JAFFNA

MBA

Master of Business Administration

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடல் நலக்கேடு எச்சரிக்கையின்றி பீடி விற்ற நால்வருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், செப். 8

80 வீத உடல் நலக்கேடு எச்சரிக்கைப் படங்களை வெளிப்புற அட்டையில் கொண்டிராத புகைத்தல் பொருளான பீடியை விற்பனை செய்த வர்த்தகர்கள், உற்பத்தியாளர், விற்பனைப் பிரதிநிதி ஆகியோருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது முல்லைத்தீவு நீதிவான் மன்றம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நகர்ப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களைச் சோதனை செய்த சுகாதாரப் பரிசோதகர் ஆ.சுரேஸ்ஆனந்தன், இரண்டு வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 80 வீதம் உடல் நலக்கேடு எச்சரிக்கைப் படங்கள் பொறிக்கப்படாத பீடிப் பைக்கற்றுகளை மீட்டதாகத் தெரிவித்தார்.

2 வர்த்தகர்கள் மற்றும் அதனை உற்பத்தி செய்து விநியோகித்தவர்கள் உள்ளடங்கலாக நால்வருக்கு எதிராக முல்லைத் தீவு நீதிவான் மன்றில் தனித்தனியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நால்வரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்து நால்வருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

(வ-4,115)

# பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் விரிவடைகிறது



கிளிநொச்சி, செப். 8

"எங்களது உடல்களையாவது எமது மண்ணுக்குள் புதையுங்கள்" எனத் தெரிவித்து இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட பரவிப்பாஞ்சான் காணி உரிமையாளர்கள் நேற்று முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கடந்த 7 ஆண்டுகளாக இராணுவத்தினர் வசமுள்ள பரவிப்பாஞ்சான் காணிகளை விடுவிக்குமாறு கோரி நேற்று முன்தினம் 7 ஆவது நாளாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்ட மக்களில் இருவர் நேற்றுத் தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதில் பரவிப்பாஞ்சானில் காணிகள் இருந்தும் அது விடுவிக்கப்படாமையால் வவுனியாவில் உள்ள உறவினர் ஒருவருடைய வீட்டில் தங்கியிருக்கும் தனிகா, மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த மல்லிகாதேவி, ஆகியோர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள தமது காணிகளை மீளப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தி பரவிப்பாஞ்சான் பிரதேச மக்கள் கடந்த மாதம் பல நாட்களாகத் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். கடந்த மாதம் 17ஆம் திகதி அந்தப் பகுதிக்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் பாதுகாப்புச் செயலாளருடன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டதை அடுத்து இரண்டு வாரங்களுக்குள் மக்களின் காணிகளை மீளப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்ததால், கடந்த மாதம் போராட்டம் கைவிடப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதியளித்த காலக்கெடு முடிந்துள்ளதாகவும், தமது காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்து, தங்களுடைய அனைத்துக் காணிகளையும் விடுவிக்கக் கோரி மீண்டும் கடந்தபுதன்கிழமைபோராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தப் போராட்டம் ஏழாவது நாளாகவும் தொடர்ந்தது. போராட்டம் தொடர்கின்ற போதும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

"பாதுகாப்பு அமைச்சின் செயலாளரோ, அல்லது மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனோ பரவிப்பாஞ்சானுக்கு நேரடியாக வந்து எங்களுடைய காணிகளை விடுவித்தாலே ஆரம்பிக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நிறுத்துவோம், இல்லையேல் என்ன நடந்தாலும் போராட்டத்தைக் கைவிடமாட்டோம். நல்லாட்சி அரசே நாங்களும் இந்த நாட்டு மக்கள் தான் எங்களையும் சற்றுத் திரும்பி பார்" என்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

(வ-21)

## தரமற்ற தலைக்கவசம் விற்க யாழ். மாவட்டத்தில் தடை

யாழ்ப்பாணம், செப். 8

எஸ்.எல்.எஸ் தரம் பெறிக்கப்படாத தலைக்கவசங்களை யாழ். மாவட்டத்தில் விற்பனை செய்யத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அவற்றை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்குமாறு தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் சட்ட நடவடிக்கை இடம் பெறும். இவ்வாறு பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2003ஆம் ஆண்டின் 9ம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் கீழ் இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்துநடைமுறைக்கு வரும் வகையில் எஸ்.எல்.எஸ். தரம் பொறிக்கப்படாத தலைக்கவசங்களை விற்பனை செய்ய முடியாது.

எனவே யாழ். மாவட்டத்தில் உள்ள தலைக்கவச விற்பனையாளர்கள் மற்றும் இறக்குமதி முகவர்கள் அனைவரும் தரமற்ற, எஸ்.எல்.எஸ் தரம் பொறிக்கப்படாத தலைக்கவசங்களை விற்கவோ காட்சிப்படுத்தவோ முடியாது. விற்பனை செய்வர்களை கண்டுபிடிப்பதற்கும், அது தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடரவும் மாவட்ட இணைப்பதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து விற்பனை நிலையங்களில் உள்ள போலியானதும், தரமற்றதுமான தலைக்கவசங்களை விற்பனை செய்பவர்கள், அவற்றை அகற்ற வேண்டும். அவ்வாறு அகற்றாமல் விற்பனைக்கு வைத்திருக்கும் வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

(வ-4,107)

## தனங்களப்பு விவசாயிகளுக்கு

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் வயல்களுக்கு மானியஉரக்கொடுப்பனவுதொடர்பானபதிவுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீசாலை கமநல சேவைகள் நிலையத்தில் இடம் பெறவுள்ளன.

2016 மற்றும் 2017 காலபோக நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள வயல்களின்உரிமையாளர்கள் மற்றும் குத்தகையாளர்கள் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்களின் உறுதிப்பத்திரம், உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை, வங்கிகணக்குப்புத்தகம்ஆகியவற்றின்புகைப்படப் பிரதிகளை கமநல சேவைகள் நிலையத்தில் சேர்ப்பித்து உரிய படிவத்தைப் பெற்று முழுமைப்படுத்தி வழங்கி வைக்குமாறு அமைப்பின் தலைவர் பொ.சதானந்தன் அறிவித்தார்.

(வ-9)

## மறவன்புலவு வெடிபொருள் மீட்பு; இரண்டு சந்தேகநபர்கள் விடுவிப்பு

மறவன்புலவில் தற்கொலை அங்கி உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்ட சம்பவத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த இரண்டு சந்தேகநபர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர். எனினும் இருவரும் கொழும்பு நீதிவான் மன்றில் இன்று வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 4 சந்தேகநபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பயங்கரவாத தடுப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ்கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 21 பேரின் வழக்குகள் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மறவன்புலவில் தற்கொலை அங்கி உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்பில் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட 6 பேரும் நேற்று அந்த வழக்கில் உள்ளடங்கியிருந்தனர். அவர்களில் 2 பேரே விடுவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த விஜயகுமார் கேதீஸ்வரன், கெக்கிராவ பகுதியைச் சேர்ந்த பெர்னாந்து ஆகியோரே நேற்று விடுவிக்கப்பட்டனர். அவர்களில் சிங்களவர் வாகன உரிமையாளர் என்று தெரிவிக்கப்பட்டது. வழக்கிலுள்ள ஏனைய 4 பேருக்கும் மறியல் நீடிக்கப்பட்டது.

(வ-4)

## அரிசி மூடைகள் திருட்டு

கிளிநொச்சி, செப். 8

நாச்சிக்குடா பொது நோக்கு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த 9 அரிசி மூடைகள் திருடப்பட்டதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மீனவர்களுக்கு வழங்கப்படுவதற்கு வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகளே இவ்வாறு விசமிகளால் திருடப்பட்டுள்ளன.

50 கிலோகிராம் நிறையுடைய 9 மூடைகளே திருடப்பட்டன.

நாச்சிக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி கடற்றொழிலாளர் சிக்கன கூட்டுறவு சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நாச்சிக்குடா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(4,107)

## உணவகங்களுக்கு 21,000 தண்டம்

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் இயங்கி வந்த இரு உணவகங்களின் உரிமையாளர்களுக்கு 21 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் வைத்தியசாலைக்கு முன்பாகவும் நகர்ப்பகுதியிலும் இயங்கி வந்த இரு உணவகங்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றில் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டது.

(வ-4,115)

## மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையே நல்லெண்ணத்தை மேம்படுத்த மின் வேலி

### முல்லைத்தீவில் திட்டத்தை ஆரம்பித்தது அரசு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மனிதர்களுக்கும் யானைகளுக்குமிடையிலான நல்லெண்ணத்தை மேம்படுத்துவதற்காக கிராமிய மட்டத்திலான மின்வேலி அமைக்கப்படவுள்ளன. அதற்கான முன்னாயத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று வன உயிரினங்கள் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் குடியிருக்கும் பகுதிகள் மற்றும் பயிர் செய்யும் பகுதிகளுக்குள் யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் முகமாக வன உயிரினங்கள் திணைக்களத்தினரால் 'யானை ம்ற்றும் மனிதர்களுக்கு இடையிலான நல்லெண்ணத்தை மேம்படுத்துவதற்கான கிராமிய மட்டத்திலான மின் வேலி அமைத்தல்' திட்டமானது அடுத்த வருடம் நடைமுறைப் படுத்தப்ப டவுள்ளது.

இதற்கு முன்னோடியாக நேற்று முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்குச் சென்ற வன உயிரினங்கள் திணைக்கள அதிகாரிகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தமது திட்டம் குறித்து கிராம அலுவலர்களுக்கு விளக்கியதுடன் 'யானை மற்றும் மனிதர்களுக்கிடையிலான நல்லெண்ணத்தை மேம்படுத்துவதற்கான கிராமிய மட்டத்திலான மின் வேலி அமைத்தல்' என்னும் தலைப்பிலான படிவம் ஒன்றை வழங்கி வைத்தனர். அதில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் மின் வேலி அமைக்கப்பட வேண்டிய கிராமங்களில் வாழும் குடும்பங்களின் தொகை, காணிகளின் பரப்பளவு, வேலி அமைக்கப்பட வேண்டிய சுற்றளவு போன்ற அடிப்படைத் தகவல்களை பெற்றுக்கொண்டனர்.

(வ-ரி7,102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2798 திகதி 07.09.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
21 25 47 49 Z
போனஸ் இல. சனிக்கிழமை ஜக்பொட்
54 ரூ. 16,047,675/-

# PIONEER CIMA LECTURER
## MR. S. MAYOORRAN is BACK!

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற விரிவுரையாளர் திரு.சி.மயூரன் அவர்களின் தலைமையிலான விரிவுரையாளர்களிடம் CIMA கற்பதற்கு, யாழ் மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு



New Batch
14.09.2016 @ 9.00am
(Admission for First 30 Students only)

MayZone
The Capstone of Success
No:61, 3rd Floor, Palaly Road, Jaffna.
(இருப்பையடி சந்திக்கு அருகில்)
021 722 3444

(JF 4410 (10.18))

# get UK GLOBALLY RECOGNISED CERTIFICATE



PEARSON BTEC
## HND in Business Management

Golden Opportunity For IIS Students

Next Intake Starts on
16th September

Call us: 071 777 5666 | 021 4 900 900

IIS City Campus
#200, Sivan pannai Road, Jaffna
info@iis.edu.lk , iis@iis.lk
021 222 8060, 021 4 900 900
IIS CITY CAMPUS

# மத்தியத் தாயின் அகவை 200 நிறைவு நாள் நிகழ்வினை சிறப்பிக்க மத்தியின் மைந்தர்கள் நாம் ஒன்று கூடுவோம்

Proud to be a Centralite 200

- காலம்:-09.09.2016 (வெள்ளிக்கிழமை)
- இடம்:- கல்லூரி மைதானம்
- நேரம்:- 11 மணி

## காலை நிகழ்வுகள்

தலைமை
எஸ்.கே.எழில்வேந்தன் (கல்லூரி முதல்வர்)
பிரதம விருந்தினர்
அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன
தபால் தலை வெளியிடல்

## மாலை நிகழ்வுகள்-பொன்.விபுலானந்தன் அரங்கு-பழைய மாணவர் நிகழ்வுகள்

நேரம்:- மாலை 05 மணி
தலைமை -
திரு.N.தமிழழகன் (தலைவர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்)

- நாடகம்:- பழைய மாணவன் திரு. தே.தேவானந்தின் நெறியாள்கையில்
- சிறப்பு பட்டிமன்றம்:- பழைய மாணவன் திரு.நா.விஜயசுந்தரம் தலைமையில்
- கவி அரங்கு:- முன்னாள் ஆசிரியர் திரு.சரா. புவனேஸ்வரன் தலைமையில்
- வானவேடிக்கை
- இசை நிகழ்வு:- பழைய மாணவர்களின் பங்குபற்றலுடன்

நிகழ்வின் நிறைவில் இராப்போசனத்தில் கலந்து சிறப்பிக்கவும்.
"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

ஊடக அனுசரணை

யாழ்ப்பாணப் பழைய மாணவர் சங்கம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

எஸ். மயூரன் (பழைய மாணவர்)
யாழ்ப்பாணம்.

எஸ். வாகீசன் (பழைய மாணவர்)
விஷ்ணு ஜுவல்லறி
181, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கே.பிரகாஸ் (பழைய மாணவர்)
மானேஸ் நகையகம்
A 220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விதிமுறைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு

## தயாராகின்றனர் மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், செப். 8

பொதுமக்கள் சரியான முறையில் சட்டத்தைக் கடைப்பிடிக்காததனாலேயே வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இது தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான செயற்திட்டங்கள் மருத்துவர்களால் வடக்கு மாகாணம் முழுவதும் நடத்தப்படும்.

இவ்வாறு யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கோப்பாயில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர் தங்கராசா செந்வரன் உயிரிழந்தார். அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ்ப்பாண தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில்நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத் துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு வீதி விபத்துக்கள் காரணமாகப் பல உயிர்கள் இழக்கப்படுகின்றன. சட்டங்கள் உரியமுறையில்நடைமுறைப்படுத்தப்படாமையும், சட்டத்தைப் பொதுமக்கள் சரியான முறையில் கடைப் பிடிக்காமையுமே காரணம். அதனாலேயே விபத்துக்கள் அதிகளவில் ஏற்படுகின்றன. பொலிஸ் மற்றும் சம்பந்தபட்ட அனைத்துத் துறையினரும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுள்ளனர். மக்கள் சட்டவிதிகளை ஏற்று நடப்பதற்கு ஏற்றவகையில் ஒருநாள் ஒரு மணிநேர அடையாள விழிப்புணர்வு நடத்துவதற்கு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மருத்துவர்கள் தயாராகி வருகின்றனர் என அஞ்சலி உரையில் தெரிவித்தார் யாழ். போதனா வைத் தியசாலைப் பணிப்பாளர்.

(வ-4,ரி7)

**வீடு விற்பனைக்கு**

கட்டுடை, மானிப்பாயில் 08 பரப்பும் 7/16 குழியும் உள்ள காணியும் அதில் உள்ள நாலு அறைகளும் இரண்டு குளியலறைகளும் அடங்கலாக உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். (J 4406) (14,17,18)

**தொடர்பு: 077 729 8108**

**வேலையாள்கள் தேவை**

எமது கொழும்பு நிறுவனத்தில், வேலைக்கு ஆள்கள் தேவை.
O/L, A/L படித்த வேலை பழக விருப்பமுள்ளவர்கள் தேவை. தெளிவான கையெழுத்தும், எலக்ரோனிக்ஸ் துறையில் நல்ல ஆர்வமும் உள்ள 25 வயதுக்கு உட்பட்டவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். அடிப்படை சம்பளம் 20,000 இல் இருந்து கிடைக்கும். உணவு, தங்குமிடம் இலவசம்.

உடன் தொடர்பு கொள்ளவும். Kumar-0777 710 785

**SATS Tech Engineer's**

No:51/102, Wolfendhal Street, Colombo-12. (J4383) (10.18)



**புத்தூர் மேற்கு ஆலடி முருகன் ஆலய**
**கட்டட நிதிக்காக**
**நடத்தும் மாபெரும்**
**நடனப் போட்டி**



இடம்: கலைமதி உதைப்பந்தாட்ட மைதானம்
காலம்: 10.09.2016 சனிக்கிழமை பி.ப 7.00 மணி
நடுவர்: பொன்ராசா கிரிசாந் (D.A)
(டான் தொலைக்காட்சியின் டான்ஸ் டான்ஸ் நிகழ்ச்சித் தொகுப்பாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விழாக்குழு
அருள்மிகு ஆலடிமுருகன் தேவஸ்தானம்,
புத்தூர் மேற்கு, புத்தூர். (J 4406) (13.18)

**வேலையாள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல பலசரக்கு வியாபார நிலையத்திற்கு Bill Clerk தேவை.
ஆண்கள் மட்டும். (J 4414) (14,17,18)

**021 492 3724**

**மணமகள் தேவை**

யாழ்.இந்து 1982 ஆம் ஆண்டு விசாக நட்சத்திரத்தில் பிறந்த கனடாவில் வசிக்கும் அழகிய மணமகனுக்கு மெல்லிய நிறமான மணமகள் தேவை. (J 4494) (14,17,18)

**021 561 9334/ 077 506 9481/ 077 838 0782**

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் வைத்தியர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (J 4407) (14,17,18)

**077 127 1134/ 077 538 6241**

**தேவை**

- தமிழ், ஆங்கில தட்டச்சு (ரைப்பிங்).
- பாடசாலை உபகரண விற்பனையாளர்
- நிழற்பிரதி (போட்டோகொப்பி)
- சிட்டை எழுதுனர்

தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.
(அண்மையில் உள்ளவர்கள், முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

**பிரகாந்த் போட்டோ கொப்பி சென்ரர்**
திருநெல்வேலி.
T.P: 076 6224473 (J 4376)(10.18)

**VACANCIES**

STAR ENGINEERING CONSTRUCTION Invites applications from qualified and committed candidates for the Following post.

(1) Technical Officer (NCT Civil or equivalent)
(2) Site Supervisor (BCT or equivalent)
(3) Office Staff (G.C.E A/L with computer knowledge)

Candidates are requested to send the CV to

**Star Engineering Construction,**
**No-35, Kanagasabai Lane, Jaffna.**
or mail at **nssutharsan@yahoo.com** (J4416) (10.18)

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**கல்வி மற்றும், தொழில் வழிகாட்டல் கண்காட்சியும், தொழிற்சந்தையும்**

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைத் தீர்மானித்து விட்டீர்களா?
மாணவர்களே! உங்கள் எதிர்காலம் சிறக்க வேண்டுமா?
உங்கள் உயர்வுக்கான பாதைகளைக் காட்டுவதற்காக இதோ........

Go to next Level
பரீட்சை முடிந்தது ? அடுத்தது என்ன

10, 11 செப்ரெம்பர் 2016
காலை 8.30 - 5.30 வரை
யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

24, 25 செப்ரெம்பர் 2016
காலை 8.30 - 5.30 வரை
வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம்

வாருங்கள்... பார்த்துப் பயன்பெறுங்கள்...!!!

- தொழிற்பயிற்சியும் தொழிற்தேர்வும்
- பொருத்தமான அரச தனியார் வேலை வாய்ப்புகள்
- சுயதொழில் ஊக்குவிப்பும் சந்தைவாய்ப்பும்
- வேலை செய்துகொண்டே கற்பதற்கான ஆலோசனைகள்
- சொந்த வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும்.
- க.பொ.த. உயர்தரத்தில் நீங்கள் தெரிவு செய்த துறைக்கான தொழில்தெரிவு.

சேர்.பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

ஊடக அனுசரணை: உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ADMISSION OF NEW STUDENTS 2016 / 2017

SLIIT
*Discover Your Future...*

## UNDERGRADUATE DEGREE PROGRAMMES

*Students Awaiting Results of the G.C.E. (A/L) 2016 are also eligible to apply*

COMPUTING | BUSINESS | ENGINEERING | ARCHITECTURE | QUANTITY SURVEYING | HOSPITALITY MANAGEMENT




### COMPUTING

BSc (Hons) Degree in Information Technology
*specialising in*


- Information Technology
- Software Engineering
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Interactive Media
- Cyber Security




### BUSINESS

BBA (Hons) Degree
*specialising in*

- Accounting & Finance
- Marketing Management
- Human Capital Management
- Logistics & Supply Chain Management
- Business Analytics




### ENGINEERING

BSc Engineering (Hons) Degree
*specialising in*

- Civil Engineering
- Electrical & Electronic Engineering
- Materials Engineering
- Mechanical Engineering
- Mechanical Engineering (Mechatronics)

*These degrees are offered by SLIIT as approved by the University Grants Commission and Ministry of Higher Education. Students also have the opportunity of completing a foreign degree programme in the above areas at SLIIT or have the option of completing a degree programme in one of the SLIIT partner universities in UK, USA, Australia or Canada.*

SLIIT OPEN DAY 2016

**COME DISCOVER SLIIT**

10TH SEPTEMBER | 9.00AM ONWARDS | SLIIT CAMPUSES & CENTRES

### ENTRY REQUIREMENTS FOR BSc (Hons) IT & BBA (Hons) DEGREES

Passes in three subjects (in any subject stream) at the G. C. E. (Advanced Level) Examination (Sri Lanka / London) in one and the same sitting and a pass at the Aptitude Test conducted by SLIIT

### ADMISSIONS TO COMPUTER SYSTEMS AND NETWORK ENGINEERING

Same as the above but applicants must have a pass in Mathematics or Physics or applicants from Engineering Technology Stream

### ENTRY REQUIREMENTS FOR BSc ENGINEERING (Hons) DEGREES

G.C.E Advanced Level Sri Lanka / London - 3 passes in Maths stream including a Credit pass in Mathematics or Physics in one and the same sitting and a pass at the aptitude test to be conducted by SLIIT

***Students Awaiting Results of the G.C.E. (A/L) 2016 are also eligible to apply***

### DATES TO REMEMBER

**Open Day** : 10 September 2016
**Closing Date for Applications** : 23 September 2016

### APTITUDE TEST

**Aptitude Test** : 09 October 2016 (10.00 am - 11.00 am)
**Test Centres** : BMICH, Malabe, Kandy, Kurunegala, Galle, Matara, Jaffna
**Test Medium** : English, Sinhala, Tamil

### SCHOLARSHIPS

- Industrial Financial Systems (IFS) Graduate Scholarship Programme + Internship at IFS
- SLIIT Performance based Scholarship

### HOW TO APPLY

| | | |
|---|---|---|
| Option 1 | Apply online www.sliit.lk/apply | Register Online |
| Option 2 | Download the Application from www.sliit.lk | Send the duly filled Application form to Manager Academic Affairs SLIIT, BoC Merchant Tower, St. Michael's Road, Colombo 03 |
| Option 3 | Obtain the Application from any of our Campuses or Centres | |
| Option 4 | Send the Application Request Form | |

011 754 4801
011 230 1904
www.sliit.lk / info@sliit.lk

SLIIT
COMPUTING | BUSINESS | ENGINEERING
BoC Merchant Tower,
#28, St. Michael's Road, Colombo 03
Tel: (011) 230 1904
ASSOCIATION OF COMMONWEALTH UNIVERSITIES & INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES

**APPLICATION REQUEST FORM**
(Option 4 Only)

NAME WITH INITIALS : ..........
CONTACT NUMBER : .......... Email: ..........
POSTAL ADDRESS : ..........
APTITUDE TEST CENTRE : ..........
APTITUDE TEST MEDIUM : ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

போரால் பாதிக்கப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு கனடாவைச் சேர்ந்த ஒருவர் தனது பிறந்தநாளை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கினார். நிரஞ்சனி சந்திரன் என்பரின் பிறந்தநாளை முன்னிட்டே இவை வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு வவுனியா வன்னிப்பட்டறை அமைப்பினரின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ற-21)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம்: 15.01.1935 மறைவு: 09.08.2016
**சீனியர் இரத்தினம்**
கிளானை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த எமது உத்தியோகத்தர் கிருஸ்ணலிங்கம் புவனேஸ்வரி யின் தந்தையார் சீனியர் இரத்தினம் கடந்த 09.08.2016 ஆம் திகதி சிவபதமடைந்தார். அவர்களின் 31ஆம் நாள் நினைவுதினத்தையொட்டி ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்.
ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலர், அனைத்து உத்தியோகத்தர்கள்,
நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம் - உடுவில்.

**12 ஆவது நினைவுதினம்**



பண்ணாகம் பண்டிதர்
**அ. ஆறுமுகம்**
தோற்றம்
16.12.1917
மறைவு
08.09.2004
நீங்கள் மறைந்து பன்னிரண்டு ஆண்டுகள்
சென்றாலும் நீங்கள் விட்டுச்சென்ற
அறக்கட்டளைப் பணியைத் தொடர்ந்து
நாம் செய்வோம்.
அறக்கட்டளை சபையார்,
பண்ணாகம். (J 4385) (13.18) ஆறுமுகம் +அற்புதமலர்

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**கிருஸ்ணர் சுப்பிரமணியம்**
தோற்றம்
18.02.1954
மறைவு
20.09.2015
திதி: ஸப்தமி (08.09.2016)
ஓடி உருண்டது உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம் உமைப்பிரிந்து எண்ணி - நிதம்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
தோப்பு, அச்சுவேலி. குடும்பத்தினர்.

**2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் **நாகராசா சதீஸன்**
(தொழில் நுட்ப உத்தியோகத்தர் -
ஸ்ரீலங்கா ரெலிக்கொம், வவுனியா)
மலர்வு
24.04.1990
மறைவு
08.09.2014
திதி: ஆவணிப்பௌர்ணமி
ஆண்டுகள் இரண்டு ஆனதையா - ஆசை மகனே
உன்முகத்தைப் பாரெங்கும் பார்க்கிறேன் - பாவித்தாய்
ஆவலாய் நீதேடும் அக்காவின் பாதிக் கை - நீயடா
" என் தம்பி " என வாயாரப் புகழும்
உன் அக்காவுக்கு உறுதுணை யாரடா ?
நீயில்லா இவ்வுலகம் இருண்டதையா - எங்களுக்கு
உனக்காகக் காத்திருக்கும் உறவுகள்.....
கனடி லேன், கட்டுடை,
மானிப்பாய். (J 4409) (14.17.18) குடும்பத்தினர்.

# புதிய அதிபர் கடமையைப் பொறுப்பேற்பதில் உடுவில் மகளிர் கல்லூரியில் குழப்பம்

உடுவில் மகளிர் கல்லூரிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் நேற்றுக் கடமையைப் பொறுப்பேற்க சென்ற போது, பாடசாலையில் குழப்ப நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
உடுவில் மகளிர் கல்லூரியில் இதுவரை அதிபராகவிலிருந்த திருமதி சிரானி மில்ஸ், அவருக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகள், ஆசிரியர்கள் சிலரும் புதிய அதிபர் கடமையைப் பொறுப்பேற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன்போது புதிய அதிபருக்கு சார்பான ஆசிரியர்களுக்கும் பழைய அதிபருக்குச் சார்பான ஆசிரியர்களுக்கும் இடையே குழப்பம் ஏற்பட்டது. இதனால் புதிய அதிபர் கடமையைப் பொறுப்பேற்பதில் தடை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
தற்போதைய அதிபர் 60 வயதைக் கடந்துவிட்டார். அதனால் அவர் சேவையிலிருந்து ஒய்வு பெற வேண்டுமெனக் கல்லூரியின் ஆளுநர் சபையினால் அறிவிக்கப்பட்டது. அத்துடன் நேர்முகத்தேர்வு மூலம் புதிய அதிபர் நியமிக்கப்பட்டார்.
அங்கு குழப்பம் உச்சத்தை தொட்டது. இரு அணிகளும் வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். நிலமையை கட்டுப்படுத்த பொலிஸார் மேலதிகமாகவும் வரவழைக்கப்பட்டனர். இரவையும் தாண்டி அதே நிலைமை தொடர்ந்தது.
இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் என பலரும் சம்பவ இடத்திற்குச் சென்று பேச்சுக்களில் ஈடுபட்டபோதும் நிலமை சுமுகத்தை எட்டவில்லை.
இந்த விடயம் வடக்கு மாகாண முதலமைச்சர் , ஆளுநர் , ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டதையடுத்து முதலமைச்சர் சாா்பிலேயே கல்வி அமைச்சர் கலந்து கொண்டதோடு ஆளுநரும் நேரில் சென்று கலந்துரையாடினார். எனினும் எந்தவித உத்தியோகபூர்வ முடிவும் எட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,101,ரி4)

**கண்ணீர் அஞ்சலி**

பொறியியலாளர் க. பகீரதன்
அவர்களின் அன்புத் தாயார்.
அமரர் **நவபுஸ்பம் கதிர்காமநாதன்**



இன்று மலர்ந்த மலர்போல
சிரித்த முகமுடையாய்
அன்பின் உருவம் கொண்டு - நீ
அணைத்தாய் அனைவரையும்
விழியில் நீரும் பெருகுதம்மா - நீ
விரைந்த சேதி அதுகேட்டு
உந்தன் ஆத்ம சாந்திக்காய்
உள்ளம் உருக வேண்டுகின்றோம்
உந்தன் அமைதிக்காய் - அந்த
ஆண்டவர் தரட்டும் ஆறுதலை..... !
நண்பர்கள் (E 06 Batch)
பிறப்பு 19.05.1949 இறப்பு 06.09.2016

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி
**கனகம்மா சிவசம்பு**
மண்டைதீவு - 06
திதி: பூர்வபக்கஸப்தமி
(08.09.2016)



எங்கள் அன்புத்தாயே ஆயிரம் ஆயிரம் உறவுகள்
வந்தாலும் ஆலமரம் போன்ற உங்கள் அன்பு போல
வருமா? உங்களுடன் வாழ்ந்த அந்த நாள்
போனதம்மா எங்கள் ஆனந்தமும் போனதம்மா
நான்கு ஆண்டுகள் உருண்டோடி விட்டன
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு
எங்களை விட்டுப் பிரியாது தாயே
உங்களை எண்ணித் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா என்றும் சாந்தியடையட்டும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
மண்டைதீவு - 06 (J 4394) (13.18) குடும்பத்தினர்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



அமரர் இம்மானுவேல்
**ஜோண்சிங்கராயர் (ஜீவம்)**
(ஓய்வுபெற்ற ஊழியர் - பத்திரிசியார் கல்லூரி, ZOA, கலாமுற்றம்)
பிறப்பு
20.09.1946
இறப்பு
09.08.2016
கடந்த 09.08.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இம்மானுவேல் ஜோண்சிங்கராயர் (ஜீவம்) அவர்களின் மரணச்செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எங்கள் துக்கத்தில் பங்குகொண்டவர்களுக்கும், இறுதித் திருப்பலியில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்த குருக்கள் அருட்சகோதர சகோதரிகளுக்கும் இறுதிச் சடங்கில் தோள் கொடுத்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
356/10 ஆம் குறுக்கு,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## தூதுவர் மீதான தாக்குதல் ஒரு தனிப்பட்ட சம்பவம்
### கூறுகின்றது மலேசிய அரசு

கொழும்பு, செப். 8
மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இலங்கைத் தூதுவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், தனிப்பட்ட ஒரு சம்பவம் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.
பயங்கரவாத நோக்கத்துடன் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என்று மலேசிய பிரதி உள்விவகார அமைச்சர் தாகூர் ஜஸ்லான் மொஹமட் குறிப்பிட்டார்.
இலங்கைத் தூதுவர் இப்ராஹிம் அன்வர் மீதான தாக்குதலை, அமைச்சு அதிக அக்கறையுடன் அணுகுகின்றது. இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை, இலங்கைத் தூதுவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் வருத்தம் தெரிவித்து மலேசிய அயலுறவுத் துறை அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதைக் கருத்திற்கொண்டு கோலாலம்பூரில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் நெருங்கிப் பணியாற்றி வருவதாக மலேசிய அயலுறவுத்துறை அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குள சீரமைப்பு முடங்கும் அபாய நிலைமை

## ஆளுநர் தலைமையில் கலந்துரையாட ஏற்பாடு இரணைமடு விவசாய சம்மேளனச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 8
இரணைமடுக் குளத்தின் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் அவசர கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் இரணைமடு விவசாய சம்மேளனச் செயலர் சிவமோகன்.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் 9 ஆயிரம் விவசாயிகளின் உயிர் நாடியாக விளங்கும் இரணைமடுக்குளத்தின் கீழான 25 ஆயிரம் ஏக்கர் சிறுபோகம் தடைப்பட்டு குளத்தின் சீரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. குளச் சீரமைப்புப் பணிக்காக அருகில் இருந்து மண் பெறப்பட்ட நிலையில் அந்தப் பிரதேசம் வன வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு சீரமைப்புப் பணி முடக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலரின் கவனத்துக்கு விடயம் கொண்டு செல்லப்பட்டது. மாவட்டச் செயலர் பரிந்துரை மேற்கொண்ட போதும் குறித்த பகுதி முல்லைத்தீவின் நிர்வாக எல்லை எனத் தெரிவித்து அந்த மாவட்ட வன வளப் பகுதியினர் தடை போட்டனர். மீண்டும் மாவட்டச் செயலரை நாடினோம். கிளிநொச்சி மாவட்டச் செயலர் மீண்டும் முல்லைத்தீவு மாவட்டச் செயலருடன் உரையாடி முல்லைத்தீவு மாவட்ட வனவள அதிகாரிகள் நேரில் பார்வையிட்டனர். ஒரு தீர்மானத்தின் பிரகாரம் பணிக்கான மண்ணைப் பெற அனுமதித்தனர்.

பணியை ஆரம்பிக்க முயன்ற வேளையில்தொல்லியல் திணைக்களத்தினரும், கனிய வளத் திணைக்களத்தினரும்மண்ணை அள்ளினால் கைது செய்வோம் என்கின்றனர்.

இரணைமடுக்குள சீரமைப்புப் பணிகள் இடம்பெறவே மாட்டாது என்ற அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

குளச் சீரமைப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் நாம் சீரமைப்புக்காக உரிய திணைக்களங்களின் அனுமதிகளைப் பெற்றுள்ளீர்களா என்று கேட்டதற்கு, சகல திணைக்களங்களின் அனுமதியையும் பெற்று விட்டோம். ஆனால் விவசாயிகள்தான் பின்னடிக்கின்றார்கள் என்று எம்மைக் குற்றஞ்சாட்டிய அதிகாரிகள் இன்று இந்தப் பிரச்சினையைத் தெரியாதது போன்றுநடந்துகொள்கின்றனர். 2017 ஆம் ஆண்டு சிறுபோகம் தடைப்பட்டு விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் நிலை ஏற்படின் அதற்கானபொறுப்பை இந்த அதிகாரிகளே ஏற்க வேண்டும்.

இரணைமடுக்குளத்தின் சீரமைப்புக்கான மண் பிரச்சினை தொடர்பில், வட மாகாண முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர், ஜனாதிபதி வரைக்கும் மனுக் கொடுத்தோம். எந்தப் பயனும் இல்லை.

நிதி வீணாகக் கூடாது எனக் கூறிய அதிகாரிகள், குளத்து நீர் கடலுக்குப் போகின்றது என்று அழுத அரசியல்வாதிகள் அனைவரின் கண்ணுக்கும் 9 ஆயிரம் விவசாயிகளின் வாழ்வாதாரம் சிறு விடயமாகிவிட்டதா என்ற கேள்வியும் எழுகின்றது.

விவசாயிகளாகிய நாம் இறுதி முயற்சியாக ஆளுநரை நாடியுள்ளோம். 13ஆம் திகதி கலந்துரையாடலின் பிரகாரமும் தீர்வு கிட்டாது விடின் விவசாயிகள் ஒன்று கூடி அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராய்வோம் - என்றார். (ந-5,10)

### எழுத்தறிவு தினம் இன்று

வவுனியா, செப். 8
'எழுதப்பட்டதை வாசித்தாலே எதிர்காலம் எழுதப்படும்' எனும் தொனிப்பொருளிலான பன்னாட்டு எழுத்தறிவு தினம் இன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது.

றூம் டு றீட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வு காலை 9 மணி முதல் ஒரு மணிவரை வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் பங்கு பற்றலுடன் இடம்பெற உள்ளது. (ந-21)

### மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.8
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வட மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அச்செழு பிரதேசம், பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், கறுக்காய் பிரதேசம், வாழைத்தோட்டம் ஆகிய இடங்களிலும், வவுனியாவில் தோணிக்கல் சிவன் கோயில் பிரதேசம், குட்செட் வீதி, குருமன்காடு சந்தியிலிருந்து குருமன்காடு பிள்ளையார் கோயில் வரையான இடங்களிலும், மன்னாரில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரைக்கும், இத்திக்கண்டல், வேட்டையன்முறிப்பு, மினுக்கன், பாப்பாமோட்டை ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்படும். (ந-ரி)

### கைத்தொழில் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 8
கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கைத்தொழில் கண்காட்சி இன்று ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

கண்காட்சியின் ஆரம்ப தினமான இன்று தலைமை விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், வவுனியா மாவட்டச் செயலர் புஸ்பகுமார ஆகியோர் பங்கு பற்றவுள்ளனர். (ந-5-ரி)

## முஸ்லிம் மக்களுக்கான சிறப்பு நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில்

### யாழ். பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது



யாழ்ப்பாணம், செப். 8
முஸ்லிம் மக்களுக்கான சிறப்பு நடமாடும் சேவை யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. இந்த நடமாடும் சேவை தொடர்ச்சியாக அடுத்து வரும் இரு புதன்கிழமைகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் மட்டும் நடத்தப்படவுள்ளது. நடமாடும் சேவையில் 500 முஸ்லிம்கள் வரையில் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தோம் என்றும், மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு திரும்பி வரவுள்ளோம் என்று தெரிவித்து வேறு மாவட்டங்களிலிருந்து வந்த முஸ்லிம் மக்கள் நடமாடும் சேவையில் பங்குபற்றினர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அங்கு நேரடியாகப் பிரசன்னமாகியிருந்தார்.

முஸ்லிம் மக்களுக்கான சிறப்பு நடமாடும் சேவை தொடர்பில் பிரதேச செயலர் தெரிவித்ததாவது:

நேற்றுப்புதன்கிழமை மக்கள் சந்திப்புத் தினம். அதன் பிரகாரம் மக்கள் வந்துள்ளனர். அவர்கள் கூறும் விடயங்களைப் பதிவிடுகின்றோம். இதில் வேறு எதுவும் இல்லை என்றார்.

தமக்கான தேவைகள் தொடர்பில் பதிவிடுகின்றனர். அதிகமானோர் காணி அற்றவர்கள். சிலர் மீள் குடியேற்றம் செய்ய வேண்டியவர்கள்.

இவ்வாறு பதிவுகள் இடம்பெறும். 2012 ஆம் ஆண்டிலும் பதிவுகள் இடம்பெற்றது. அந்தப் பதிவேடுகளும் உண்டு. அவற்றுடனும் ஒப்பிட்டே எதிர் காலப் பணிகள் தொடர்பில் திட்டமிடப்படும்.

யாழ். குடாநாட்டின் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிலம் அற்றவர்களாக 14 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளனர். காணி பங்கீடு, வீடு வழங்கல் என்பன, மாவட்ட ரீதியிலேயே நடைமுறைப்படுத்தப்படும் - என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். பிரதேச செயலகத்தின் மேற்படி சிறப்பு நடமாடும் சேவைக்காக நிதி அனுமதி முன்கூட்டியே பெறப்பட்டுள்ளது. (ந-5,10)

### இறுவட்டு வெளியீடு

கலைஞர் சுதர்சன் இரட்ணம் இயக்கிய எனக்கானவள் பாடல் இறுவட்டு வெளியீடு இன்று பிற்பகல் 4மணிக்கு யாழ். செல்லா திரை அரங்கில் இடம் பெறவுள்ளது. அதில் சிந்து மற்றும் காசினி நடிகர்களாக பங்கேற்றுள்ளனர். பாடலுக்கான இசையைப் பிரசாத்தும், பாடல் வரிகளை ரவி கஜனும் வழங்க பாடலை அருள்தாசன் பாடி உள்ளார். (ந-ரி)

## இணைந்த நேர அட்டவணை நடைமுறை ஒத்திவைப்பு

### சில தினங்களில் நடைமுறையாகும் என்கிறார் வடக்கு போக்குவரத்து அமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 8
வழித்தட மார்க்கங்கள் சிலவற்றின் பிரச்சினைகளால் நேற்று நடைமுறைப்படுத்தப்பட இருந்த இணைந்த நேர அட்டவணை இறுதி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டது.

இணைந்த நேர அட்டவணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சில தினங்களில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் - என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்குரிய இணைந்த நேர அட்டவணை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டு ஒத்தி வைக்கப் பட்டது. ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணத்தை விளக்கும் ஊடக சந்திப்பு வீதி அபிவிருத்தித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவித்ததாவது:

வட மாகாணத்தில் வினைத்திறன் மிக்க போக்குவரத்துச் சேவையை வழங்க இணைந்த நேர அட்டவணை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட இருந்தது. வட மாகாணத்தில் 21 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு நேரக் கணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்தினோம். கடமையின் போது வைத்திருப்பதற்கு எம்மால் வழங்கப்பட்ட நேர அட்டவணைக்கும் நேரக் கட்டுப்பாட்டு அறிக்கைத் தாளுக்கும் இடையே ஒரு சில வேறுபாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது.

பரந்தன், ஏ-9, ஏ-32 மூன்று வழித்தடங்களில் பிரச்சினைகள் இனங் காணப்பட்டன. இந்த வழித்தடங்கள் ஊடாக பிற மாவட்டங்களுக்கு காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரையான நேரத்தில் பல பஸ்கள் பயணிக்கின்றன. சில பஸ்கள் ஒன்றை ஒன்று சந்திக்கும் நிலை ஏற்படுகிறது. பிரயாணிகளுக்கோ அல்லது ஓட்டுநர்களுக்கோ அதனால் எதுவித நன்மைகளும் ஏற்படாது. அதைத் தவிர்க்கும் வகையில் எமது அட்டவணையில் சில திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

வழித்தடங்கள் ஊடாக குறுகிய நேரத்துக்குள் அதிகளவான பஸ்கள் பயணிப்பதனால் அதனை பங்கீடு செய்து சீர் செய்வது என்பது எமக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. எம்மிடம் அனுபவம் வாய்ந்த பல அதிகாரிகள் உள்ளனர். அவர்களைக் கொண்டு நாம் நிச்சயமாக சில தினங்களுக்குள் சீர் செய்து எதுவித பிரச்சினைகளுமின்றி இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்துவோம்.

இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்துவதற்குத் தனியார் போக்குவரத்தும், இலங்கை போக்குவரத்து சபையும் இணக்கம் தெரிவித்துள்ளனர். ஒரு சில அதிகாரிகள் இதனை குழப்பும் வகையில் செயற்படுகின்றனர். இணைந்த நேர அட்டவணை நடைமுறைப்படுத்தப்படும்போது அதனை குழப்பும் வகையில் செயற்படுவோர் மீது நாம் வழக்குத் தாக்கல் செய்வது என்று தீர்மானித்துள்ளோம். நீதிமன்றத்தினூடாக கட்டளை பெறப்பட்டு நடைமுறைப்படுத்த முடிவு செய்திருக்கிறோம். இவ்வாறு செய்யப்பட்டால் இணைந்த நேர அட்டவணையினை மீறுவோர் மீது நீதிமன்ற அவதூறு வழக்குக் கூட பதிவாக வாய்ப்பு உள்ளது. அதை உணர்ந்து அனைத்துத் தரப்பினரும் செயற்பட வேண்டும் - என்றார். (ந-5.ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவைதீவில் பரீட்சை மண்டபம் ஏற்படுத்த இம்முறை நடவடிக்கை

## வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப். 8

கடல் கடந்து பரீட்சை எழுதும் எழுவைதீவு மாணவர்களுக்காக, எழுவைதீவு பிரதேசத்திலேயே கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

எழுவைதீவைச் சேர்ந்த மாணவர்கள் தினமும் படகில் பயணம் மேற்கொண்டு ஊர்காவற்றுறைப் பகுதிக்கு வந்தே பரீட்சையை எழுதும் நிலை காணப்படுகின்றது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் மாதங்களில் இடம்பெறுகின்றது. அந்தக் காலப் பகுதியில் கடுமையான மழை பெய்வதால், மாணவர்கள் படகுப் பயணத்தில் பெரும் இடர்களை எதிர்நோக்கினர்.

இந்த விடயம் தொடர்பில் கடந்த ஆண்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு சுட்டிக்காட்டப்பட்டது. உரிய காலத்தில் முன் அனுமதி பெற்றே பரீட்சை மண்டபம் அமைக்கப்படுகின்றது என்றும் – உடனடியாக எதுவும் செய்ய முடியாது என்றும் – அப்போது திணைக்கள அதிகாரிகள் கைவிரித்தனர்.

நடப்பு ஆண்டிலாவது எழுவைதீவில் பரீட்சை மண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் விளக்கமளித்தார்.

அதற்கான நடவடிக்கை முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. தீவக வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரைக்கு அமைவாக அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சம்பந்தப்பட்டவர்களிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பரீட்சை எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும், அவர்கள் பயணம் செய்யும் தூரத்தையும் கருத்தில் எடுத்து அனுமதி வழங்குமாறு கோரியுள்ளோம். அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் – என்று அவர் கூறினார். (ற-5-101)

# 34 கர்ப்பிணிகளுக்கு சத்துணவுப் பொதிகள்

மன்னார், செப். 8

மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 34 கர்ப்பிணிகளுக்கு நேற்று முன்தினம் சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு அமைவாக ஒவ்வொன்றும் தலா 3 ஆயிரத்து 628 ரூபா பெறுமதியான சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. வாழ்வாதாரம் நலிவுற்ற குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அவை வழங்கப்பட்டன. மன்னார் பிரதேச சபையின் செயலாளர் இராசையா தயாபரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மன்னார் பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரிகள் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு சத்துணவு பொதிகளை வழங்கினர். (ற-21,56)





சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கணினித் தொகுதி ஒன்று நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் மாகாண பிரமாண அடிப்படையிலான நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட கணினியை சங்கப்பொது முகாமையாளரிடம் கையளித்தார். சங்கத்தின் தலைவர் செ.மகேஸ்வரன், இயக்குநர் சபை உறுப்பினர்கள் உடனிருந்தனர். (ற-9)

# யாழ். மாவட்டத்தில் 18 சதவீதக் குடும்பங்கள் பெண்கள் தலைமையில்

யாழ்ப்பாணம், செப்.8

யாழ். மாவட்டத்தின் சனத் தொகையில் 18 சதவீதமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகும். ஒரு லட்சத்து 92 ஆயிரத்து 691 குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் வசிக்கின்றன எனப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 34 ஆயிரத்து 619 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகக் காணப்படுகின்றன.

போரால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகக்கப்பட்டவையாக 5 ஆயிரத்து 897 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

போர் பாதிப்பு இல்லாத பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 163 குடும்பங்களும், வேலணையில் ஆயிரத்து 114 குடும்பங்களும், ஊர்காவற்றுறையில் 357 குடும்பங்களும், காரைநகரில் 717 குடும்பங்களும், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 380 குடும்பங்களும் உள்ளன.

நல்லூரில் 2 ஆயிரத்து 520 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் ஆயிரத்து 297 குடும்பங்களும், சங்கானையில் ஆயிரத்து 607 குடும்பங்களும், உடுவிலில் 2 ஆயிரத்து 583 குடும்பங்களும், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 198 குடும்பங்களும் வாழ்கின்றன.

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 963 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 611 குடும்பங்களும், கரவெட்டியில் 3 ஆயிரத்து 331 குடும்பங்களும், பருத்தித்துறையில் 2 ஆயிரத்து 192 குடும்பங்களும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 690 குடும்பங்களுமாக யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 28 ஆயிரத்து 722 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன.

இந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் போரால் உருவான பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 25 குடும்பங்களும், வேலணையில் 130 குடும்பங்களும், ஊர்காவற்றுறையில் 16 குடும்பங்களும், காரைநகரில் 82 குடும்பங்களும், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 549 குடும்பங்களும் உள்ளன.

நல்லூரில் ஆயிரத்து 704 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் 206 குடும்பங்களும், சங்கானையில் 937 குடும்பங்களும், உடுவிலில் 755 குடும்பங்களும், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் 152 குடும்பங்களும் உள்ளன.

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 255 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 340 குடும்பங்களும், கரவெட்டியில் 268 குடும்பங்களும், பருத்தித்துறையில் 334 குடும்பங்களும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 142 குடும்பங்களுமாக யாழ். குடாநாட்டில் 5 ஆயிரத்து 897 குடும்பங்கள் உள்ளன. இந்த விவரங்கள் மாவட்ட செயலக புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ற-5,101)

# அனுமதி பத்திரம் இன்றி கடலட்டை பிடித்த நால்வர் கைது

யாழ்ப்பாணம், செப். 8

வெற்றிலைக்கேணி கடற் பரப்பில் அனுமதிப் பத்திரம் இன்றிக் கடல் அட்டை பிடித்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை அதிகாரி கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது 2 டிங்கி படகில் கடல் அட்டைப் பிடித்த 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

அனுமதிப் பத்திரம் இல்லாமல் தென்னிலங்கையிலிருந்து வந்து கடல் அட்டை பிடித்தமை தெரியவந்தது. கடற்படையினர் கைது செய்யப்பட்ட 4 பேரையும் மேலதிக விசாரணைகளுக்காக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5-107)

# பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.8

புங்குடுதீவு இறுப்பிட்டி அரிய நாயகன் புலவு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பரிபாலனசபைத் தலைவர் ச.தனபாலசிங்கம் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறும். புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

# தரைக்கீழ் நீர் தொடர்பான ஆய்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.8

தேசிய ஆராய்ச்சிப் பேரவையின் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட புங்குடுதீவு தரைக்கீழ் நீர் தொடர்பான ஆய்வு பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வட இலங்கை சர்வோதய வளாகம் புஸ்பமணி மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி பொ.ஜமுனாதேவி, கலாநிதி து.இராஜசூரியர், பேராசிரியர் மீ.செந்தில்நந்தனன், பேராசிரியர் து.மிகுந்தன், திருமதி வி.பத்மஜா (யாழ்.பல்கலைக்கழகம்), பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் எச்.ஏ.தர்மகுணவர்த்தன, ஜி.ஏ.பிற்றலை பேராசிரியர் கா.குகபாலன் ஆகியோர் உரையாற்றுவர்.

யாழ்.புங்குடுதீவின் தரைகீழ் நீர்சார் பிரச்சினைகளும், உபாயங்களும் என்ற பொருளில் ஆய்வுரைகள் 2014 முதல் 2016 வரையான கள ஆய்வுகள் குறித்த கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெறும். (ற-7)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய நிபுணர் நியமனம்

சாவகச்சேரி, செப். 8

கொழும்பு சுகாதார அமைச்சால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டார். அவர் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும் சடலங்கள் நீதிவானின் பணிப்பில், உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். சட்ட வைத்திய அறிக்கை தேவைப்படும் பயனாளிகளுக்கு அறிக்கையும் வழங்கப்படும். இவ்வாறான அறிக்கை தேவைப்படுவோர் முறைப்பாடு செய்யும் பொலிஸ் நிலையத்தில் உரிய படிவத்தைப் பெற்று, சட்ட வைத்திய நிபுணரின் அலுவலகத்தில் கொடுத்தால் அதற்கான அறிக்கை வழங்கப்படும்.

சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்கள், குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள், நிரந்தரப் பாதிப்பு ஏற்பட்டவர்கள் சட்ட வைத்திய நிபுணரின் அறிக்கை பெறுவதாயின் முன்னரைப்போல் விடுதியில் தங்காமல் நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வைத்தியசாலை அறிவித்தல் பலகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய நிபுணர் நியமிக்கப்படாததால் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும் சடலங்களை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தமது கடமைகளின் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி உறவினர்களிடம் ஒப்படைக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டது.

அவர் விடுமுறையில் நிற்கும் வேளையில் சடலங்களை பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் நிலையும் காணப்பட்டது. (ற-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுக் காணி உடன் வேண்டும்

## பேராறு குடி தண்ணீர் திட்டத்துக்கு காணிகள் கொடுத்த விவசாயிகள் நேற்றுப் போராட்டம்

வவுனியா, செப். 8

பேராறு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்காக அரசால் சுவீகரிக்கப்பட்ட 167 விவசாய காணிகளுக்கான மாற்றுக் காணிகள் வழங்கப்படவில்லை. பயிர்ச் செய்கைக்குத் தயார்ப்படுத்தப்பட்ட வயற் காணிகள் மற்றும் மாற்றுக் காணிகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்பினர் வழங்காது போனால் முத்தரப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் நீதிமன்ற உதவியை நாடுவதை விட வேறு வழியில்லை.



இவ்வாறு வவுனியா பத்திமக்கார அமைப்புக்களும், விவசாயிகளும் தெரிவித்தனர்.

மாற்றுக் காணிகள் வழங்க வேண்டும் என்று கோரி வவுனியா பத்திமக்கார அமைப்புக்களும், விவசாயிகளும் நேற்று வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். வவுனியா பிரதேச செயலகத்தின் முன்பாகக் கூடிய விவசாயிகள் மாவட்ட செயலகம் வரை பேரணியாகச் சென்றனர். அங்கு கவனவீர்ப்பு போராட்டம் நடத்தினர். நிறைவில் வவுனியா மாவட்டச் செயலாளரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கொடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தெரிவித்ததாவது:

வவுனியா நகருக்கு குடிதண்ணீர் வழங்கும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையால் பேராறு நீர் விநியோகத் திட்டம் 2007 ஆம் ஆண்டளவில் முன்மொழியப்பட்டது. அதற்கான ஆரம்ப பணிகள் 2010ஆம் ஆண்டு முழுவீச்சுடன் செயற்படுத்தப்பட்டது. அதற்காக நூற்றுக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்களும், மேட்டுக் காணிகளும் சுவீகரிக்கப்பட்டன.

போரின் கொடுமையால் பாதிக்கப்பட்ட எங்களுக்கு இந்தச் செய்தி பேரிடியைத் தந்தது. ஆரம்பத்தில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த நாங்கள் வேறு வழியில்லாமல் எங்களுடைய காணிகளைத் திட்டத்துக்குக் கொடுப்பதற்கு நிபந்தனைகளுடன் ஒப்புக் கொண்டோம். இதன் மூலம் உருவாகியது தான் முத்தரப்பு ஒப்பந்தம்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் சார்பில் மூன்று கமக்கார அமைப்புக்களும், அரச தரப்பு சார்பில் வவுனியா பிரதேச செயலாளர் மற்றும் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையும் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். ஒப்பந்தத்தின் பிரகாரம் சம்பந்தப்பட்ட தரப்பினரால் பல விடயங்கள் நிறைவேற்றபட்டபோதும் முக்கியமான விடயமான மாற்று வயற்காணிகள் வழங்குவது தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் இதுவரை செய்து முடிக்கப்படவில்லை.

2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குச் சமமான தன்மையுடைய, பயிர்ச் செய்கைக்குத் தயார்ப்படுத்தப்பட்ட வயற்காணிகள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் 20 வீதமான காணிகள் மட்டும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமாக உள்ள 80 வீதமான வயற் காணிகள் இதுவரை வயற் காணிகளுக்காகத் தயார்ப்படுத்தப்படாது பற்றைக் காடுகளாக காணப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாற்றுக் காணிகளுக்கான காணி அனுமதிப் பத்திரம் (மானிய பத்திரம்) வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் 2015ஆம் ஆண்டு காலாவதியான தற்காலிக அனுமதிப் பத்திரமே தற்போது விவசாயிகளிடம் உள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. அவை நிறைவேற்றப்படவில்லை.

முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இதுவரை நிறைவேற்றப்படாதுள்ள விடயங்களான பயிர்ச் செய்கைக்கு தயார்ப்படுத்தப்பட்ட வயற் காணிகள் மற்றும் மாற்று காணிகளுக்கான காணி அனுமதிப் பத்திரம் என்பன இந்த மாத இறுதிக்குள் சம்மந்தப்பட்ட தரப்பினரால் வழங்கப்படாதவிடத்து ஒப்பந்தத்தின் பிரகாரம் நீதிமன்ற உதவியை நாடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை - என்றனர். (ற-5,21)

## கட்டுமானங்களை பாதுகாப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை

முல்லைத்தீவு, செப். 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் யு.என் ஹபிட்டட் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுமானப் பணிகளை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் திருத்தங்களை மேற் கொள்வது தொடர்பான பயிற்சிப் பட்டறை புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.

பயிற்சிப் பட்டறைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரச உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் காலை 9 மணி தொடக்கம் பி.ப.ஒரு மணிவரை புதுக்குடியிருப்பு ஸ்ரார் பிளாஸா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் அறிமுக உரையுடன் பயிற்சிகள் ஆரம்பமானது. இதில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், பிரதேசசபை செயலாளர்கள், ஜப்பான் நாட்டு பிரதிநிதிகள், யு.என் ஹபிட்டட் நிறுவன அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கட்டடங்களை முறையாகப் பராமரிப்பதன் மூலம் நீண்டகாலப் பயனை அடைய முடியும், குறித்த நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்ட கட்டடங்கள், வீதிகளை மக்கள் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும், கிராம மட்ட அமைப்புக்களைக் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தும்போது பொறுப்புணர்ச்சியுடன் செய்வதற்குக் கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள் வழிகாட்டல்களை வழங்க வேண்டும் என மாவட்டச் செயலாளரால் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. (ற-ரி7,102)

## நகை திருடிய குற்றச்சாட்டில் ஏழு பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 8

வடமராட்சி அல்வாயில் வீடு புகுந்து 25 பவுண் நகைகளைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 7 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் மன்ற நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களில் சிறுவனும் உள்ளடங்குவதால் அவனை மாத்திரம், சான்று பெற்ற பாடசாலையில் சேர்க்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில் ஆள்கள் இல்லாத நேரம், வீடொன்றுக்குள் புகுந்தவர்கள் அங்கிருந்த 25 பவுண் நகைகளை திருடினர். அது தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

விசாரணைகள் வடமராட்சிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜவ்பரின் ஆலோசனையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. பருத்தித்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவன் தலைமையிலான சிறப்பு பொலிஸ் குழு விசாரணையை முன்னெடுத்தது.

விசாரணைகள், சுற்றிவளைப்புகளில் ஏழு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து 25 பவுண் நகைகள் பல்வேறு இடங்களில் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ற-5-109)

## மாகாணசபை உறுப்பினரின் சிறப்புரிமையை மீறினார் இராஜாங்க அமைச்சர்

### வடக்கு மாகாணசபை அமர்வில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப்.8

கிளிநொச்சியில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதனின் சிறப்புரிமை சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால் மீறப்பட்டதுஎன்றுகுற்றஞ்சாட்டப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் 61ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்தின் தலைமையில் நடைபெற்றது. அதில் தவநாதன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கேரதீவு, சங்குப் பிட்டிப் பாலத்தில் மீன்பிடியில் ஈடுபடும் விடயம் தொடர்பில் மாவட்ட பிரதிப் பணிப்பாளருடன் இராஜாங்க அமைச்சர் நடந்து கொண்ட விதம் குறித்து எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அது தொடர்பில் உரையாற்ற முற்பட்டேன். அப்போது இராஜாங்க அமைச்சர் அவதூறான வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டார். அவருடன் வந்திருந்த உதவியாளர் என்னைத் தாக்கவும் முற்பட்டார். எனது சிறப்புரிமைகள் இந்த நடவடிக்கைகளால் மீறப்பட்டுள்ளன - என்று அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் உரையாற்றினார்.

பலபிரதேச அபிவிருத்திக் கூட்டங்களுக்கு முதலமைச்சரின் அனுமதி பெறுப்படுவதில்லை. சிலவற்றுக்கு முதல் நாளிலும், சிலவற்றுக்கு இரு நாள்களுக்கு முன்னரும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. இராஜாங்க அமைச்சரின் கூற்றுப்படியே இடம்பெறுகின்றன. பிரதேச செயலர்களும் இதற்கு உடந்தையாக இருக்கின்றனர். சண்டிலிப்பாய் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு முதல் நாளும், சங்கானை பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு இரு நாள்களுக்கு முன்னருமே அறிவிக்கப்பட்டது. கூட்டத்துக்குச் செல்லும் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்குச் செல்லும் முதலமைச்சரின் பிரதிநிதிகளுக்கோ அல்லது மாகாண அமைச்சர்களுக்கோ உரிய இடம் வழங்கப்படுவதில்லை. அமைச்சரின் கையாள்களுக்கு கூட்ட மண்டபத்தில் இடம் வழங்கப்படுகின்றது- என்று அனந்தி சசிதரன் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அரியத்தினமும் உரையாற்றினார்.

பூநகரி கூட்டத்தில் எனது ஆசனத்துக்கு அருகில் மாகாண அமைச்சர் டெனீஸ்வரனுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டது. கூட்டம் ஆரம்பமாகும் வேளையில் சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் வந்தார். அவருடன் வந்த ஒருவர் அமைச்சர் டெனீஸ்வரனுக்கு ஒதுக்கப்பட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த பெயர் பொறிக்கப்பட்ட பலகையைத் தூக்கி வீசி விட்டு அந்த இடத்தில் நாகரிகம் இல்லாது அமர்ந்தார். கூட்டத்தின் ஒரு கட்டத்தில் உறுப்பினர் தவநாதனுக்கு அடிக்கக் கை ஓங்கினார். நான் அதைத் தடுத்தேன். நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு விடயத்தைக் கூற முற்பட்டால் அதைத் தடுத்து இணைத் தலைவரே கூறமுடி யும் என்கின்றனர் - என்று அரியரத்தினம் கூறினார்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும் உரையாற்றினார்.

அமைச்சர்களுடன் வருபவர்கள் அமைச்சரின் பின்பாகவே அமர முடியும். மாநாட்டில் அமர முடியாது. சட்டத்தில் அதற்கு இடமில்லை. இதைச் செயலாளர்கள் உறுதி செய்ய வேண்டும் - என்று எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார்.

இவை தொடர்பில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பதிலளித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட தீர்மானத்தில் மத்தியின் சார்பில் உள்ள இணைத்தலைவர்கள் மட்டும் ஒப்பமிட்டால் அது செல்லு படியற்றது. மாகாணம் சார்பிலும் முதலமைச்சர் அல்லது அவரது பிரதிநிதி ஒப்பமிட்டால் மட்டுமே சட்ட வலுவானதாகும். இதை அரச அதிபர்கள் அறிவர். சிலருக்கு அரசியல் காரணங்கள் இருக்கக் கூடும். இவற்றைக் கருத்தில் எடுத்து எதிர்காலத்தில் எமது நடவடிக்கைகள் அமையும்- என்று முதலமைச்சர் தெரிவித்தார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்பு நாடுகள் வரிசையில் இலங்கையை சேர்த்தமைக்குக் கண்டனம்

## உள் விவகாரத்தில் ஐ.நா. மேலும் தலையிட பான் கீ-மூன் வழி சமைப்பதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 8

ருவாண்டா மற்றும் சிரெப்ரினிகா ஆகிய நாடுகளுடன் இலங்கையையும் வரிசைப்படுத்திக் குறிப்பிட்டமைக்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் மீது கொழும்பில் சில அரசியல் வட்டாரங்களில் ஆட்சேபம் கிளப்பப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களிலும் இனச் சுத்திகரிப்பில் ஈடுபட்டமைக்கும் குறித்த நாடுகள் ஐ.நாவால் கடும் கண்டனங்களுக்குள்ளானவை. அந்த நாடுகளுடன் இலங்கையை பான் கீ-மூன் வரிசைப்படுத்திப் பேசியிருப்பதை அவை கண்டித்துள்ளன. சில பத்திரிகைகளில் கட்டுரைகளும் தலையங்கங்களும் கூட எழுதப்பட்டுள்ளன.

உள்ளக முரண்பாடுகளில் ஐ.நாவானது தனது தலையீட்டை மேலும் அதிகப்படுத்துவதற்கான முயற்சி இது என்றும் சில பத்திரிகைகள் குற்றஞ்சாட்டியுள்ளன. ஆங்கிலப் பத்திரிகையொன்றின் ராஜதந்திரப் பிரிவு ஆசிரியர் எழுதியுள்ள ஆக்கம் ஒன்றில் பான் கீ-மூன் கருத்துப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவனத்தின் அழைப்பின் மீது கொழும்பில் நிலையான அமைதி மற்றும் நிலையான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் என்ற தலைப்பிலான அவரால் தயாரிக்கப்பட்ட உரையில் இருந்து அப்பால் சென்று இந்தக் கருத்துக்களை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

ருவாண்டாவின் 1994ஆம் ஆண்டும் அதற்கு அடுத்த ஆண்டில் சிரெப்ரினிகாவிலும் இடம்பெற்ற படுகொலைகள், இன அழிப்புகள் என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. முதலாவதில் ருட்சிஸ்களை குறிவைத்து ஹுட்டுஸ்களால் மேற்கொள்ளப்பட்டது. மற்றதில் முஸ்லிம் பொஸ்னியன்களுக்கெதிராக பொஸ்னியன் சேர்ப் ராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் இடம்பெற்ற மோதல்கள் ஒருபோதும் சில காரணங்களையொட்டி இனப்படுகொலையென்று பட்டியல்படுத்தப்படவில்லை. இருந்தபோதும் ஒரு சில குழுக்களாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தமிழ் தீவிரவாதக் குழுக்களால் தீவிர பரப்புரைகள் மூலம் அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்ததுண்டு. இந்த அமைப்புக்கள் இப்போது இலங்கையில் இனச் சுத்திகரிப்பு இடம்பெற்றது என்ற தமது கருத்து நிலைக்கு ஐ.நா. செயலாளர் நாயகத்தின் குறிப்புக்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்துள்ளன.

> வடக்கு – கிழக்கில் ராணுவத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பான் கீ-மூன், பிராந்தியத்திலும் சர்வதேசத்தின் மத்தியிலும் இலங்கை தனது சரியான அந்தஸ்தை நிலை நாட்டுவதற்கான ஆரம்பக் கட்டத்திலேயே இன்னும் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

உரை நிகழ்த்திக் கொண்டிருந்த பான் கீ-மூன் தலைநிமிர்ந்து அவையோரை பார்த்துக் கூறினார்: கடந்த காலத்தில் சில பயங்கரமான பாரதூரமான சம்பவங்கள் நடந்துள்ளன. 1994 ஆம் ஆண்டில் ருவாண்டாவில் பெரும் படுகொலையொன்று இடம்பெற்றது. 10 லட்சத்துக்குமேல் கொல்லப்பட்டார்கள். அதற்கு ஐ.நா.பொறுப்பு என்று ஏற்றுக் கொண்டது. உண்மையில் அது அவர்களின் போர்ப் படுகொலைகள்தான். இருந்தாலும் அதன் மீது ஐ.நாவால் செயற்பட முடியாமல் போயிற்று. நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினோம். இனியும் ஒருபோதும் இது வேண்டாம், இனியும் வேண்டாம் என்று. அதே சம்பவம் ஒருவருடம் கழித்து சிரெப்ரினிகாவில் நடந்தது. அப்பொழுதும் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களை ஐ.நா. அமைதிகாக்கும் படைகளால் காப்பாற்ற முடியவில்லை. எனவே நாங்கள் மீண்டும் கூறினோம் இனி ஒருபோதும் வேண்டாம் என்று .

இவ்வாறு எத்தனை தடவைகள் தான் கூறுவது இனியும் வேண்டாம், இனியும் வேண்டாம் என்று. மீண்டும் அதை இலங்கையில் நாங்கள் செய்தோம். அவ்வாறு மீண்டும் இலங்கையில் யேமனில் மற்றும் இடங்களில் நடைபெறாமல் இருக்க நாம் அதிகமாக செய்ய வேண்டியிருக்கிறது என்று கூறினார்.

வடக்கு-கிழக்கில் ராணுவத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பான் கீ-மூன், பிராந்தியத்திலும் சர்வதேசத்தின் மத்தியிலும் இலங்கை தனது சரியான அந்தஸ்தை நிலை நாட்டுவதற்கான ஆரம்பக் கட்டத்திலேயே இன்னும் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிடுகையில், மூன் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோதே பார்வையாளர்களில் சிலர் அதனை ருவிட்டர் செய்திருந்தனர். அது விடுதலைப்புலி ஆதரவாளர் மத்தியில் மகிழ்ச்சியைத் தோற்றுவித்தது. ஏனென்றால் இலங்கையில் இனசுத்திகரிப்பு நிகழ்ந்துள்ளது என்பதாக அறிவிக்கும்படி அவர்கள் வருடக்கணக்காக ஐ.நாவை வற்புறுத்தி வந்துள்ளார்கள். இன்னும் சிலர் ருவாண்டாவிலும் சிரெப்ரினிகாவிலும் இடம்பெற்ற இனப்படுகொலைகளுடன் இலங்கையில் நடந்தவற்றை ஒப்பிட முடியாது என்று வாதிட்டுள்ளார்கள்.

பான் கீ-மூனின் கருத்துக்கள் வடக்கிலும் தெற்கிலுமுள்ள தீவிரவாதிகளின் குரலை மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் அவ்வாறான குரலைப் பலப்படுத்துவதாக இருக்கும் என்று அவர்கள் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ப)

## காணாமற்போனோர் சான்றிதழ் உள்ளோரின் பெயர் நீக்கப்படாது

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.8

காணாமற்போனோர் சான்றிதழ் உள்ளவர்களின் பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படமாட்டாது.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது: சர்வசன வாக்குரிமை இலங்கையர்களுக்கு முதன் முதலாகக் கிடைக்கப் பெற்றது. வாக்குரிமையை நாம் உரிய முறையில் பிரயோகம் செய்ய வேண்டும். தற்போது இளைஞர்கள் மத்தியில் தேர்தல்கள் மீதும் அரசியல்வாதிகள் மீதும் வெறுப்புணர்வு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் தேர்தல் மீதான ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

நாட்டில் வீடில்லாமல் வீதியோரங்களிலுள்ள யாசகர்கள் உள்ளிட்டோர் பொலிஸாரின் மூலம் இனங்கண்டு அவர்களையும் வாக்காளர்களாகப் பதிவு செய்து வாக்குரிமை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம். அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலையில் குணமடைந்த நோயாளர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யவுள்ளோம்.

2020 ஆம் ஆண்டுக்குள் பிரதான தேர்தல்களின்போது கொழும்பில் பணிபுரியும் தூரப் பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளைக் கொழும்பில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

காணாமற் போனோர் சான்றிதழ் உள்ளவர்களின் பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படமாட்டாது. உயிரிழந்த சந்தர்ப்பத்தில் மாத்திரமே பட்டியலிலிருந்துபெயர்நீக்கப்படும் – என்றார். (த-5)

## நந்திக் கடலுக்கான பாதை நூலை வெளியிட்ட மகிந்த

கொழும்பு, செப். 8

இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதிய 'நந்திக் கடலுக்கான பாதை' நூலை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டு வைத்தார்.



ஆனந்தாக் கல்லூரில் நடந்த வெளியீட்டு விழா வில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம், நூலின் முதல் பிரதியை, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன கையளித்தார்.

இந்த நிகழ்வில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், கலாநிதி றொகான் குணரத்ன, கலாநிதி தயான் ஜெயதிலக உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் அனுபவங்களை மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, தனது 800 பக்க நூலில் விரிவாக விவரித்துள்ளார்.

இறுதிக் கட்டப் போரில், 53 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக கமால் குணரத்ன பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## பிரகீத் கடத்தல் வழக்கிலும் உடலகமவுக்குத் தொடர்பு

### சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 8

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள, இராணுவப் புலனாய்வு அதிகாரியான சார்ஜன்ட் பிரேமானந்த உடலகம, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் வழக்கிலும் தொடர்புபட்டுள்ளார் என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரகீத் எக்னெலிகொட கடத்தலுக்கான குழுவொன்றை ஒருங்கிணைப்பதில் தொடர்புபட்டிருந்தார் என்று, சட்டமா அதிபர் சார்பில் ஹோமகம நீதிமன்றத்தில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி திலீப் பீரிஸ் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளின் மூலம், சார்ஜன்ட் பிரேமானந்த உடலகமவே, பிரகீத் எக்னெலிகொட கடத்தலுக்கான குழுவை ஒருங்கிணைத்துள்ளார் என்று கண்டறியப்பட்டுள்ளதாகவும் திலிப் பீரிஸ் நீதிவானுக்குத் தெரியப்படுத்தினார்.

'எக்னெலிகொட, 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமும், 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதமும், இரண்டு தடவைகள் கடத்தப்பட்டுள்ளார். இந்த இரண்டு கடத்தல் சம்பவங்களிலும், சார்ஜன்ட் பிரேமானந்த உடலகம தொடர்புபட்டுள்ளார் என்பதற்கான தொலைபேசி பதிவு ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன்.

இந்த வழக்கில் சார்ஜன்ட் பிரேமானந்த உடலகமவையும் ஒரு சந்தேகநபராகக் குறிப்பிட்டு, அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் அனுமதிக்கவேண்டும்' என்றும் அரச சட்டத்தரணி நீதிவானிடம் கோரியிருந்தார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செயலர் வருகை அச்சுறுத்தலானதல்ல

## பிரதி அயலுறவு அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 8
ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பயணமானது இலங்கையின் இறையாண்மைக்கோ அல்லது சுயாதீனத் தன்மைக்கோ அச்சுறுத்தலானது இல்லை என்று பிரதி அயலுறவுத்துறைஅமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இலங்கைப் பயணம் தொடர்பாக மகிந்த அணியினர் கொண்டு வந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச் செயலரின் இலங்கைப் பயணத்தை அரசியல் நோக்கத்துடன் சிலர் விமர்சிக்கின்றனர். போலிக் கருத்துகள் வெளியிடப்படுகின்றன. அவரது பயணமானது நாட்டுக்கு நன்மையான விதத்தில் அமைந்தது. இலங்கையின் புகழ் பன்னாட்டுச் சமூகத்துக்குச் சென்றது. அரசின் செயற்பாடுகளை அவர் பாராட்டினார். நல்லிணக்க முயற்சி, காணாமற்போனோர் பணியகம் பற்றி அவருக்கு விளக்கமளிக்கப்பட்டது–என்றார்.

விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பான் கீ – மூன் இலங்கையில் மனிதப் படுகொலைகள் இடம்பெற்றது என்ற கருத்தை முன்வைத்திருந்தார். இந்தக் கருத்தை நாம் நிராகரிக்கின்றோம். அரசும் இந்தக் கருத்தை உடனடியாக நிராகரிக்கவேண்டும். இது தொடர்பில் பதில் வழங்கவேண்டும்.

ருவெண்டா, பொஸ்னியா நாடுகளில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் போன்றது என்று ஐ.நா. செயலாளர் ஒப்பிட்டுப் பேசியுள்ளார். பான் கீ – மூன் தனது அதிகாரங்களை மீறி, இலங்கை அரசியல்–ஜனநாயகம் என்பவற்றிலும் தலையிடுகின்றார்–என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஐ.நா. பொதுச் செயலாளர் கலந்துகொண்டு குறித்த கருத்தை வெளியிட்டிருந்த நிகழ்வில், நானும் கலந்து கொண்டிருந்தேன். அவர் நீங்கள் கூறுவது போன்று எதனையும் தெரிவிக்கவில்லை. ருவெண்டா, பொஸ்னியா போன்ற நாடுகளில் நடைபெற்ற இனப்படுகொலைகளைப் போன்று இலங்கையில் எதுவும் நடக்கவில்லை என்றே அவர் குறிப்பிட்டிருந்தார். இதனைத் திரிவுபடுத்தி அரசியல் இலாபம் அடைய முற்படாதீர்கள்– என்றார்.

ஐ.நா. சபையானது அமெரிக்காவின் கைப்பாவையாகச் செயற்படுகின்றது. அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது– என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

இலங்கையில் போர் உச்சக் கட்டத்தில் இடம்பெற்றபோது, ஐ.நா. என்ன செய்தது? அப்போது ஐ.நா. தயாரித்த அறிக்கைகள் என்ன என்பது தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ – மூன் உண்மைகளை வெளியிடவேண்டும்.

இலங்கையில் வடக்கிலிருந்து படைகள் வெளியேற்றப்படவேண்டும் என்றும், காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்றும்– பான் கீ–மூன் எமது பாதுகாப்பு விடயங்களில் தலையிட்டுள்ளார். இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அவர் எல்லை மீறிச் செயற்படுகின்றார். அவரது கருத்துக்கள் பக்கச்சார்பானதாக அமைந்துள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பேச்சாளர் போன்றே தனது கருத்துக்களை வெளியிடுகின்றார். இன்று அவர் புலம்பெயர் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களின் யோசனைகளுக்கு அமைவாகவே செயற்படுகின்றார் – என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல. (த-5)

---

## மலேசியத் தூதுவர் மீது தாக்குதல் கைதான ஐவருக்கும் விளக்கமறியல்

கோலாலம்பூர், செப். 8
மலேசியாவுக்கான இலங்கை தூதுவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம் பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் நேற்று புதன் கிழமை வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐவரிடமும் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மலேசியாவின் கோலாலம்பூர் பன்னாட்டு வானூர்த்தி தளத்தில் மலேசியாவுக்கான இலங்கை தூதுவர் இப்ராஹிம் அன்சார் மீது, சில நபர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான தூதுவர் தலை யில் பலத்த காயமடைந்த நிலையில் கோலாலம்பூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (வ-5)

## பொட்டம்மான் கொல்லப்பட்டார்

### கமால் குணரத்ன உறுதி

கொழும்பு, செப். 8
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்படுவதற்கு முதல் நாள், அந்த அமைப்பின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டம்மான் கொல்லப்பட்டார்.

இவ்வாறு மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார். மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதிய 'நந்திக் கடலுக்கான பாதை' என்னும் நூல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இந்த நூல் தொடர்பில் கொழும்பு ஊடகத்துக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி காலை 9.30 மணியளவில் தொடங்கி 45 நிமிடங்கள் நீடித்த சண்டையில்தான் பிரபாகரன் 4 ஆவது விஜயபாகு படைப் பிரிவினால் கொல்லப்பட்டார். நந்திக் கடலில், 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி பிரபாகரன் கொல்லப்படுவதற்கு முதல் நாள், பொட்டம்மான் கொல்லப்பட்டார். இதனை நான் நிச்சயமாகக் கூறுகிறேன். அவர் போன்ற ஒருவர் உயிர் தப்பி வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்தால் நிச்சயம் வெளியே வந்திருப்பார். பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனி, கெமுனுவோச் படைப் பிரிவுடனான சண்டையில், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி கொல்லப்பட்டார். ஆனால், பிரபாகரனின் இரண்டாவது மகன் பாலச்சந்திரன் என்னவானார் என்பது எனக்குத் தெரியாது–என்றார்.

மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தலைமையிலான 53 ஆவது டிவிசனிடம் சரணடைந்த நிலையிலேயே பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டார் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (த-5)



தெல்லிப்பழை துர்க்கை அம்மன்
ஏழாம் திருவிழா

### தன்பாட்டுக்கு வளருமடி

அம்பாளுக்குக் குறையொன்று மில்லையடி
அன்னையின் ஆணைப்படி நடக்குதடி,
தன் பாட்டுக்கு இவ்வாலயம் வளருமடி
தங்கம்மாவின் பெயரொன்றே போதுமடி,
எம்பாட்டுக்கு என்னதான் செய்தாலுமடி
எல்லைமீறினால் அம்பாள் தடுப்பாளடி,
நம்பாட்டுக்குத் தடையேதும் உள்ளதோடி
நம்மைத் திருத்துவதே துர்க்கையின் வரமடி

ஜெ.எல்.சிவஞானராஜா

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (08.09.2016)
வியாழக்கிழமை
ஏழாம் திருவிழா



ஓம் சக்தி !
வெற்றித்திருமகளே துர்க்கையம்மா
வெற்றித்திரிசூலம் கொண்ட தேவி நீயம்மா
அற்புத நல் சக்தி நீயே எங்கள் துர்க்கையே
அருளமுதே ஆடி வலம் வருவாயம்மா

ஓம் என்ற வடிவினிலே உன்னலங்காரம்
உச்சிமிகு குளிர்ந்திடவே கண்கள் பருகிவிடும்
எம் துயரம் ஓடிடவே ஆடிவருவாய்
எம் தாயே உந்தனருள் காட்டி வருவாய்

அனுசரணை: திரு. வ. தம்பிராசா
ஏழாம் திருவிழா மாலை உபயகாரர்
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.



செல்வச் சந்நிதியான் ஆலய எட்டாம் திருவிழா

### ஞானத்தின் திருவுருவே....

பிரணவ நாதத்தின் கருவுருவே....
கணநாதத்தின் உடனுறை சோதர வேலழகனே...
செல்வச் சீர் பேறுடை மால் மருகனே....
உன் வீதி நடந்து ...
கடல் அலை அமிழ்ந்து...
உன்பதம் போற்றுகிறோம்...
அமைதியின் நல்வரம் அருளிடு பன்னிரண்டு கண்ணுடை
ஆறுமுகத் தேவே.....!!

- அளவையூர் தமிழ்நம்பி -



செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (08.09.2016) வியாழக்கிழமை
எட்டாம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை
நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை பகல்,
இரவு என வழங்கிவருகிறது



BUS BOOKING
வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
உடனடித் தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| கொழும்பு | + 94 77 544 9251 |
| யாழ்ப்பாணம் | + 94 77 544 8503 |
| வல்வெட்டித்துறை | + 94 21 226 1977 |
| | + 94 77 544 7359 |
| நெல்லியடி | + 9477 285 0285 |
| பருத்தித்துறை | + 9477 555 2973 |

| | காலை | இரவு |
|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 am | 7.00pm |
| யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00pm |
| வெள்ளவத்தை | 7.30 am | 7.30pm |
| கொட்டஹேனா | 8.30 am | 8.30pm |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## லிங்கன் கூறிய நல்லாட்சியை மலர வைக்க புதிய அரசுக்கு மனமுண்டா...?

அமெரிக்காவின் கௌரவம் மிக்க மற்றும் பிரபல்யமான அதிபர்களில் ஒருவராக விளங்கிய ஆபிரகாம் லிங்கன் அந்த நாட்டில் இடம் பெற்று வந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த போது கெட்டிஸ் பேர்க் என்ற இடத்தில் நிகழ்த்திய உரை, அமெரிக்க நாட்டில் மட்டுமன்றி மக்களால் உருவாக்கப்படும் அரசுகள் எந்த நாட் டில் இருந்தாலும், அவைகளால் கடைப் பிடிக்கப்பட வேண்டிய அல்லது அனுசரிக்கப்பட வேண்டிய பண்புகளை வெளிப்படுத்துவதாய் இருந்துள்ளது என்பது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

குறிப்பாக மக்களால் மக்களுக்காக உருவாக்கப்படும் மக்கள் அரசு என்ற வியாக்கியானம் பிரசித்தமானது. அமெரிக்க அரசின் கோட்பாடாகவும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உலகின் பல நாடுகளில் இந்த வாக்கியம், அந்தந்த நாட்டுத் தலைவர்களால் பயன்படுத்தப்படுவதையும் பார்க்கின்றோம்.

ஆயினும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மக்கள் ஆதரவில் ஆட்சிகளை அமைத்துக் கொண்டுள்ள நாடுகளில் எத்தனை நாடுகள் இந்தக் கோட்பாட்டை கடைப்பிடிக்கின்றன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அந்த வரிசையில் நமது இலங்கை நாடு எந்த இடத்தில் இருக்கிறது என்பதற்கு ஆய்வாளர்கள் தான் பதில் சொல்ல வேண்டும். இருந்தாலும் இன்றுவரை பதவிகளில் இருந்துள்ள அரசுகளின் செயற்பாடுகளை எழுந்தமானமாக பார்த்துக் கொண்டுவரும் சாதாரண அவதானிகள் கூட, இதுவரை காலமும் அவ்வாறான ஒரு கொள்கை இந்த நாட்டு அரசுகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூற முடியாது

இந்த நாட்டில் ஆட்சி முறையானது, பெரும் பான்மைச் சமூகத்தை மையமாகக் கொண்டே செயற்படுகின்றது. அரசியல் அமைப்பும் அந்த வகையிலேயே அமைந்துள்ளது. எனவே தான் இன்னமும் சமூகங்களுக்கிடையில் நல்லுறவு ஏற் படவில்லை. ஆட்சியாளர்கள் ஒருதலைப்பட்சமாக செயற்பட்டு வந்தமையால், சமூகங்கள் ஒன்றுசேர முடியவில்லை. சிறுபான்மையினர் மத்தியில் அதிருப்தியும் அங்கலாய்ப்பும் மேலோங்கின.

இவைகள் யாவும் கடந்த கால அனுபவங்கள். அதற்காக நாடும் மக்களும் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு விலை கொடுத்துவிட்டார்கள்.

இப்போது பதவியில் அமர்ந்துள்ள அரசும் அதன் தலைவர்கள்-ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட்டோர், புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்க முனைந்து நிற்பதற்கான அறிகுறிகள் தென்படுவதை மறுக்க இயலாது. ஆட்சி அதிகாரத்தில் சிறுபான்மையினருக்கான பங்கை வழங்குவதற்கு அவர்கள் எடுத்துவரும் முயற்சிகளைத் துண்டித்துவிடச் சில சக்திகள் முயன்று வருகின்றன.

அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் கூறியது போன்றதொரு நல்லாட்சி உருவாக வேண்டுமானால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. கட்சியும், இணைந்து உருவாக்க விருக்கும் புதிய அரசமைப்பு நாட்டின் சகல தரப்பு மக்களையும் ஒன்றாகவும், இணக்கபூர்வமாகவும் புரிந்துணர்வோடும் வாழ வழி செய்ய வேண்டும்.

சிங்கள மக்கள் தமது உரிமைகளைப் பேணிக் கொள்வது போன்று தமிழ், முஸ்லிம் மக்களும் தங்களது தனித்துவமான உரிமைகளைப் பேணிக் கொண்டு சமாதானமாகவும், சமத்துவமாகவும் வாழ விரும்புகிறார்கள். அதற்கான அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான சூழ்நிலையை எவரும் குலைத்துவிட அனுமதிக்கலாகாது.

# இராஜதந்திர பாதை திசை திருப்பப்படல் ஆகாது

எம்.ஐ.முபாறக்

> உலகத்து அனைத்துத் தமிழர்களும் மகிந்த ஒருவரையே தமிழின அழிப்பாளராகப் பார்க்கின்றனர். இதனால் மகிந்த சர்வதேச நாடுகளுக்குச் செல்கின்றபோதெல்லாம், அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி அவர் குற்றவாளி என்றும், அவர் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றும்–தமிழர்கள் உலக அரங்கில் பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களுள் அதிகமானவர்கள் போர் என்ற போர்வைக்குள் ஒளிந்துகொண்டு தமிழர்களுக்குக் கொடுமை இழைத்தவர்களாகவே காணப்படுகின்றனர். போரை முடிவுக்குக் கொண்டு வருகிறோம் என்ற பெயரில்–புலிகளை அழிக்கின்றோம் என்ற போர்வையில் அப்பாவித் தமிழர்கள் கடத்தப்பட்டமையும்–காணாமல் ஆக்கப்பட்டமையும்– கொல்லப்பட்டமையும்-இடம்பெயரச் செய்யப்பட்டமையும் நீண்ட வரலாறாக ஆகியுள்ளது.

இந்தக் கொடுமைகள் அத்தனைக்கும் நீதி தேடி இன்று தமிழர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றனர். இந்தக் குற்றங்கள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டு நீதி கிட்டும் கட்டத்தை எட்டியுள்ளது. பிரச்சினைகள் சர்வதேசமயமாக்கப் பட்டமையும், இராஜதந்திர நகர்வுகளுமே இந்தச் சாதகத் தன்மைக்குக் காரணம்.

இந்த நகர்வுகளுக்கு மாறாக, பிழையான முறைமையைத் தெரிவு செய்தால், எல்லாமே குழம்பிப் போய்விடும். மலேசியாவில்கடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றச் சம்பவமானது சரியான நகர்வுக்குள் பிழையான முறைமையைப் புகுத்திவிடுமோ என்ற அச்சத்தைக் கிளப்பியுள்ளது.

மகிந்த ராஜபக்சவைப் பழி வாங்குவதாக நினைத்துக் கொண்டு இலங்கைக்கான மலேசியத் தூதுவர்மீது மலேசியத் தமிழர்கள் நடத்திய தாக்குதலானது, இலங்கைத் தமிழருக்கான தீர்வை நோக்கிய இராஜதந்திர நகர்வில் ஒரு கீறலை ஏற்படுத்தியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

புலிகளுடனான போரில் ஈடுபட்ட இலங்கையின் ஆட்சியாளர்கள் அத்தனை பேரும், ஏதோவொரு வகையில் தமிழருக்குக் கொடுமை இழைத்தவர்களாகவே பார்க்கப்படுகின்றனர். அவர்களின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட போரின்போது அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்படாமல் இருந்ததில்லை.

இந்த வரிசையில் மகிந்த தலைமையிலான இறுதிப் போரே மிகக் கொடூரமான போராக–40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்றொழித்த போராகப் பார்க்கப்படுகின்றது. இதனால் தமிழர்கள், ஏனைய ஆட்சியாளர்களை விடவும் மகிந்தவையே தமிழினத்தின் அழிப்பாளராகப் பார்க்கின்றனர்.

தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி தேடித் தமிழர்கள் இன்று ஓடுகிறார்கள் என்றால், அது மகிந்தவின் ஆட்சியில் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதியைப் பெறுவதற்குத் தான். உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களின் மனங்களில் மகிந்த மாத்திரமே தமிழின அழிப்பாளராகப் பதியப்பட்டுள்ளார்.

அவருடன் இணைந்து போர் செய்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைக் கூடத் தமிழர்கள் மறந்துவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அவருக்கு எதிராக எவரும் பேசுவதில்லை. மகிந்தவுக்கு முன் இருந்த ஆட்சியாளர்கள் இழைத்த கொடுமைகள் பற்றிக்கூட எவரும் பேசுவதில்லை. உலகத்து அனைத்துத் தமிழர்களும் மகிந்த ஒருவரையே தமிழின அழிப்பாளராகப் பார்க்கின்றனர். இதனால் மகிந்த சர்வதேச நாடுகளுக்குச் செல்கின்றபோதெல்லாம், அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி, அவர் குற்றவாளி என்றும், அவர் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றும்–தமிழர்கள் உலக அரங்கில் பதிவு செய்து வருகின்றனர்.

அந்த வரிசையில்தான் மகிந்தவின் மலேசியப் பயணத்தின் போது அவருக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சம்பவமும் அமைந்துள்ளது. இதற்கு முன்பு தமிழர்கள் சர்வதேச நாடுகளில் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை விடவும், இந்தச் சம்பவம் மிக மோசமான சம்பவமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கைக்கான மலேசியத் தூதுவர் தாக்கப்பட்டமையே இதற்கு காரணம்.

மகிந்தவுக்கு உதவினார் என்ற சந்தேகத்தின்பேரிலேயே அவர் தாக்கப்பட்டார். அவர் உதவி செய்தாலும், அவரைத் தண்டிக்க முடியாது. அவ்வாறு உதவுவது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகிந்த தலைமையிலான இறுதிப் போரே மிகக் கொடூரமான போராக-40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்றொழித்த போராகப் பார்க்கப்படுகின்றது. இதனால் தமிழர்கள் ஏனைய ஆட்சியாளர்களை விடவும், மகிந்தவையே தமிழினத்தின் அழிப்பாளராகப் பார்க்கின்றனர். தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி தேடி தமிழர்கள் இன்று ஓடுகிறார்கள் என்றால், அது மகிந்தவின் ஆட்சியில் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதியைப் பெறுவதற்குத்தான். உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களின் மனங்களில் மகிந்த மாத்திரமே தமிழின அழிப்பாளராகப் பதியப்பட்டுள்ளார்.

அவரது கடமை.அதற்காக அவரை மகிந்தவின் ஆதரவாளர் என்றோ, தமிழினத்தின் அழிப்பாளர் என்றோ சொல்லமுடியாது. இந்தச் சம்பவம் மகிந்தவைத் தண்டிக்க எண்ணும் தமிழர்களின் இராஜதந்திர நகர்வில் வீழ்ந்த ஒரு கீறலாகவுமே பார்க்கப்படுகின்றது.

மகிந்தவின் ஊழல்,மோசடிகள் அம்பலப்படுத்தப்பட்டு, அவருக்கு இருக்கின்ற மக்கள் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வாறானதொரு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றமையானது, அவருக்கான மக்கள் செல்வாக்கை அதிகரிக்கச் செய்துவிடும். தமது செல்வாக்கைத் தூக்கி நிமிர்த்துவதற்கு, ஏதாவது துருப்புச் சீட்டொன்று கிடைக்காதா என்று ஏங்கி இருந்த மகிந்தவுக்கு இந்தச் சம்பவம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

மகிந்தவைத் தண்டிக்கும் விதம் இதுவல்ல; இது தண்டனையல்ல. சரிந்துபோன-அவரது செல்வாக்கைத் தூக்கி நிமிர்த்தும் ஒரு செயற்பாடாகும். சில தண்டனைகள் தண்டிக்கப்படுபவர்களுக்கு சாதகமாக அமைந்து விடுவதுண்டு. அவ்வாறானதொரு சம்பவம்தான் இந்த மலேசியச் சம்பவம்.

அரசியலில் மகிந்த மீண்டும் தலை தூக்காமல் இருக்க வைப்பதும், ஆட்சியைக் கைப்பற்ற முடியாமல் செய்வதும்தான் அவருக்குக் கொடுக்கப்படும் சரியான-நிலையான தண்டனையாகும்.அந்தத் தண்டனையை வழங்குவதற்குத் தேவை இராஜதந்திரம். அந்த இராஜதந்திர நகர்வுடன் தமிழர் தரப்பு இப்போது போய்க் கொண்டிருக்கின்றது.

ஆனால்,இந்தியா மற்றும் மலேசியா நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் சில நேரங்களில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவு வழங்குகின்றோம் என்ற பெயரில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி விடுகின்றனர். இது முட்டாள்தனமான செயற்பாடாகும். இது இலங்கைத் தமிழருக்கு உதவி செய்வது அல்ல,உபத்திரம் செய்வதாகும். இந்தத் தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டவர்கள் புலிகள் என்றுதான் இன்று சகல ஊடகங்களும் பரப்புரை செய்கின்றன.

அரசியல் வேறுபாடுகளை மறந்து அனைவரும் இந்தத் தாக்குதலைக் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர்.தூதுவர் மீதான தாக்குதலானது மகிந்த மீதான தாக்குதலாகவே பரப்புரை செய்யப்படுகின்றது.மகிந்தவுக்கு எதிரான மைத்திரி-ரணில் அரசுக்குக்கூட இதைக் கண்டிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலைமை தமிழரின் போராட்டத்துக்கு ஆரோக்கியமானதல்ல. வெளிநாட்டுத் தமிழர்கள் இலங்கையின் அரசியல் போக்கைச் சற்று அவதானிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் தீர்வாக எதை விரும்புகிறார்கள்; அவர்கள் விரும்புவதை அடைவதற்கு என்ன வழி என்று யோசிக்க வேண்டும்.இதற்குச் சரியான இராஜதந்திரம் தேவைப்படுகின்றது. மலேசியத் தூதுவரைத் தாக்கியவர்கள் புலிகள் என்று சிங்கள ஊடகங்கள் பரப்புரை செய்வதால் மீண்டும் புலி வந்துவிட்டது; மகிந்தவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்றொரு மாயை இப்போது தெற்கில் தோற்றுவிக்கப்படுகின்றது.

மகிந்தவை முற்றாக வெறுக்கின்ற-இனி அவர் ஆட்சிக்கே வரக்கூடாது என்று விரும்புகின்ற சிங்களவர்கள்கூட, புலிகளால் மகிந்தவுக்கு ஆபத்து இருக்கின்றது என்று தெரிந்தால் மகிந்தவின் ஆதரவாளர்களாக மாறிவிடுவர்.மகிந்த எப்படிப்பட்ட மோசமான அரசியல்வாதியாக இருந்தாலும் அவர் புலிகளால் தண்டிக்கப்படுவதைச் சிங்களவர்கள் விரும்பமாட்டார்கள் என்ற யதார்த்தத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## சிந்தித்துச் செயற்படுவார்களா?

கடந்த 02.09.2016 திகதியன்று யாழ்.பொது நூலகத்தின் முன்னால் ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூனினது யாழ்ப்பாணத்துக்கான பயணத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் நிலவிடுவிப்பு போன்ற விடயங்களில் பாதிக்கப்பட்ட மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் பல பாதிக்கப்பட்ட பொதுமக்களும், அரசியல் கட்சி சார்ந்தவர்களும் பங்கு பற்றி இருந்தனர். இந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள் அங்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்து உரையாடினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சில அரசியல் கட்சியினர் தமது வங்குரோத்துத்தனமான அரசியல் செயற்பாடுகள் என்ற வகையில் கேவல மான வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் மதிப்பற்ற விதத்தில் நடந்து கொண்டனர். இதனைச் சிங்களச் சகோதரர்கள் உட்படப் பலர் பார்த்துச் சிரித்ததைக் காணமுடிந்தது. ஜனநாயக ரீதியாக எதிர்ப்பு நடவடிக்கை என்பது இதற்கு முற்றிலும் வித்தியாசமானது. கேவலமான விதத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்தியவிதம், அவர்களது அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டியது.

போர்க்காலச் சூழலில் காணாமல் ஆக்கப்பட்ட ஒரு இளைஞனது தாயைப் பயன்படுத்தி ஒலிபெருக்கி மூலம் கேவலமாகப் பேச வைத்தனர். இது ஜனநாயகப் பண்பாடு அல்ல. எனவே இனிமேலாவது, தமது அரசியலை நடத்துவதற்காக பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரோடு விளையாட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன். எமது தலைமைகள் இது குறித்துச் சிந்தித்துச் செயற்படுவது நாகரிகமானது.

அல்வை சி.தர்மநாதன்.
கிளிநொச்சி.

## மன்னாரிலிருந்து நானாட்டான் ஊடாக முருங்கன் வரையான மேலதிக பேருந்துச் சேவையொன்று மிக அவசியம்

நானாட்டான் பிரதேச செயலாளர் அலுவலகம், பிரதேசசபை என்பவை நானாட்டான் எனுமிடத்தில் செயற்பட்டு வருகின்றன. மேற்குறித்த அலுவலகங்களில் பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றச் சென்றுவர நாளாந்தம் மன்னாரில் இருந்து நானாட்டான் வழியாக முருங்கன் வரை நடத்தப்படும் இ.போ.ச. பேருந்துச் சேவையை மட்டுமே நம்பியுள்ளனர்.

முருங்கன் பகுதியிலுள்ள இசைமாலைதாழ்வு தொடக்கம் வாழ்க்கைபெற்றான்கண்டல் வரையிலுமுள்ள சுமார் 11 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் பொது மக்கள், தினசரி காலையில் ஒரு தடவை மட்டும் நடத்தப்படும் பேருந்து சேவையினால் பலவிதமான அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். காலையில் 9.30 மணிக்கு முருங்கன் பேருந்து நிலையத்துக்கு வரும் பேருந்து, மு.ப. 10.மணிக்கு நானாட்டான் ஊடாக மன்னாருக்குத் திரும்பிச் செல்கிறது. தத்தம் அலுவல்கள் காரணமாக நானாட்டான் பிரதேச செயலகம் செல்லும் மக்கள், தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு திரும்பவும் முருங்கன் பகுதிக்கு, கால் நடையாகவோ, முச்சக்கர வண்டிக்கு அதிக பணம் செலுத்தியோ தான் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் வருமானத்தை மட்டும் எதிர்பாராமல், மக்கள் வசதியையும் நலனையும் கருத்தில் கொண்டு, சேவையில் ஈடுபடுத்தப்படும் குறித்த வழித்தடப் பேருந்தை, மேலதிக சேவையொன்றாக நண்பகல் திரும்பவும் மன் னாரிலிருந்து முருங்கன் வரை சென்று திரும்ப வழிவகை செய்து மக்களின் அசௌகரியங்களை நீக்க ஆவன செய்து உதவுமாறு, பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

பரதன், முருங்கன்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் பதற்றம்

இந்திய இராணுவம் பயணித்த வாகனமொன்றில் நேற்று அதிகாலை காஷ்மீர் பகுதியில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதை யடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.
காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டம் ஹன்ட்வாரா நகர் அருகே பெரிய இந்திய இராணுவத்தின் முகாம் உள்ளது. இந்த முகாமுக்குள் வந்த இராணுவ வாகனத்தை இலக்கு வைத்து நேற்றுக் காலை ஆயுததாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அறியவருகிறது. இராணுவத்தின் பதில்தாக்குத லுக்கு முன்னர் ஆயுததாரிகள் சென்றுவிட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இதனையடுத்து காஷ்மீரில் பதற்ற நிலை ஏற்பட்டது. ஊரடங்குச் சட்டம் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. ஆயினும் நான்கு பேர் குழுவாக ஓரிடத்தில் நின்று உரையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டன. (ம-ரி4)

# 240 நாள்களில் 500 கொலை; சிக்காக்கோவின் இருள் முகம்

வொஷிங்டன், செப். 8
அமெரிக்காவின் சிக்காகோ நகரில் கடந்த 8 மாதங்களில் 500 கொலைகள் இடம்பெற்றுள்ளதாக குறித்த நகரின் ஆய்வறிக்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அமெரிக்காவின் பிரதான நகர்களில் சிக்காக்கோவும் ஒன்று. ஆனால் அந்த நாட்டின் ஏனைய பிரதான நகர்களை விட சிக்காக்கோவில் ஆயுத காலாசாரமும், கொலைகளும் அதிகளவில் உள்ளன. 2014 ஆம் ஆண்டில் இருந்து கொலைகளின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. 2015 ஆம் ஆண்டு 480 கொலைகள் கணக்கிடப்பட்டன. நடப்பு வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 500 கொலைகள் அரங்கேறியுள்ளன. ஆயுத கலாசாரத்தை இல்லாது செய்யுமாறு வலியுறுத்தி சிக்காக்கோவின் பல பாகங்களிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ம-ரி4)





# தமிழ்நாட்டுக் கர்நாடகாவில்

தமிழ்நாட்டுக்கு காவிரி நதியில் இருந்து தண்ணீர் வழங்கியமைக்காக கர்நாடகாவில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.
தமிழ் நாட்டின் விவசாய மாவட்டங்களில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா பயிரிடப்பட்டுள்ளது. காவிரி நடுவர் மன்றம் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்கக்கூடாது என்று தீர்ப்பிட்டமைக்கு இணங்க கர்நாடகா அரசும் தண்ணீர் வழங்கவில்லை. இதனால் நெற்செய்கை பாதிக்கப்பட்டது. இதனையடுத்து இந்த விவகாரம் இந்திய உச்ச நீதி





அமெரிக்காவின் நெவாடா பாலைவனத்தில் வருடாவருடம் 'நெருப்பு விழா' எனும் தொனிப்பொருளில் பிரத்தியேகமாக பலவிதமான வாகனங்கள் உருவாக்கப்பட்டு கொண்டாட்டங்கள் நடைபெறும். நடப்பு வருடத்துக்கான கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. நெருப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட 650 வாகனங்கள் இதில் கலந்துகொண்டன. (ம-ரி4)

# முதலில் முகத்ன நேற்றுமுன்தினப்

பாரிஸ், செப். 8
உலகில் முதல் முறையாக முகமாற்று அறுவைச் சிகிச்சை செய்த நபர் நேற்றுமுன்தினம் சாவடைந்தார்.
பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இசபேல் டினோறி என்ற பெண் கடந்த 2005 ஆம் ஆண்டின் முற்பகுதியில் விபத்து ஒன்றில் சிக்குண்டு முகம் சிதைவடைந்தார். தனது முகத்தை மாற்ற அவர் ஏற்றுக்கொண்டதையடுத்து வடபிரான்ஸில் மூளைச் சாவடைந்த பெண்ணின் முகம் அவரு ஆண்டு பிற்பகுதியில் முகமாற் பெற்றது. இதுவே உலகின் முத சிகிச்சையாகும். சிகிச்சையின் வேறு முகக்கலங்களை ஏற்று வழங்கப்பட்டது. இதனால் அவர ததாக தெரிவிக்கப்பட்டது. இந்த இசபேல் அடிக்கடி நோய்த் தாக் வருடம் ஏப்ரல் மாதம் புற்றுநோய 49 ஆவது வயதில் அவர் நே இசபேலுக்கு அதிகளவான நோ முகமாற்று அறுவைச் சிகிச்சை கருத்துக்கள் வெளியாகியுள்ள செய்த மருத்துவர் குறித்த அறு குறிப்பிட்டார்.




# அமெ. - பிலிப்பைன்ஸ் உறவை சிந்திக்

## கிலாரி வலியுறுத்தல்

வொஷிங்டன், செப். 8
அமெரிக்கா – பிலிப்பைன்ஸ் ஒப்பந்தங்களை சிறந்த முறையில் பேணுவது, நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை சிறந்த முறையில் கொண்டு செல்வது தொடர்பாகவும் டுடேர்தே சிந்திக்க வேண்டும் என்று நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர்களில் ஒருவரான கிலாரி கிளிங்ரன் தெரிவித்தார்.
பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியாக சில வாரங்களுக்கு முன்னர் பதவியேற்ற டுடேர்தே, போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். பதவியேற்ற 24 மணி நேரத்துக்குள் சட்ட நடவடிக்கைகள் இன்றி 110 போதைப்பொருள் சூத்திரதாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மனித உரிமைகள் அமைப்புக்கள் கண்டனங்களைத் தெரிவித்தன. ஆனால் குறித்த கண்டனங்களுக்கு டுடேர்தே செவிசாய்க்கவில்லை. போதைப்பொருள் ஊடுருவலை பிலிப்பைன்ஸுக்குள் கட்டுப்படுத்துவவே தனது பிரதான இலக்கு எனத் தெரிவித்தே டுடேர்தே குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். பிலிப்பைன்ஸ் மக்கள் பலரும் அவருக்கு ஆதரவாக உள்ளனர். ஆனால் சட்டநடவடிக்கைகளுக்கு எதிரான கொலைகள் தொடர்பாக, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தேயை சந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# க்கு அலைபுரண்டது காவிரி;
# வில் வெடித்தன கலவரங்கள்

ணீர்
யாக
தால்
த்தட்ட
ரிடப்
டுக்கு
மக்கு
ழங்க
ட்டது.
ச நீதி

மன்றத்திடம் எடுத்துச் செல்லப்பட்டது. வழக்கை விசாரித்த மன்று வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் 10 நாள்கள் தண்ணீர் வழங்குமாறு உத்தர விட்டது. முதல்நாளான நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.
தமிழகத்துக்கு தண்ணீர் வழங்கியமையடுத்து கர்நாடகாவில் போராட்டங்கள் வெடித்தன.
அரசியல் அமைப்புக்கள் பலவும் தொடர்ச்சியாக பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.
கர்நாடக விவசாயிகள் வீதிகளில் சமைத்துச் சாப் பிட்டு, தமது பங்கிற்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடு கின்ற னர். தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகாவுக்கு வரும் பேருந்துக்கள் கர்நர்காவின் எல்லையில் வைத்து தாக்கப்படுவதுடன், தமிழ் நாட்டை கொச்சைப்படுத் தும் வாசகங்களும் எழுதப்படுகின்றன.
கர்நாடகாவில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதி களான சிவாஜி நகர், விவேக் நகர், அல்சூர், கிழக்கு பெங்களூர் முழுவதும் பாதுகாப்பு முன்னேற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
மாண்டியா, மைசூர் போன்ற பெரிய திரையரங்கு களில் தமிழ்ப்படங்கள் திரையிடல் நிறுத்தப்பட் டன. (ம-ரி4)

# லாவோஸுக்கு அமெரிக்க அரசு 1300 கோடிகளை வழங்குகிறது
## வியட்நாம் மோதலின் பரிகாரம்

பீஜிங், செப். 8
அமெரிக்கா - வியட்நாம் மோத லில் பாதிக்கப்பட்ட லாவோஸ் நாட்டுக்கு ஆயிரத்து 313 கோடியை நிதியுதவி செய்வதாக அறிவித்தார் அமெரிக்க ஜனாதி பதி பராக் ஒபாமா.
1963 ஆம் ஆண்டு தொடக்கம் 1974 ஆம் ஆண்டு வரை அமெ ரிக்காவுக்கும் வியட்நாமுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.
செயலிழக்கச் செய்யவும், லாவோஸின் பொருளாதாரத் தையும், அமெரிக்கத் தாக்கு தலால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தையும் சீர் செய் யும் விதமாகவே ஒபாமா இந்த அறிவிப்பை விடுத்தார். சீனாவில் நடைபெற்றுவரும் ஜி-20 மாநாட் டில் வைத்தே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அமெரிக்கா-வியட்நாம் மோத




இந்த மோதலில் 2 மில்லியன் தொன் அளவுக்குக் குண்டுகள் வீசப்பட்டன. போர் உச்சத்தைத் தொட்டிருந்த நிலையில் 8 நிமிடங் களுக்கு ஒரு தடவை குண்டுகள் வீசப்பட்டதாக அறியவருகிறது. அமெரிக்கப் படைகளின் இவ் வாறான கண்மூடித்தனமான தாக்குதலில் வியட்நாமின் அயல் நாடான லாவோஸும் அதிகம் பாதிக் கப்பட்டது. இதற்கு உலகெங்கிலும் எதிர்ப்புக்கள் குவிந்திருந்தன. லா வோஸில் அமெரிக்கப் படைகள் வீசிய குண்டுகளில் பல இன்னும் உயிர்ப்புடன் இருக்கின்றன. இந்த நிலையில் குறித்த குண்டுகளைச் லில் சம்பவத்துடன் நேரடித் தொடர்பு படாமலிருந்த வியட் நாமின் அயல் நாடான லாவோஸ் மீது குண்டுகள் பொழியப்பட்டமை வேதனை தருகிறது. போர் தந்த ஓர் கறுப்புப் பதிவாக இது அமைந் தது. ஆயிரத்து 313 கோடிகளை லாவோஸின் பொருளாதார அபி விருத்திக் காகக் கொடுக்கின்றோம். அடுத்த மூன்று வருடங்களில் அமெரிக்கத் தாக்குதலின் எச்சங் கள் லாவோஸிலிருந்து அகற்றப் பட்டு சிறந்த முறையில் பொருளா தாரம் கட்டியெழுப்பப்படும் என ஒபாமா மேலும் தெரிவித்தார். (ம-ரி4)

# த்தை மாற்றியவர்
# னம் சாவடைந்தார்


இசபேல்

அவருக்கு வழங்கப்பட்டது. 2005 ஆம்
கமாற்று அறுவைச் சிகிச்சை நடை
முதலாவது முகமாற்று அறுவைச்
பின்போது டினோறியின் கலங்கள்,
ஏற்றுக்கொள்வதற்கான சிகிச்சை
அவரது நோயெதிர்ப்பு சக்தி குறைந்
இந்த அறுவைச் சிகிச்சைக்கு பின்னர்
தாக்கத்துக்கு உள்ளாகினார். இந்த
நோயும் அவரை ஆட்கொள்ள தனது
நேற்றுமுன்தினம் சாவடைந்தார்.
நோய்த் தொற்றுக்கள் ஏற்பட்டதால்
ச்சை தோல்வியில் முடிந்ததாக சில
ள்ள நிலையில் அறுவைச் சிகிச்சை
அறுவைச் சிகிச்சை வெற்றி எனக்
(ம-ரி4)


# கடற்கரை மீட்புப் பணிகளுக்காக ரோபோக்களை இறக்கியது துபாய்

கடற்கரை மீட்புப் பணிகளுக்காக ரோபோக்களை அறிமுகம் செய் தது வளைகுடா நாடுகளில் ஒன் றான துபாய்.
மஞ்சள், இளஞ்சிவப்பு நிறத்தில் வடி வமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோக் களை கடலில் சிக்கி தத்தளித்துக் கொண்டிருப்பவர்கள் இலகுவாக அடையாளம் காண முடியும். அதே போல் ரோபோக்களும் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பவர் களை அடையாளம் காண வல் லன. 11 கிலோ, 125 சென்ரி மீற்றர் நீளமுடைய இவை மனிதனை விட 12 மடங்கு வேகமாக நீந் தக்கூடியவை. தொடர்ந்து 130 கிலோ மீற்றர் தூரம் வரை பய ணிக்கக்கூடிய சக்தி வாய்ந்த மின்கலங்கள் ரோபோக்களில் பொருத்தப்பட்டுள்ளன. (ம-ரி4)



# எதிர்பார தங்க வேட்டை

வொஷிங்டன், செப். 8
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் தங்க சேகரிப்பாளர் ஒருவருக்கு 300 கிராம் நிறையுடைய தங்கக்கட்டி கிடைத்தது.
ஒஸ்கார் எபினோசா என்ற குறித்த நபர் வழமைபோன்று தங்கத் தேடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே குறித்த தங்கக் கட்டி கிடைத்தது. இலங்கை மதிப்பில் இது ஒரு கோடியே ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடையதென்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)



# க்க வேண்டும் டுடேர்தே



திக்க அமெரிக்க ஜனாதிபதி விரும்பம் தெரி வித்தார். ஆனால் இந்தச் சந்திப்பை ஏற்றுக் கொள்ளாத டுடேர்த்தே அமெரிக்காவுக்கு எதிராக முழங்கித் தள்ளினார். தவிர ஒபாம ாவை விபச்சாரியின் மகன், பெட்டை நாயின் மகன் என்றும் விளித்திருந்தார். இந்த நிலை யில் இந்தக் கருத்துக்களுக்கு கண்டனத்தை வெளியிட்ட கிலாரி, இரு நாடுகளுக்கும் இடை யிலான உறவு தொடர்பாக டுடேர்தே சிந்திக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.
அமெரிக்கா - பிலிப்பைன்ஸ் இடையே சில ஒப் பந்தங்கள் நடைமுறையில் உள்ளன. சில ஒப் பந்தங்கள் கைச்சாத்தாகவுள்ளன. இந்த நிலை யில் வார்த்தைகள் மரியாதையுடையவையாக இருக்கவேண்டும். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு ஆரோக்கியமான [illegible] வேண்டும். இந்த [illegible] ஜனாதிபதி டுடேர்தே சிந்திக்க வேண்டும் என கிலாரி மேலும் தெரிவித்தார். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர்

## சிம்மம்

செப்ரெம்பர் 1 முதல் 31 வரை

தான் எடுத்த முடிவை எந்தச் சூழ்நிலையிலும் மாற்றிக் கொள்ளாத தனது திறமையால் வாழ்க்கையில் பலவகை சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறியும் திறனுடைய சிம்ம ராசியினரே, இந்த காலகட்டத்தில் ராசிநாதன் சூரியன் பலம் பெற்றிருக்கிறார். எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள். சப்தம ஸ்தானத்தில் சஞ்சாரம் இருப்பதால், நட்பு வகையில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில் ஸ்தானத்தை சனி பார்க்க, தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் தன ஸ்தானத்தில் இருக்கிறார். தொழில், வியாபாரம் தொடர்பான விடயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்சினைகள் குறையும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சுவட்டுத் தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள் மிகவும் கவனமுடன் செயற்படுவது நல்லது. பணி நிமித்தமாக வெளியூர் பயணங்கள் செல்ல வேண்டி வரலாம். குடும்ப ஸ்தானத்தில் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி குரு இருந்து அருள் புரிகிறார்.

கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம். மன வலிமை அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். குடும்பத்தில் உங்களுக்கான வாக்குவன்மை அதிகரிக்கும். பெண்களுக்கு நன்மை தீமை பற்றிய கவலை இல்லாமல் எதையும் செய்ய முற்படுவீர்கள். கலைத் துறையினருக்கு சிறப்பான கால கட்டமாக இருக்கும்.

பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய ஓடர்கள் கிடைக்கும். முக்கிய நபர்களின் ஆதரவும் கிடைக்கப்பெறுவீர்கள். பணம் சம்பாதிக்கும் திறமை அதிகரிக்கும். கொடுத்த வேலையை திறமையுடன் செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். அரசியல் துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். நண்பர்களால் தேவையான உதவி கிடைக்கும். எந்தத் தடைகளையும் தாண்டி, எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். மனதில் மகிழ்ச்சி உண்டாகும். பதவிகள் சம்பந்தமான விடயங்களில் முன்னேற்றம் உண்டாகும். எதிர்ப் புகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும். உற்சாகமாக படிப்பீர்கள். சக மாண வர்களிடம் பழகும்போது கவனம் தேவை.

**பரிகாரம்:** ஸ்ரீருத்திரமூர்த்தியை ஞாயிற்றுக் கிழமைகளில் வழிபட எதிலும் வெற்றி கிடைக் கும். செயல்களில் வேகம் உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய்.




நிகழ்யா

# சாதகமும் மணப் பொருத்தமும்

இந்த உலகிலுள்ள அனைத்தும், இறைவனால் படைக்கப்பட்டவைதான். இறைவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கால எல்லையைக் கொடுத்து அதை அவர்களுடைய வாழ்வு காலம் என்று நிர்ணயம் செய்துள்ளார். மனிதன், விலங்கு, பறவை என உயிரினங்கள் பலவற்றை நாம் காணுகிறோம். மற்றைய உயிரினங்கள் தாம் வாழும் காலத்தையோ அல்லது பலனையோ பார்ப்பதில்லை. மகிழ்வுடன் இவ்வுலகில் வாழ்கின்றன. தம் வாழ்வு காலம் முடிந்ததும் மடிகின்றன. மனிதனுக்கும் அவ்வாறேதான் வாழ்வு காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், மனிதர்கள் அவர்களுடைய வாழ்வு காலத்தை சாதகத்தினூடாகக் கணிக்கிறார்கள். எதனைக் கணித்தாலும் வாழ்வு கால எல்லை மாறாது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

தமது மன நிறைவுக்காக அவற்றைக் கணித்து அதன்படி தான் தம் வாழ்வு நடைபெறுகிறது என்பது மக்களின் நம்பிக்கை. நம்பிக்கைதான் வாழ்க்கை. மக்களில் சிலர் தமது வாழ்வு காலத்தை சாதகத்தினூடாக நம்புகிறார்கள். ஆனால் பலர் இதனால் ஏமாந்துபோய் இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அண்மையிலே சாதகப் பலனின்படி நேர்த்தியை நிறைவேற்றுங்கள் என்று கூறியதால், அதற்காக பல ஆயிரங்கள் செலவு செய்த ஒருவர், அதன் பின் எந்தப் பலனையும் பெற்றதாகத் தெரியவில்லை. அதைப் பிழை என்று கூறவில்லை, நம்பலாம். ஆனால், அது தான் எம் வாழ்வைக் கொண்டு செல்லும் என்று நினைப்பது தவறு. எமக்காக நிர்ணயிக்கப்பட்ட வாழ்வு காலம் எதுவரையோ அது முடியும்போது நாம் இவ்வுலகை விட்டுச் சென்றுவிடுவோம். அது அனைவரும் அறிந்ததே. நாம் எது செய்தாலும் எம்வாழ்வுக் காலம் நீடிக்குமா....? சிந்தித்துப்பார்க்க வேண்டிய ஒருவிடயம் இது.

**சாதகம், நம்பிக்கை இவற்றிலிருந்த சற்றுத்தள்ளி நின்று சிந்திப்போம்**

இன்று பெரியவர்கள் திருமணம் என்று வரும்போது 90 வீதம் சாதகம் பார்த்து மணப் பொருத்தம் சரியென்றதும் உடனடியாக திரும்ண ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். ஆனால் இருவரது மனப்பொருத்தமும் பொருந்துகின்றதா? எனப் பார்க்கத் தவறுகிறார்கள். இதனால்தான் விவாகரத்து வழக்குகள் இன்று நீதிமன்றங்களில் நிறைந்து காணப்படுகின்றன.



ஒரு குழந்தையின் பிறப்பு என்பது அந்தக் குழந்தையானது தனது தாயின் வயிற்றில் கருவுற்ற காலம் தொடக்கம் இந்த மண்ணில் பிறக்கும் வரை உள்ள காலமாகும். கருவுற்று இருக்கும்போது அந்தக் குழந்தைக்கான பிறப்பு என்பது உறுதியாகிறது. அதுதான் அந்தச் சிசுவின் பிறப்புக் காலம். அவ்வாறு இருக்கும்போது அந்த சிசு பிறக்கும்போது வரும் நேரத்தைக் கொண்டு சாதகம் நிர்ணயிப்பது சரியானதா?

கருவுற்றது ஏதோ ஒரு தினத்தில், அதன் அன்றைய பலனை யாரறிவார்? குழந்தை இந்த மண்ணைத் தொடும் நாளைக் கொண்டு நேரத்தை, நட்சத்திரத்தை கொண்டு சாதகம் எழுதி, அதனை வைத்துப் பலன்களைப் பார்த்த பின்னர், திருமண காலம் வரும்போது சாதகம் தான் அதனை தடைசெய்கிறது என்று சொல்லிச் சாதகம் எழுதியவரையும் பலன்பார்த்துச் சொல்லுகிறவர்களையும் திட்டித் தீர்ப்பது சரியானதா?

இன்று திருமணம் செய்வதற்கு கல்வி, தரம், நிறம், சீதனம் என்று எல்லாம் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களது மனப்பொருத்தம் பொருந்துதா என ஒருவரும் பார்ப்பதில்லை. சாதகம் தான் வாழ்க்கையா? இது வாழ்கின்றவர்களின் தலை எழுத்தை நிர்ணயிக்குமா? மனப்பொருத்தத்துக்கு முதல் மணப்பொருத்தம் பார்ப்பது எந்த வகையில் சரியானது? இன்று எத்தனையோ பேரின் சாதகப் பொருத்தம் பார்த்துச் செய்யும் திருமணங்கள்கூட இடை நடுவில் பிரிந்து செல்வதைக் காணவில்லையா? இதைப்பற்றிச் சிந்திப்பார் இல்லையா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# காலத்துக்கு ஒவ்வாத சேரனின் கருத்துக்கள்



ஈழத் தமிழர்களுக்காகப் போராட்டங்களை நடத்தினோம். பல்வேறு தியாகங்களைப் புரிந்தோம். இழப்புக்களையும் சந்தித்தோம். ஆனால், இவற்றையெல்லாம் தற்போது நினைத்துப் பார்க்கும்போது அருவருப்பாக உள்ளது. இவ்வாறு கருத்து தெரிவித்திருப்பவர் பிரபல தமிழ் இயக்குநரும், நடிகருமான சேரன்.

சேரன் என்றாலே அவர் மீது ஈழத்தமிழர்களுக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. ஈழ உணர்வாளர் என்பதற்கு அப்பால் சிறந்த இயக்குநர், நல்லதொரு நடிகர், விரசமில்லாத படங்களைத்தருகின்ற தரமான கலைஞர் என்றெல்லாம் சேரன் ஈழத்தமிழர்களால் பாராட்டப்பட்டு வருபவர். புதிய திரைப்படங்கள் வெளிவரும்போது அவற்றைக் களவாக இணையத் தளங்களில் வெளியிடுவதை எவருமே விரும்பமாட்டார்கள். இதனால் படத் தயாரிப்பாளர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு ஈடுசெய்ய முடியாதது. இத்தகைய செயல்களில் ஈழத் தமிழர்கள் சிலர் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. அவர்களை எத்தகைய சொற்களைப் பயன்படுத்தியாவது சேரன் திட்டித்தீர்திருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களின் மனங்களையும் புண்படுத்தும் வகையில் அவர் கருத்துக்களை வெளியிட்டதுதான் வேதனையை ஏற்படுத்துகின்றது.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவநரான மருத்துவர் ராமதாஸின் புதல்வரான அன்புமணியும் ஒரு மருத்துவராவார். ஆனால் அவர் அரசியலிலும் ஈடுபட்டு வருகின்றார். தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக அவர் பதவி வகித்து வருகின்றார். அவர் ஒரு நிகழ்வில் பேசும்போது, தாம் ஒரு முறை வெளிநாடு ஒன்றுக்குச் சென்றபோது தம்மையொரு தமிழரென அடையாளம் காட்டியபோது தமிழரென்றால் இலங்கையைச் சேர்ந்தவரா எனத்தம்மிடம் அங்கிருந்தவர்கள் கேட்டதாகவும் தெரிவித்திருந்தார். அந்த அளவுக்கு இலங்கைத் தமிழர்கள் வெளிநாடுகளில் பிரபல்யம் பெற்று விளங்குவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இன்று பல்வேறு வெளிநாடுகளில் இலங்கைத் தமிழர்கள் செல்வாக்குடன் வாழ்ந்து வருகின்றனர். போர் காரணமாகப் புலம்பெயர்ந்து சென்ற இவர்கள், சுமார் நான்கு தசாப்த காலமாக அங்கு வாழ்வதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இடம்பெற்ற போர், இங்குள்ள தமிழர்களை வெகுவாகப் பாதித்துவிட்டது. இந்த நிலையில் தமிழ் நாட்டில் உள்ள அரசியல்வாதிகள், கலைஞர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தமது ஆதரவைத் தமிழர்களுக்குத் தெரிவித்து வந்துள்ளனர். இலங்கைத் தமிழர்களைக் காட்டியே தம்மை வளர்த்துக் கொண்டவர்களும் அங்கு இல்லாமலில்லை. இறுதிப் போரின்போது மத்தியில் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து ஆட்சி யில் பங்கு கொண்டிருந்த தி.மு.க. தமிழ் நாட்டிலும் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தது. இந்திய மத்திய அரசின் ஆதரவுடன் தான் இலங்கை அரசு போரை நடத்தியது. இதில் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் மிகவும் மோசமானவை. ஆனால், தி.மு.க. அரசு இதைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. இதற்கு மாறாக தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி இலங்கையில் போரை நிறுத்துமாறுகோரி போலியான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். அதுவும் சில மணி நேரத்தில் முடிவுக்கு வந்தது.







போர் நிறுத்தப்படுமென்ற உறுதிமொழி தமக்குக் கிடைத்துவிட்டதாகவும், இதன் காரணமாகவே கருணாநிதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடித்துக் கொண்டதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதுவொரு போலியான நாடகம் என்பது பின்னர் தெரிந்தது.

ஆனால் உளச்சுத்தியுடன் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தவர்களை நாம் மறந்துவிடக்கூடாது. இவர்களில் தமிழ்நாட்டிலுள்ள திரைப்படத் துறையினரும் அடங்குவார்கள். சேரன் போன்றவர்களும் இவர்களில் முதன்மை இடத்தில் இருந்ததை எவருமே மறந்துவிட முடியாது. ஆனால், அவர் மனமுடைந்து கருத்து வெளியிடும் அளவுக்கு என்னதான் நடந்துள்ளது என்பதையும் ஆய்ந்து பார்க்கத்தான் வேண்டும். புலம் பெயர்ந்து வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களில் எவராவது திரைப்படத் துறையினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய தண்டனையை வழங்க வேண்டும்.

இதைவிடுத்து பொது நிகழ்வொன்றில் வைத்து ஈழத்தமிழர்கள் அனைவரையும் இகழும் வகையில் சேரன் கருத்துக்களை வெளியிட்டமை மிகப் பெரிய தவறான செயலாகும். இது தமிழ் நாட்டிலுள்ள உறவுகளுக்கும், ஈழத்தமிழர்களுக்கு மிடையே விரிசலை ஏற்படுத்தி விடுமென்பதையும் நாம் மறந்து விட முடியாது. போரில் ஈழத்தமிழர்கள் தோல்வி அடைந்துவிட்டனரே, இனிமேல் இவர்களை மதித்து நடப்பதால் என்ன தான் ஆகிவிடப்போகின்றது எனச் சிலர் நினைக்கலாம். இத்தகையவர்கள் வரலாற்றை ஒருகணம்புரட்டிப் பார்க்க வேண்டும். தோற்றவர்கள் வென்றதான சரித்திரம் நிறையவே உள்ளது.

> இலங்கையில் இடம்பெற்ற போர் இங்குள்ள தமிழர்களை வெகுவாகப் பாதித்து விட்டது. இந்த நிலையில் தமிழ் நாட்டில் உள்ள அரசியல்வாதிகள், கலைஞர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தமது ஆதரவைத் தமிழர்களுக்குத் தெரிவித்து வந்துள்ளனர். இலங்கைத் தமிழர்களைக் காட்டியே தம்மை வளர்த்துக் கொண்டவர்களும் அங்கு இல்லாமலில்லை. இறுதிப் போரின்போது மத்தியில் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து ஆட்சியில் பங்கு கொண்டிருந்த தி.மு.க. தமிழ் நாட்டிலும் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தது. இந்திய மத்திய அரசின் ஆதரவுடன்தான் இலங்கை அரசு போரை நடத்தியது. இதில் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் மிகவும் மோசமானவை. ஆனால், தி.மு.க. அரசு இதைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. இதற்கு மாறாக தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி இலங்கையில் போரை நிறுத்துமாறு கோரி, போலியான உணவு தவிர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டார். அதுவும் சில மணி நேரத்தில் முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு ஓவியர்கள்

ஒரு நாட்டிலே இரண்டு ஓவியர்கள் இருந்தனர். ஒருவனின் பெயர் ரவி, மற்றவனின் பெயர் மதி. இருவரும் ஓவியக் கலையின் கரையைக் கண்டவர்கள். அவர்கள் எவராவது ஒருவரைப் பார்த்த உடனேயே; அவரது உருவத்தை வரைந்து கொடுக்கும் திறமை பெற்றவர்கள். அது மட்டுமல்ல; ஒருவரது அங்க அடையாளங்களையும், தோற்றத்தையும் எவராவது வர்ணித்தால் கூடப்போதும்; அவரது உருவத்தையும் அவர்கள் உடனேயே வண்ண ஓவியமாக்கிக் கொடுத்து விடுவார்கள்.



அவர்கள் தமது திறமையை வெளிப்படுத்திப் பல நாட்டு மன்னர்களிடம் ஏராளமான பரிசுகளைப் பெற்றனர். ஒருமுறை அவர்கள் ஒரு நாட்டு மன்னனைக் கண்டு தமது கலையின் திறனைக் காட்ட வந்திருந்தனர்.

அப்போது அந்த மன்னன் உங்களது திறமையை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஆனாலும், அதை நேரில் காண நான் ஒரு பரீட்சை வைக்கப் போகிறேன். நீங்கள் எவரையாவது ஒரு வினாடி பார்த்தால் கூட அவரது உருவத்தை அப்படியே வரைந்து விடுகிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். இப்போது நான் சொல்கிறபடி செய்யுங்கள் பார்க்கலாம். நீங்கள் உங்களது உருவப்படங்களை வரைய வேண்டும். இதுவரை எவ்வளவோ தடவை நிலைக் கண்ணாடியில் உங்களுடைய உருவங்களைப் பார்த்திருப்பீர்கள். எனவே, இது உங்களுக்கு அதிக சுலபமாகவே இருக்குமென நம்புகிறேன் என்றான். அதைக் கேட்ட அந்த இரு ஓவியர்களும் சற்றுத் திடுக்கிட்டனர். ஆயினும், அந்த மன்னன் கூறியது போலச் செய்வதாகக் கூறினார். அப்போதே அந்த அரசனும் அவர்களுக்கென பிரத்தியேகமாக ஓர் அறையை ஒதுக்கிக் கொடுத்தான். அதில் கண்ணாடி போல உருவத்தைக் காட்டக்கூடிய எந்தவிதமான பொருளையும் வைத்திருக்கவில்லை. அப்படியிருந்த பொருள்களையும் அங்கிருந்து அகற்றி விடும்படி கட்டளையிட்டான்.

அவர்கள் தமது உருவப்படங்களை வரையும்போது தமது தோற்றங்களை எங்குமே பார்க்கக்கூடாதென்பதே அரசனது விருப்பம். ஓவியர்கள் இருவரும் அந்த அறைக்குள் வந்ததும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுக்கு ஒரு யோசனை சட்டெனத் தோன்றியது. அதன் படி ரவி தன் நண்பன் மதியின் தோற்றத்தைச் சித்திரமாக வரைந்தான். மதியும், ரவியுடைய தோற்றத்தைச் சித்திரமாக வரைந்தான். இரண்டையும் இரு பெட்டிகளில் வைத்து விட்டு, வேலைக்காரர்களைக் கூப்பிட்டு அவற்றை எடுத்துக் கொண்டுபோய் அரசனிடம் காட்டும்படி கூறினார்கள்.

அரசன் அந்தப் பெட்டிகளில் இருந்த சித்திரங்களை எடுத்துப் பார்த்தான். அப்படியே மலைத்துப்போய் நின்று விட்டான். ஏனெனில், அந்த இரு உருவங்களுக்கும் அந்த ஓவியர்களின் உண்மைத் தோற்றத்துக்கும் கொஞ்சம்கூட வித்தியாசமே இருக்கவில்லை. அவர்களுக்கு அரசன் ஏராளமான பரிசுகளைக் கொடுத்து அனுப்பினான். ஆனால், அந்த மன்னனுக்கு ஓவியர்கள் இருவரும் ஒருவர் மற்றவருடைய உருவத்தையே வரைந் தார்கள் என்று தெரியவே தெரியாது. இப்படியும் ஒருவேளை நடந்திருக்குமோ என்றுகூட அந்த மன்னனும் நினைக்கவே இல்லை.

அந்த இக்கட்ட சூழ்நிலையிலும் அந்த இரு ஓவியர்களும் சமயோசிதமாக யோசித்து தமது ஓவியத்தை வரைந்து முடித்துள்ளனர். இவ்வாறு நாமும் எந்தச் சூழ் நிலையிலும் மனம் தளராது புத்தி சாதுரியத்துடன் எமது கடமையை முடிக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

– நா.ஸ்ரீகிருஷ்ணா

## உயர வேண்டும் தம்பி

சின்ன சின்ன தம்பி – நீ
சிறக்க வேண்டும் தம்பி
உழைத்துத் தினமும் வாழ்வில் – நீ
உயர வேண்டும் தம்பி

துன்பம் கண்டு நீயும் – என்றும்
துவள வேண்டாம் தம்பி
இன்பம் நிறைந்த உலகில் – உனக்கு
ஏற்றம் உண்டு தம்பி

சிட்டுப் போல பறந்து – நீ
சேவை செய்வாய் தம்பி
பட்டுப் போல மின்னும் – நல்ல
பாதை செய்வாய் தம்பி

அக்கம் பக்கம் பார்த்து – உன்
அறிவு விளக்கை ஏற்று
சிக்கல் இல்லா உலகம் – நாம்
செய்து காண்போம் தம்பி





## வரலாற்றில் இன்றைய தினம்

1331 – ஸ்ரீபன் யூரோஸ் டுசான் தன்னைத்தானே சேர்பியாவின் அரசனாகப் பிரகடனப்படுத்தினார்.

1504 – புளோரன்ஸ் சிஞ்ஜோரியாவில் மைக்கல் ஏஞ்சலோவினால் உருவாக்கப்பட்ட டேவிட் சிற்பம் திறந்து வைக்கப்பட்டது.

1860 – லேடி எல்ஜின் நீராவிக் கப்பல் மிச்சிக்கன் ஏரியில் மூழ்கியதில், 300 பேர் வரை உயிரிழந்தனர்.

1900 – சக்தி வாய்ந்த சுழற்காற்றினால் டெக்ஸாஸில் 8000 பேர் வரை உயிரிழந்தனர்.

1914 – முதலாவது உலகப்போர்; பிறைவேட் தோமஸ் ஹைகேற், இராணுவத்திலிருந்து போரின்போது விலகியதற்காக சாவுத் தண்டனைக்குள்ளான பிரித்தானியப் படை வீரராவார்.

1923 – அமெரிக்க நாசகாரிக் கப்பல் கலிபோர்னியா கடற்கரையில் தரை தட்டியதில் 7 பேர் காணாமற் போயினர். 23 மாலுமிகள் உயிரிழந்தனர்.

1933 – ஈராக்கின் அரசரானார் காஷி பின் பைசால்.

1934 – நியூஜேர்சி கரைக்கு அப்பால் பயணிகள் கப்பல் SS மாறோ கசிலில் ஏற்பட்ட தீயினால், 135 பேர் உயிரிழந்தனர்.

1962 – மக்கள் கருத்துக் கணிப்பு மூலம் புதிதாக சுதந்திரமடைந்த அல்ஜீரியாவின் அரசமைப்பு பின்பற்றத் தொடங்கப்பட்டது.

1988 – தீ பரவி வருவதையடுத்து, அமெரிக்க வரலாற்றில் முதன் முதலாக, யெலோவ் ஸ்ரோன் தேசியப் பூங்கா மூடப்பட்டது.


1991 – மஸிடோனியா குடியரசு, சுதந்திரமடைந்தது.

2002 – பேச்சில் நல்ல தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் களுத்துறைக் கைதிகளின் போராட்டம் ஒத்திவைப்பு.
– சமய அவதூற்றைக் கண்டித்து கத்தோலிக்கர்கள் மன்னாரில் ஊர்வலம்.

2003 – கிழக்கு மாகாண நிலை தொடர்பாக தமிழ்– முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் புலிகளைச் சந்தித்துப் பேச இணக்கம்.
– பலாலி விநியோகத்தைத் தடுக்க புலிகள் திருகோணமலையில் கடும் பிரயத்தனம் எனக் கதிர்காமர் தெரிவிப்பு.
– நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட அனைவரதும் கடின உழைப்பு அவசியம் என அமைச்சர் பீரிஸ் வேண்டுகோள்.

2004 – நாஸாவின் ஆளில்லா விண் ஓடம் தரையிறங்கும்போது அதன் பரசூட் விரியாததால், தரையில் மோதியது.

2013 – ரோமானியா லாஸி மாநில ரயில் விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸின் டுடேர்தே எமக்கும் தேவைப்படுகிறார்

நான் ஆட்சிக்கு வந்த மறு நிமிடத்தில் போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்குச் சாவு மணி அடிக்கப்படும், அவர்களின் பிணங்கள் சமுத்திரங்களில் கடாசப்படும். இது ஒரு வேட்பாளன் தலைவனாவதற்கு முன்னர் வழங்கியதேர்தல் வாக்குறுதி என்பதைவிட உலகையே எச்சரித்த குரல் என்றால் மிகையாகாது. அவர்தான் பிலிப்பைன்ஸின் தற்போதைய ஜனாதிபதியான டுடேர்தே.

பிலிப்பைன்ஸின் ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் இடம்பெற்றது. அப்போதைய ஜனாதிபதிக்கும் எதிர் வேட்பாளரான டுடேர்தேக்கும் இடையிலான போட்டி பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தத் தேர்தலில் டுடேர்தே அதிகளவில் அலட்டிக் கொள்ளவில்லை. அவர் வழங்கிய வாக்குறுதிகள் போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டிருந்தது. இதனால் காலத்தின் தேவை கருதி மக்களில் பலர் அவரை ஆதரித் தனர். கிட்டத்தட்ட இருமடங்கு வித்தியாசத்தில் டுடேர்தே ஜனாதிபதியானார்.

தனது வாக்குறுதியை நிறைவேற்ற டுடேர்தே காலம் தாழ்த்தவில்லை. பதவியேற்ற ஒரு மணித்தியாலயத்தில், “போதைப்பொருள் கடத்தல்காரர்கள், சூத்திரதாரிகள், பாலியல் குற்றம் புரிந்தவர்கள் என அத்தனைபேரையும் சுட்டுத்தள்ளுங்கள். முழுப்பொறுப்பையும் நான் ஏற்கிறேன்” என ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். இதன் விளைவாக அவர் பதவியேற்ற 24 மணிநேரத்தில் 110 பேர் கொல்லப்பட்டனர். நாடெங்கிலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தொடை நடுங்கச் சென்று சரணடைந்தனர்.

ஜூலை முதலாம் திகதி டுடேர்தே பதவியேற்பதற்கு முன்னர் பிலிப்பைன்ஸ் எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலையிலேயே இன்று வடபகுதியும் உள்ளது. எந்த மாற்றமும் இல்லை. எங்கு பார்த்தாலும் கஞ்சா. அதிகாலை, காலை, நண்பகல், மாலை, இரவு என எந்த நேரமும் கடத்தல்கள், சுற்றிவளைப்புக்கள் என செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் தினம் தினம் போதைக்கு அடிமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமாற்றம்பெற டுடேர்தே எமக்கும் தேவைப்படுகிறார்.

எம்மிடம் டுடேர்தே போன்றதொரு தலைவர் இல்லை. எமது தலைவர்களின் அரசியல் வாக்குறுதிகள் தேர்தல் மேடைகளுடன் முடிவுக்கு வருவதும், கிரிக்கெட் கழகத்துக்குத் துடுப்பு மட்டை வாங்கிக் கொடுக்கும் சில்லறைத் தனங்களாகவுமே உள்ளன. நாடு சுதந்திரம் அடையமுன்னர் எமது வீடு சுதந்திரமடைய வேண்டும். அதற்கு போதை, பலாத்காரம் போன்ற குற்றங்கள் அடியோடு இல்லாது செய்யப்பட்டு தனிமனித இருப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதற்குச் சிறந்த தலைகள் தேவையே தவிர தறுதலைகள் அல்ல.

பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் டுடேர்தே தனக்கென குண்டுதுளைக்காத வாகனத்தைக் கேட்கவில்லை. ஆடம்பர மாளிகைகளைக் கேட்கவில்லை மெய்ப் பாதுகாவலர்களைக் கேட்கவில்லை. அரச பொதுப் போக்குவரத்தையே அவர் தெரிவு செய்தார். பல தரப்பினரின் வற்புறுத்தலின் பின்னர் தற்போது அவருக்கென பிரத்தியேகமாக ஒரு வாகனம் அதுவும் சாதாரணதர வாகனம் வழங்கப்பட்டுள்ளது. எமது பகுதியில் சாதாரண அரசியல்வாதிகள்கூட ஏதோ நாட்டின் ஜனாதிபதி என்ற நிலையில் சுற்றித்திரியும்போது டுடேர்தேயின் தியாகமும், துணிச்சலும் மெய்சிலிர்க்க வைக்கும் விதமாக அமைந்துள்ளன. மொத்தத்தில் பிலிப் பைன்ஸின் எதிர்காலம் நாம் கவனிக்க வேண்டிய தொன்றாக அமைந்துள்ளது. எமக்கும் டுடேர்த்தே தேவைப்படுகிறார்.




# பண்பாட்டு உடை

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா



எமக்கு மிக முக்கியமானவை உணவு, உறைவிடம், உடை ஆகியனவாகும். உணவு பசியைப் போக்கும். உறைவிடம் வாழ்வைக் காக்கும். உடை மானத்தைக் காக்கும். உடையைக் களைய வந்த துச்சாதனனுக்கே பாஞ்சாலி சபதம் இட்டு அவனைப் பழிவாங்கினாள். ஆடை இல்லா மனிதன் அரை மனிதன். அரை நிர்வாணப் பக்கிரியாகவே காந்தி மகான் சென்று ஆங்கிலேயர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். மாம்பழம் கிடைக்காமையால் திருமுருகன் பழனியில் கோவணாண்டி ஆனார். தட்பவெப்ப நிலைக்கேற்ப உடை அணிதல் அவசியம். குளிரும் கொட்டும் பனியும் நிறைந்த மேல் நாட்டினரின் உடை உடம்பை இறுகத் தழுவுகிற கோட்டும் சூட்டும் கம்பளங்களுமே. தமிழர்களின் உடை இறுக்கமில்லாத ஆடைகள்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

(குறள் 788)

தமிழரின் உடைப் பண்பாட்டின் வயது 3000 ஆண்டுகளுக்கு மேலானது. சேலை பெண்களின் உடலுக்கு மகுடம் போன்ற உடையாகும். முறையாக அணியும் சேலை பக்தியைக் கொடுக்கும்.

வயிறு, இடுப்பு, தொப்புள் தெரிவதுபோல் சேலையை உடுத்துவது பண்பாட்டுக்குரியதல்ல. உடை எப்போதுமே உடலை மறைத்துப் பண்பைக் காட்டுவதாகவே இருக்கவேண்டும். வெவ்வேறு நாட்டு உடைகளை அணிவதில்கூட எமது பண்பாட்டுக்கு ஏற்ப நாகரிகத்தைக் கடைப்பிடிக்கலாம்.

தமிழர்களுக்கான தனித்துவ உடை ஒருநீண்ட நெடுங்கலை மரபை எடுத்துச் சொல்கிறது. எமது கால நிலைக்கு பருத்தியே சிறந்தது. பட்டின் பிறப்பிடம் சீனா. தமிழ் ஆண்களில் பெரும்பான்மையானவர்கள் வேட் டியை மறந்து விட்டார்கள். வீட்டு விழாக்களிலும் குடும்ப நிகழ்வுகளிலும் வேட்டி, சேலை உடைகளோடு முன்னிற்பது தமிழரின் அடையாளம். இறுதியாகத் தமிழர்களின் தன்னம்பிக்கை அடையாளம் பாரம்பரிய உடையில் இருக்கின்றது என்பதைச் சிந்தித்துக் கலாசார உடையில் ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

# தங்கம் வீடுகளில் தங்கும் செல்வம்

தங்கம் தமிழர் வீடுகளில் தங்கும் செல்வம். ஒரு பொட்டுத் தங்கம் இல்லாத தமிழரைத் தேட வேண்டியிருக்கும். கீழைத்தேச நாடுகளில் தங்க நகைகளுக்கே மதிப்பு அதிகம். ஆயிரம் திருட்டுக்கள் நடந்தாலும் தங்க நகைகளின் மதிப்பும் அதன் மீதான மோகமும் குறையவே இல்லை. இது மரபு சார்ந்த பண்பாடு. பெண்களுக்குப் புன்னகையும் வேண்டும் பொன் நகையும் வேண்டும். நகை அணிகள் பல. அவற்றுள் தலை அணிகள், காதணிகள், கையணிகள், விரலணிகள், காலணிகள் என்பன அடங்குகின்றன. அபிராமிப்பட்டர் பல பாடல்கள் பாடியும் அம்மை தன் திருக்காட்சிப் பேற்றை அருளவில்லை. எழுபத்தொன்பதாவது பாடலை கேட்ட அபிராமி அம்பிகை எழுந்தருளி தன் தாடங்கம் என்ற திருச்செவித்தோட்டை வானில் வீசி பூரணை ஒளியூட்டினாள். சிலப்பதிகாரத்தில் தன் கணவன் குற்றமற்றவன் என நிரூபிக்கக் கண்ணகி காற்சிலம்பைக் கழற்றி நிலத்தில் அடித்தாள். ஒரு நாட்டின் நாணயப் பெறுமதியையும், அந்நியச் செலாவணி இருப்பையும் அந்த நாட்டில் உள்ள தங்கம் நிர்ணயிக்கிறது இன்று எம் நாட்டில் நகைக்கடைகள் அதிகமாக உள்ள ஒரு வீதி கொழும்பு செட்டியார் தெரு. நகைகளில் பொன் மட்டும் உள்ளவை, பொன்னில் கல் பதித்தவை என இருவகை உண்டு. நகைகளின் மீது முத்து, மாணிக்கம் என்பன பதிக்கப்படும். பெண்கள் இடையில் ஆடைக்கு மேலே அணியும் நகை மேகலை. அதில் மணிகள் பொறித்தால் மணி மேகலை. ஆண்கள் கழுத்தில் சங்கிலி, கை விரல்களில் மோதிரம், இடையில் அரைஞாண் கொடி, கால் விரல்களில் மிஞ்சி அணிவர். காதிலும் சில இளைஞர் தோடு அணிவர். இன்றும் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கங்களே முதற்பரிசுகள். அன்று எமது அரசர்கள்புலவர்களுக்கு பொற்கிழியையே பரிசளித்தனர். தங்க நகைகளில் பதிக்கின்ற நவரத்தினத்தில் முத்து சிறப்பானது. முத்துமாரி எமது தெய்வம். ராணி முத்து உருண்டையானது. உறுதிக்கும், மென்மைக்கும், பெண்மைக்கும் எடுத்துக்காட்டு. ஒன்பது மணிகள் என்ற நவரத்தினக் கற்களைத் தங்கத்தில் பதித்து அணிகின்ற பழக்கம் நம்மிடையே ஓர் அருங்கலை. இன்றும் எம்மிடையே தங்க அணிகலனை யார் அதிகமாக அணிகிறார்கள் என்பதை மட்டுப்படுத்தியே செல்வமும் செல்வாக்கும் கணிக்கப்படுகின்றது.

*“வையம், துரகம், மாமகுடம், சிவிகை, பெய்யும் கனகம், பெரு விலை ஆரம், பிறை முடித்த ஐயன் திருமனையாள் அடித் தாமரைக்கு அன்பு முன்பு செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே”* - அபிராமி அந்தாதி 52.



எனவே, தங்க அணி கலன்களை அலங்கரித்துக் காப்பிடுவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | | 8 | 6 | |
| 3 | | | 2 | 8 | | | | |
| | 9 | | | | | | 1 | 4 |
| 5 | | | | 9 | | | | |
| | 8 | 4 | | | | 5 | 9 | |
| | | | | 5 | | | | 3 |
| 1 | 3 | | | | | | 8 | |
| | | | | 2 | 6 | | | 1 |
| | 4 | 6 | | | | | 3 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 9 | 6 | 3 | 5 | 7 | 1 | 8 |
| 7 | 3 | 5 | 2 | 8 | 1 | 6 | 9 | 4 |
| 1 | 6 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 | 5 |
| 6 | 5 | 1 | 7 | 2 | 9 | 4 | 8 | 3 |
| 4 | 9 | 7 | 8 | 1 | 3 | 5 | 6 | 2 |
| 3 | 8 | 2 | 5 | 4 | 6 | 9 | 7 | 1 |
| 9 | 1 | 4 | 3 | 7 | 8 | 2 | 5 | 6 |
| 5 | 7 | 3 | 1 | 6 | 2 | 8 | 4 | 9 |
| 8 | 2 | 6 | 9 | 5 | 4 | 1 | 3 | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

எந்த வரிசையில் நாம் நின்றாலும் நமக்கு முன்னால் நிற்பவன் சோம்பேறியாகவும்....



பின்னால் இருப்பவன் அவசரக்காரனாகவும்' இருக்கின்றான்.

போட்டோவுல கொஞ்சம் கலரா இருந்தா முன்பெல்லாம் என்ன சோப்பு யூஸ் பண்ணுறாய் எண்டு கேட்பாங்க....



இப்ப என்ன 'அப்ளிகேஷன்' யூஸ் பண்ணுறாய் எண்டு கேட்கிறாங்க...




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பேச்சில் நேர்மை நிறைந்திருக்கும். தாமதமான பணிகூட தற்போது நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், லாபம் திருப்தியளிக்கும். மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** அன்றாடப் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். விருந்து, விழாவில் குடும்பத்துடன் பங்கேற்பீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மிதுனம்:** எதிலும் பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மறைமுகப் போட்டியால் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். உடல்நலம் திருப்தியளிக்கும்.

**கடகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உடல் நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

**சிங்கம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும். விடாமுயற்சியால், நீண்டநாள் விருப்பம் நிறைவேறும்.

**கன்னி:** குடும்ப பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்க நேரிடும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** சமூகத்தில் நன்மதிப்பு உண்டாகும். தொழில், வியாபாரத்தில், படிப்படியாக லாபம் உயரும். பூர்வீகச் சொத்தின் மூலம் ஆதாயம் உண்டு. பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் சிந்தித்து முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். அரசியல்வாதிகளுக்கு, புதிய பதவி கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள் சுதந்திர மனப்பான்மையுடன் செயற்படுவர். மாணவர்கள் வகுப்பில் முன்னிலை வகிப்பர்.

**மகரம்:** எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பெண்கள் தாய் வீட்டினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வர்.

**கும்பம்:** சமூகத்தில் புகழ் மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் படிப்படியாக உயரும். மாமன், மைத்துனர், உதவிகரமாக நடந்து கொள்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மீனம்:** நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு, விரும்பிய பணிமாற்றம் கிடைக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

# வித்தியாசமான முறையில் பட வெளியீட்டுத் திகதி

அனீஸ் பாஸ்மி இயக்கத்தில் உருவாக உள்ள படம் 'முபர்கான்'. அனில் கபூர், அர்ஜுன் கபூர், அதியா ஷெட்டி, இலியானா ஆகியோர் லீடு ரோலில் நடிக்க உள்ளனர். இதில் அனில் கபூர், இரண்டு வேடங்களில் நடிக்க உள்ளார். விரைவில் படப்பிடிப்பு ஆரம்பமாக உள்ளநிலையில், படத்தின் வெளியீட்டுத் திகதியை படக்குழு அறிவித்துள்ளது. அதுவும் விநாயகர் சதுர்த்தி அன்று பத்திரிகை வடிவிலான அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். அதில், முபர்கான் படம், 2017 ஆம் ஆண்டு ஜுலை 28 ஆம் திகதி வெளியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மிகவும் வித்தியாசமான முறையில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்பு, ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.







நல்லதோர் வீணை செய்து நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 700 | 400 | 600 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 500 | – |
| சுறா | 500 | 700 | 500 | 800 | 800 | 600 | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 500 | 600 | 500 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 500 | 300 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | – | – |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | – | 300 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 200 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | – | 100 |
| ஒட்டி | 300 | 300 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 300 | 300 |
| மதனம் | 150 | 300 | – | 400 | 300 | 400 | – |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 30 | – |



# பேரீச்சம்பழ ரவை லட்டு

### தேவையான பொருள்கள்

ரவை – 1/2 கிலோ
பேரீச்சம்பழம் – 1/2 கிலோ
கச்சான் – 200 கிராம்
சீனி – 1/4 கிலோ
ரின் பால் (மில்க் மெய்ட்) – 1/4 கிலோ
நெய் – தேவையானளவு

### செய்முறை

முதலில் பேரீச்சம் பழத்தை சிறிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். ரவையை பொன்னிறமாக வறுக்கவும்.

சட்டியில் நெய்யை ஊற்றி (நெய் அதிகமாக இருந்தால் வாசனையும் நன்றாக இருக்கும்) அதில் பேரீச்சம் பழத்தையும் கச்சானையும் போட்டு நன்கு வதக்கவும். பேரீச்சம் பழம் நன்கு மசிந்தவுடன் ரவையை பேரீச்சம்பழ கலவைக்குள் கொட்டி நன்றாகக் கலக்க வேண்டும். அல்லது அடுப்பிலிருந்து இறக்கியும் ரவையை போட்டு கிளறலாம்.

ரவையும், பேரீச்சம் பழமும் நன்கு கலந்த பிறகு மில்க் மெய்டை சிறிது சிறிதாக ஊற்றி நன்றாக கலக்க வேண்டும்.

பின்னர் சட்டியை இறக்கி, சூடு தணிவதற்குள் லட்டுகளாக பிடித்துக் கொள்ளவும். பேரீச்சம்பழ ரவை லட்டு தயார்.

கூடுதலாக இனிப்பு சுவை தேவைப்படுபவர்கள், ரவை போடும் போதே சீனியையும் போட்டு கிளற வேண்டும். நீண்ட நாள்கள் வைத்திருக்கவும் இது உகந்தது.

# வீட்டு வைத்திய குறிப்புகள்

**இஞ்சி**

தினமும் உணவில் இஞ்சி சேர்த்தால் உடல் வலியோ செரிமானக் கோளாறோ ஏற்படாது. வயதானவர்கள் பசியில்லை என்று சொல்ல மாட்டார்கள். குழந்தைகளும் நன்கு சாப்பிடுவார்கள்.

**புளி**

சாம்பாரிலும் இரசத்திலும் சேரும் புளியில் வைட்டமின் பி மற்றும் சி, டார்டாரிக் அமிலம், கல்சியம் முதலியன உள்ளன. இந்த டார்டாரிக் அமிலம், அதிக மாவுப் பொருள்களால் உடல் நலம் கெடாமல் பார்த்துக் கொள்கிறது. எனவே, காய்ச்சல், ஜலதோம் முதலியவை தாக்கினால் மிளகு, பூண்டு,புளி சேர்த்த இரசம் தவறாமல் ஒரு டம்ளராவது அருந்துங்கள்.

**துளசி**

துளசி இலைக்கு மன இறுக்கம், நரம்புக் கோளாறு, ஞாபக சக்தி இன்மை, ஆஸ்துமா, இருமல் மற்றும் பிற தொண்டை நோய்களை உடனுக்குடன் குணமாக்கும் சக்தி உண்டு. துளசி இலைச் சாறில் தேன், இஞ்சி முதலியன கலந்து ஒரு தேக்கரண்டி அருந்தலாம். சளி, இருமல் உள்ள குழந்தைகளுக்குத் தினமும் மூன்று வேளை மூன்று தேக்கரண்டி இந்தத் துளசிக் காயம் கொடுத்தால் போதும்.

**நன்னாரி**

உலர்ந்த நன்னாரி வேரை இடித்து வைத்துக் கொள்ளவும்.தினமும் 30 கிராம் அளவு வேரை தேநீராகவோ அல்லது சர்பத்தாகவோ தயாரித்து அருந்தி வந்தால் உடலுக்குச் சத்து கிடைக்கும். இரத்தம் சுத்தமாகும். எல்லாஉறுப்புகளும்சீராகச்செயற்படும். காய்ச்சலின்போது நன்னாரி தேநீர் அருந்தினால் உடனே உடல் வியர்த்து காய்ச்சல் பறந்து விடும்.




**நாளை**
ஆவணி-24
வெள்ளிக்கிழமை
-09.09.2016
திதி: அட்டமி
பி.இ.03.31
நட்சத்திரம்: கேட்டை
பி.இ. 05.17
ராகுகாலம்:
10.34-12.04 வரை
சுபநேரம்:
06.04-07.34 வரை



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்


| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 60 | 40 | 30 | 30 | 20 |
| கத்தரி | 40 | 50 | 80 | 50 | 60 | 40 | 90 | 40 |
| கரட் | 100 | 120 | 120 | 120 | 100 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 80 | 90 | 100 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 80 | 60 | 160 | 80 | 60 | 100 | 100 | 60 |
| பாகல் | 100 | 70 | 200 | 100 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 120 | – | 160 | 160 | 100 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 90 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 100 | 90 | 60 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 | 40 | 40 | 70 | 40 |
| தக்காளி | 40 | 40 | 40 | 60 | 40 | 50 | 120 | 40 |
| வாழைக்காய் | 120 | 80 | 60 | 80 | 80 | 60 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 80 | 100 | 70 | 300 | 200 | 140 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 | 40 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 90 | 120 | 100 | 80 | 120 | 90 | 80 |
| வெண்டி | 40 | 60 | 120 | 80 | 60 | 60 | 70 | 20 |
| போஞ்சி | 120 | 180 | 200 | 160 | 160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 100 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30–35 | 30 | 30 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 200 | 140 | 240 | 240 | 200 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 15 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 80 | 120 | 120 | 100 | 200 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 150 | 110 | 120 | 80 | 100 | 40 | 80 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமரெல்ட் நிறுவனத்தின் சிறந்த விநியோகஸ்தராக நெல்லியடி செல்லமுத்தூஸ் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் பிறேம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். புத்தளம், அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம், வன்னி உட்பட்ட மாவட்டங்கள் பங்குபற்றிய வடக்கு மாகாண மற்றும் வடமத்திய மாவட்டங்களுக்கிடையிலான போட்டியில் நெல்லியடி செல்லமுத்தூஸ் ரெக்ஸ்ரைல்ஸ் முதலாமிடத்தை பெற்றுள்ளது. (த-422)


## நாணய மாற்று விகிதம்



பஹ்ரைன் (தினார்) - 387.01
ஐ.இராச். (பவுண்டு) - 195.55
ஐரோப்பியா (யூரோ) - 164.05
சுவிஸ் (பிராங்) - 150.54
ஐ.அமெ. (டொலர்) - 145.90
கனடா (டொலர்) - 113.60
ஆஸி. (டொலர்) - 111.75
சிங்கப்பூர் (டொலர்) - 108.28
கட்டார் (ரியால்) - 40.06

CSE
COLOMBO STOCK EXCHANGE

| | | | |
|---|---|---|---|
| [illegible] | | [illegible] | [illegible] |
| ASPI | -16.48 | 6,507.?? | 6,524.45 |
| S&P SL20 | -9.72 | 3,583.48 | 3,593.20 |
| [illegible] | | 500,407,296 | 440,287,2?? |
| [illegible] | | 370,018,580 | 225,826,456 |
| [illegible] | | 402,302,752 | 383,300,102 |
| [illegible] | | 130,388,730 | 223,460,706 |
| [illegible] | | 97,506,596 | 45,987,012 |



| | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | BFN.N | 574 | 2,751,708 | 45,494,722 |
| [illegible] | CFVF.N | 31.1 | 1,589,148 | 44,767,669 |
| [illegible] | DIAL.N | 11.4 | 3,655,565 | 41,717,909 |
| [illegible] | HNB.N | 221 | 160,807 | 35,577,822 |
| [illegible] | JKH.N | 150 | 189,493 | 28,426,689 |
| [illegible] | SHAN.N | 94.1 | 280,806 | 26,507,534 |
| [illegible] | DIST.N | 263 | 96,770 | 25,356,947 |
| [illegible] | HHL.N | 105.?? | 217,804 | 25,080,618 |
| [illegible] | SEMB.N | 25.4 | 1,009,576 | 16,107,227 |
| [illegible] | COMB.N | 136 | 107,697 | 14,561,789 |

| | |
|---|---|
| [illegible] | 285 |
| [illegible] | 227 |
| [illegible] | 33.3 |
| [illegible] | 15 |
| [illegible] | 5 |

## நுட்பம்


### 60 மெகா பிக்சல் கமராவுடன் வரவுள்ளது புதிய கைபேசி!

உலகில் முதன்முறையாக 60 மெகா பிக்ஸல் கொண்ட கமரா, 12 ஜிபி ரெம் மற்றும் 1 ரிபி சேமிப்பகம் கொண்ட தொடுபேசி அறிமுகம் செய்யப்படவுள் ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்தி இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

தற்பொழுது வெளியாகியுள்ள தகவல்களின்படி, கேடன்ஸா என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் தொடுபேசிகளை, சென் பிரான்ஸிஸ்கோவையைச் சேர்ந்த டூரிங் ரோபொட்டிக் என்ற நிறுவனம் வெளியிடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

4 சிம்களை பாவிக்கும் வசதி, 20 மெகா பிக்ஸல் கொண்ட செல்பி கமரா மற்றும் இரண்டு மின்கலங்கள் போன்ற பல சிறப்பு அம்சங்கள் இந்தக் கைபேசியில் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கைபேசி 2017ஆம் ஆண்டு இறுதிக்குள் சந்தையில் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இவ்வாறு வசதிகள் கொண்ட ஒரு கைபேசியை வெளியிடுவது சாத்தியமற்ற ஒரு விடயம் என்றே பலரும் கருத்து தெரிவிக்கின்றனர்.



After A/Ls...
UGC அங்கீகாரம் கொண்ட UK Degree பட்டப்படிப்புகளை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...
INTAKE NOW ON
edexcel PEARSON CIOB RICS
BM Business Management
CSD Computing & Systems Development
CE Civil Engineering
QS Quantity Surveying
BMS Biomedical Science
LLB Law
BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)
UGC Recognized TVEC Approved
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
BUILDING CAREERS - TRANSFORMING LIVES
JAFFNA 077 710 2131 077 960 3753
COLOMBO 077 283 4595
18 YEARS of Trust & Excellence in Higher Education
Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna
ISO 9001:2008 CERTIFIED
HOTLINE : 021 2219910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்துக்கு...

அத்துடன் மயிலிட்டியை மீன்பிடிக்க விடுமாறு கோரும் தற்போதைய தலைமுறையினருக்கு அவர்களின் மூத்த தலைமுறையினர் மேற்கொண்ட மீன்பிடி முறைகள் எதுவும் தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்படும் செய்தியாளர்கள் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்துக்கு நேற்று அழைத்து வரப்பட்டனர். இராணுவத்தினரால் கீரிமலையில் அமைக்கப்பட்டு வரும் வீடுகள், செய்தியாளர்களுக்குக் காண்பிக்கப்பட்டன. இதன் பின்னர் பலாலி படைத் தலைமையகத்தில் செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. இதன் போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் முடிவடைந்த பின்னர் வடக்கில் இதுவரை விடுவிக்கப்பட்ட காணிகள், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்கள் என்பன தொடர்பிலும் செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதன் பின்னர் ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு இராணுவத் தளபதி பதில் வழங்கினார்.

“மயிலிட்டித் துறைமுகம் எப்போது விடுவிக்கப்படும்” என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, நாங்கள் காணிகளை படிப்படியாக விடுவித்து வருகின்றோம். மயிலிட்டியை உடனடியாக விடுவிப்பது சாத்தியமில்லை. விரைவில் விடுவிக்கப்படும். மக்கள் அங்கே மீளக் குடியமர்ந்த பின்னர் அவர்களது துறைமுகம் கையளிக்கப்படும்.

மயிலிட்டித்துறைமுகத்தில் மீன்பிடி நடவடிக்கை மேற்கொள்ள விடுவிக்குமாறு இப்போது கேட்கும் தலைமுறையினருக்கு அங்கு தொழில் செய்யத் தெரியாது. அவர்களது மூதாதையர்கள் செய்த தொழில் இப்போது இவர்கள் செய்ய மாட்டார்கள். ஆனாலும் அங்கே செல்வதற்காக மீன்பிடியைச் சொல்கின்றார்கள்.

இதேவேளை கொழும்பில் மூர் வீதியில் முஸ்லிம் மக்கள் வசிக்கின்றனர். அங்கே இராணுவ முகாம் இருக்கின்றது. அதன் அருகில் அவர்கள் வசிக்கின்றனர். கொம்பனித் தெருவில் தமிழ் மக்கள் வசிக்கின்றனர். அதன் அருகிலும் இராணுவ முகாம் இருக்கின்றது. இதே போன்று பலாலியிலும், இராணுவ முகாமுக்கு அருகில் தமிழ் மக்கள் வசிக்கலாம் - என்றார். (வ-5)

## அரசியல்...

அரசியல் கைதிகள் எனத் தம்மை அடையாளப்படுத்துபவர்கள், கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து அல்லது கடத்தப்பட்டுக் கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து பல்வேறு விதமான மனித உரிமை மீறல்களைச் சந்தித்து வருகின்றனர். முறையான சட்ட ஒழுங்குகளும் பின்பற்றப்படுவதில்லை. இதன் காரணமாக அரசியல் கைதிகளின் விடுதலை நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் சாத்தியமாகப் போவதில்லை. இதனை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். நீண்ட காலமாக தடுப்புக் காவலில் உள்ள அரசியல் கைதிகள், தமது விடுதலைக்காக அகிம்சை ரீதியில் போராட்டங்களை முன்னெடுத்த போது, அதிகாரத்தில் உள்ளவர்கள் அவர்களுக்கு ஆதரவாக பல வாக்குறுதிகளை வழங்கினர். அந்த வாக்குறுதிகள் இன்று வரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1971ஆம் ஆண்டு மற்றும் 1988, 1989 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் அரசுக்கு எதிராக தெற்கில் இளைஞர்கள் ஆயுதப்புரட்சியில் ஈடுபட்டனர். ஆட்சியாளர்கள் அரசியல் தீர்மானம் எடுத்து குறுகிய காலத்தில் அவர்களை விடுதலை செய்தனர். இதே போன்று 1987ஆம் ஆண்டிலும் வடக்கு இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர். முன்னைய அரசின் காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனக் கருதப்படுபவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்ட பின்னர், அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அதே நடைமுறையைப் பின்பற்றி சிறைகளில் எஞ்சியிருக்கும் அரசியல் கைதிகளையும், அரசியல் தீர்மானம் எடுத்து விடுதலைசெய்யுமாறு கோருகின்றோம். போர் முடிவடைந்துள்ள இந்த நிலையில் எஞ்சியிருக்கும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டால், அவர்கள் மீண்டும் ஆபத்தான விதத்தில் செயற்படுவார்கள் என்ற சிந்தனை அர்த்தமற்றது.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து முதல் முறையாக தங்கள் வாக்குகளால் ஜனநாயக முறையில் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்தனர். இதுவரைக்கும் தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

வடக்கு - கிழக்கு மக்களும் அதற்காகவே நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தனர். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களில் ஒன்றாகும். போர் அற்ற காலப் பகுதியில் அரசியல் கைதிகளைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பதும், நீதிமன்ற நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துவதும் ஒரு தேசிய இனப் பிரச்சினையாகும். இது நல்லாட்சிக்கு வாக்களித்த மக்களை அவமரியாதை செய்வதாக அமையும் - என்று மனு வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

## தாஜுதீன்...

கால்டன் இல்லத்திலிருந்தும் எடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்புகளுக்கும் தொடர்பு இருக்கின்றது.

இவ்வாறு நீதிமன்றில் நேற்று தெரிவித்தனர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்.

கொழும்பு பிரதான நீதிவான் மன்றில் நேற்று வசீம் தாஜுதீன் படுகொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தாஜுதீனின் விசாரணைகளை மூடிமறைப்பதற்காக செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி ஆகியோரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

இதேவேளை, இறப்பு இடம்பெற்ற தினத்தன்று ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புகள் தொடர்பான விசாரணைகள் தொடர்வதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நீதிமன்றில் அறிவித்தனர்.

தாஜுதீன் படுகொலை மற்றும் குறித்த விசாரணைகளை மூடிமறைக்குமாறும் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்திலிருந்தே சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவு விடுக்கப்பட்டிருப்பதாக தமக்கு சந்தேகம் எழுந்துள்ளதால், குறித்த அலுவலகங்களின் தொலைபேசி அழைப்புகளை விசாரிப்பதற்கான அனுமதியை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே நீதிமன்றில் பெற்றிருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகளின்போது சம்பந்தப்பட்ட நாள்களில் ஜனாதிபதி மாளிகையிலிருந்தும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சொந்த வீடான கால்டன் இல்லத்திலிருந்தும் எடுக்கப்பட்ட தொலைபேசிகளுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் தெரியப்படுத்தினர்.

இந்தநிலையில், குறித்த வழக்கு எதிர்வரும் 21ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, தாஜுதீன் படுகொலை தொடர்பான சி.சி.ரி.வி. காணொளிகள் கனடாவுக்கு மேலதிக பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டபோதும், அவை தெளிவில்லாமல் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினர். (வ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி நாயகம் பொன்னையா

மலர்வு
12 . 06 . 1922



உதிர்வு
07 . 09 . 2016

விமானநிலைய வீதி, வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாயகம் பொன்னையா நேற்று (07.09.2016) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையர் பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆசையர் (சித்தவைத்தியர்) - தெய்வானை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வெள்ளையர் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கணபதிநாதன் (ஓய்வுபெற்ற - அதிபர்), சீனிவாசகம் (ஓய்வுபெற்ற - தபால் அதிபர்), அம்மணிப்பிள்ளை, இராசமணி ஆயோரின் அன்புச் சகோதரியும், சந்தானலட்சுமி, பரமேஸ்வரி, பத்மநாதன் (இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவசம்பு (ஓய்வுபெற்ற - அதிபர்), சிவஞானம் (ஓய்வுபெற்ற சாலைப்பொறியியலாளர் - இ.போ.ச), ஜோதீஸ்வரி ஆகியோரின் மாமியும், கயல்விழி, எழிலரசன் (கிராம அலுவலர் - உரும்பிராய்), எழில்மதி (மக்கள் வங்கி - தெமட்டகொட), மதியரசன் (CEMED QUALITY (PVT) LTD) , சுதாகரன் (நடத்துனர்), பிரபாகரன் (ஆசிரியர் - கிளி/அக்கராயன் ம.வி), சிறிகரன் (சிவில் அத்தியட்சகர், மின்சாரசபை), ஸரவணகோபி (இந்துக்கல்லூரி கொழும்பு உயர்தர மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தாரகா, தருண், வேணுகானன், தர்சனன், பிருந்தாபன், விதுர்சனா, டிலக்சன், ஜஸ்மிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கூனன்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வளலாய்,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

[illegible]

**பத்மநாதன் - 077 723 8297 / 021 321 5803**

## மரண அறிவித்தல்கள்

### செல்வி சிதம்பரம் முத்தையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம் கல்வி வலயம்)

மண்ணில்: 09.05.1938
விண்ணில்: 07.09.2016



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொழும்பு, சுன்னாகம், ஸ்கந்தா பில்டிங் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, அளவெட்டி வடக்கு ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மகுமாரியுமாகிய செல்வி சிதம்பரம் முத்தையா நேற்று (07.09.2016) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளை மற்றும் இளையதங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, சின்னராசா (அளவெட்டி) ஆகியோரின் மைத்துனியும், தவமலர் (கனடா), சிவபாலன் (அப்பு - நோர்வே), சிவசண்முகன் (செல்வன் - வவுனியா - லோஜி மற்ரல்), சிவநேசன் (டென்மார்க்), சிவயோகன் (யோகன் - நோர்வே) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.09.2016) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அளவெட்டியிலுள்ள அன்னாரின் சகோதரி இளையதங்கம் சின்னராசா வீட்டில் நடைபெற்று அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்தில் அவரது திருவுடல் அடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**க.சின்னராசா**
**“லலிதா மகால்”**
**சீனன் கலட்டி,**
**அளவெட்டி வடக்கு, அளவெட்டி.**

(சி.26104)
(13.16.17)

தொடர்புகளுக்கு:
க.சின்னராசா - 077 301 3466
வே.சிவசண்முகன் (செல்வன் - 077 113 0612)
வே.சிவயோகன் (யோகன் - 076 637 9053

### திருமதி
### நவபுஸ்பம் கதிர்காமநாதன்



உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வராம்பற்றை, கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவபுஸ்பம் கதிர்காமநாதன் 06.09.2016 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இரத்தினம்மா தம்பதியரின் மருமகளும் கதிர்காமநாதன் (ஓய்வு பெற்ற சிரேஷ்ட போதனாசிரியர், யாழ் தொழில் நுட்பவியல் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் நாகபூசணி, காலஞ்சென்ற நவேந்திரராணி மற்றும் சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஜமுகதாஸ் (பொறியியல் உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் - மத்தி, வவுனியா), காந்தரூபன்(பகுதித்தலைவர், தொழில்நுட்பக்கல்லூரி - வவுனியா), பகீரதன் (பொறியியலாளர், Dialog Axiata PLC) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஹேமா(இலங்கை வங்கி, செட்டிக்குளம்), கிறேசினி(முகாமைத்துவ உதவியாளர், கச்சேரி, மன்னார்) ஆகியோரின் அன்பு மாமியாரும் குலக்சனாவின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வராம்பற்றை, கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

(J 4403)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Galaxy Star
வெற்றி வாரம் 090
திகதி 07.09.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 27 41 56 59
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி.
ரூ. 2,260,600/-

உள்ளம் கொள்ளை போகுதே
இத் தகவலைத் தருவது ஒளிஅரசி....




மேலும் விவரங்களுக்கு
செப்ரெம்பர் மாத
சஞ்சிகையைப் பார்க்கவும்

சாவகச்சேரி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கூறுவிலை கோரல்

எமது சங்கத்தில் கீழ்வரும் கிளை நிலையங்களின் மதில் அமைப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்வதற்குரிய கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன. இந்த வேலையினை மேற்கொள்ள விரும்புபவர்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வேலையினைக் குறிப்பிட்டு தங்களின் கூறுவிலைகளை **"தலைவர், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி"** எனும் முகவரிக்கு எதிர்வரும் **23.09.2016** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

விவரம் வருமாறு:
01. 185 தச்சன்தோப்பு காணிக்கான சுற்றுமதில் அமைப்பு
02. 192 மகிழடி காணிக்கான சுற்றுமதில் அமைப்பு
03. 198 பெருங்குளம் காணிக்கான இருபக்க மதில் அமைப்பு
04. 185 தச்சன்தோப்பு கிளைக் கட்டடத்துக்கு கதவுகள் பொருத்தி திருத்தி அமைத்தல்.

**குறிப்பு:**
மேலதிக விவரங்களை சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்**
**சாவகச்சேரி.**
**021 227 0086**


**திரு.வ.தெய்வேந்திரம்**
**(தலைவர்)**
(C/26105)(10.18)

Don Bosco Technical Institute
தொன் போஸ்கோ தொழிற்பயிற்சி நிலையம்
19ம் கட்டை பல்லவராயன்கட்டு, பூநகரி,
கிளிநொச்சி.


Courses - பயிற்சிகள்
- Computer Application Assistant - NVQ Level - 3
  கணினி பிரயோக உதவியாளர் 3 மாதம்
- ICT Technician - NVQ Level - 4
  தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் 6மாதம்
- Tailoring - NVQ Level - 3
  தையல் 6 மாதம்
- Welding - NVQ Level - 3
  பற்றவைப்பு 6 மாதம்
- Electrical 6 மாதம்
  மின்னியல்
- Carpentry
  தச்சு 6 மாதம்
- Bakery 6மாதம்
  வெதுப்பகம்
- English
  ஆங்கிலம் 3மாதம்













தங்க விடுதி hostel வசதியுடன் பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளது
0212283103, 0765263740
தரம் - ஆரம்பக்கல்வி மாணவர்கள், O/L, A/L மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஆசிரியர்கள், ஆர்வமுள்ள அனைவரும்
19th. Mile Post Pallavarayankaddu Kilinochchi
புரட்டாதி மாதம் 05ம், 06ம் திகதிகளில் காலை 09 மணியளவில் நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும்

## காணி....

நிலைகொண்டுள்ள கடற்படையினர் அந்தக் காணியை நிரந்தரமாக சட்ட ரீதியாக தமது உடைமையாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தனர்.

சுவீகரிப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்காக நில அளவை செய்வதற்கு நில அளவைத் திணைக்களம் பல்வேறு தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. நில அளவைத் திணைக்களத்தின் முயற்சிகள் மக்களின் கடும் எதிர்ப்புக்களினால் முறியடிக்கப்பட்டன.

ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி கடைசியாக நில அளவை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் போதும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான நிலையில், காணி உரிமையாளர்கள் 19 பேர் கடந்த திங்கட்கிழமை சட்டத்தரணி ஊடாக மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில், காணியை அளவீடு செய்வதற்கான இடைக்காலத் தடை உத்தரவை வழங்குமாறு விண்ணப்பம் செய்தனர்.

"பள்ளிமுனை 25 வீட்டுத்திட்ட காணி தொடர்பான வழக்கு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு மன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் பள்ளிமுனை கடற்படை முகாமிற்கான பொறுப்பதிகாரிகள் திடீரென்று மாற்றம் பெற்று வருவதனால், அவர்களின் பெயர்கள் மன்றில் மாற்றத்துக்கு உள்ளாகின்றன. வழக்கு தொடர்ந்தும் நிலுவையிலேயே உள்ளது.

காணி தொடர்பாக மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம் பெற்று வரும் நிலையில், அந்தக் காணியின் வழக்கு முடிவுக்கு கொண்டு வரும் வரை இரண்டு தரப்பினரும், காணியில் எந்த விதமான அபிவிருத்தி வேலைகளையும் முன்னெடுக்க இடைக்கால தடை விதிக்கப்படுகின்றது" என்று நீதிபதி ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா கட்டளை வழங்கினார். (வ-5-21-56)

## 41,746....

படுபவர்களின் விவரங்கள், கடந்த ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டு நீக்கப்படுபவர்களின் விவரங்கள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் புதிதாக 30 ஆயிரத்து 608 பேர் இணைத்துக் கொள்ளப்படுவதுடன், 22 ஆயிரத்து 286 பேர் நீக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் புதிதாக 11 ஆயிரத்து 813 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், 2 ஆயிரத்து 691 பேர் நீக்கப்பட்டுள்ளனர். இரண்டு நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 977 பேர் நீக்கப்படுவதுடன், புதிதாக 42 ஆயிரத்து 421 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தில் புதிதாக 11 ஆயிரத்து 146 பேர் இணைத்துக் கொள்ளப்படுவதுடன், 6 ஆயிரத்து 713பேர்நீக்கப்பட்டுள்ளனர். மன்னார் நிர்வாக மாவட்டத்தில் புதிதாக 5 ஆயிரத்து 928பேர்இணைத்துக்கொள்ளப்படுவதுடன், 4 ஆயிரத்து 264 பேர் நீக்கப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் புதிதாக 8 ஆயிரத்து 325 பேர் இணைத்துக் கொள்ளப்படுவதுடன், 5 ஆயிரத்து 792 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் 25 ஆயிரத்து 399 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், 16 ஆயிரத்து 769 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள, புதிதாக இணைக்கப்பட்டோர் விவரம் (பி பட்டியல்), நீக்கப்பட்டோர் விவரம் (ஏ பட்டியல்) என்பன கடந்த முதலாம் திகதி முதல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத் தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், உள்ளூராட்சி மன்றம் ஆகியவற்றில் மக்கள் பார்வைக்காக கடந்த முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் தமது ஆட்சேபனைகளை பொதுமக்கள் உரிமைக் கோரிக்கைப் படிவத்தின் ஊடாக சேர்ப்பிக்க முடியும். இதுவே வாக்காளர் பதிவுக்குரிய இறுதிச் சந்தர்ப்பமாகும். (வ-5-ரி3-ரி7-101)

## தமிழரின்....

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த, இலங்கைக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவர் றொபேட் கில்ரன் தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கக் குழுவினர் வடக்கின் நிலவரத்தை அறிவதற்காக வருகை தந்தனர். எமது மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறினேன்.

கொழும்பு அரசு, வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கைகளை மேற்கொண்டால், நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்த முடியும். கொழும்பில் தீர்மானங்களை எடுத்து விட்டு, அதனை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினால் பிரச்சினை ஏற்படும். இது பற்றி நான் அமெரிக்கக் குழுவுக்கு எடுத்துக் கூறினேன்.

எமது கருத்துக்களை அறிந்து கொள்ளாமல், நாங்கள் செய்வதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றால் நல்லிணக்கத்துக்கு வழிவகுக்காது என்பதைக் குறிப்பிட்டேன்.

செயற்திட்டங்களை அமைக்கும்போது, வடக்கு மாகாணப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்பதை அவர்களிடம் வலியுறுத்தினேன். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

அதிகாரப் பரவலாக்கம் குறித்தும் கலந்துரையாடினார்கள்.

2 ஆயிரம் வருடங்களாக தனித்துவமான மொழி மற்றும் கலாசாரங்களுடன் வட-கிழக்கு மாகாணங் கள் இருந்தமையையும் சுட்டிக்காட்டி, 1833ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இருந்த போது, அவர்களின் தனி நிர்வாக திருத்தத்திற்காக வெவ்வேறாக இருந்த மாகாணங்களை ஒருங்கிணைத்தமையினால்தான் இலங்கையை ஒருமித்த நாடாக மாற்றினார்கள்.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த போது, எமக்குத் தரவேண்டிய தனித்துவத்தை ஏற்றுக் கொள்ளாது ஒரு நாடாக ஆங்கிலேயர் விட்டுச் சென்றனர் - என்றார். (வ-5-106)

## திசைமாறியதால்....

கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திசை மாறி தலை வைத்துப் படுத்ததன் காரணத்தால் அவருடைய உயிர் தப்பியதாகவும், தலைக்கு விழ வேண்டிய வெட்டு, மாறிப் படுத்ததாலேயே காலில் விழுந்ததாகவும் காயமடைந்தவரது மனைவி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு புன்னாலைக்கட்டுவன்-ஈவினைப் பகுதியில் இடம்பெற்றது. ஈவினை கிழக்கை சேர்ந்த சின்னத்துரை சத்தியேஸ்வரன் (வயது-46) என்ற குடும்பத் தலைவரே வாள் வெட்டுக்கு இலக்கான நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

"வீட்டின் விறாந்தையில் படுத்திருந்த குடும்பத் தலைவர், வெக்கையாக இருப்பதாக தெரிவித்து வழமைக்கு மாறாக திசை மாறிப்படுத்தார். இதன் போது நள்ளிரவு 12.30 மணியளவில் வீட்டினுள் புகுந்த இனம் தெரியாத நபர்கள் இருவர் படுத்திருந்த குடும்பத் தலைவரை வாளால் வெட்டிவிட்டு தப்பித்துச் சென்றனர். மோட்டார் சைக்கிளில் முகத்தில் துணிகட்டியவாறு வந்தவர்களே வாளால் வெட்டினர் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த குடும்பத்தலைவர் தற்போது தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்" என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-5-21)

தேவை
விற்பனை உதவியாளர் தேவை.
டிமோபட்டா van
விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 9000336

காணி விற்பனைக்கு
லவ்லேன் உடுவிலில் 2 1/2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு
077 6701605
(J/4420)
(10.18)

தேவை
19 லீற்றர் வெறுத் தண்ணீர் போத்தல்கள்
தேவை. (நல்ல நிலையிலுள்ள)
தொடர்பு: 077 8585348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயமடைந்த....

இடம்பெற்றது. கிளிநொச்சி பன்னங்கண்டியைச் சேர்ந்த பொன்னையா விஜயேந்திரன் (வயது -26) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கட்டட வேலை செய்து கொண்டிருந்த நபர் ஒருவர் காயங்களுக்கு உள்ளானார். அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அங்கு வேலை செய்துகொண்டிருந்த பிறிதொரு இளைஞன், காயமடைந்த நபரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றிக் கொண்டு எதிரே வந்த பஸ் மோதி விபத்து ஏற்பட்டது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்

கட்டட வேலையின் போது காயமடைந்த நபர், விபத்தினால் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைது செய்யப்பட்டார். இந்த விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகள் இடம் பெறுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(வ-21,34,35)

## 2017....

இந்து ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்திய நிதி உதவியுடன் மலையகம் ஹட்டனில் அமைக்கப்படும் வைத்தியசாலைக் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த ஆண்டு மே மாதம் இலங்கைக்கு வருகை தருகிறார். இதன்போது அவர் கொழும்பில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வெசாக் கொண்டாட்டங்களிலும் கலந்துகொள்வார் என்று அமைச்சர் ராஜித தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார். இதன்போது அவர் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்தார். இதன்மூலம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த முதலாவது இந்தியப் பிரதமர் என்ற பெருமையையும் மோடி பெற்றார். (வ-5)

## முப்படைகள்....

எப்பட்டதன் காரணமாக தமிழர்கள் பாதுகாப்பு படைகளில் இணைவதற்கு முன்வரவில்லை. நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் 206 தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அவர்கள் தற்போது வடக்கு - கிழக்கில் கடமையாற்றி வருகின்றனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். அரசு அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்தார். (வ-4)

## லண்டனிலிருந்து....

சேர்க்கப்பட்டார்.

உயிரிழந்தவர் சகோதரியின் திருமண நிகழ்வுக்காக லண்டனில் இருந்து வந்திருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். தெல்லிப்பழை மதவடியில் நேற்று மாலை சம்பவம் இடம்பெற்றது.

இளவாலையைச் சேர்ந்த ஜே.திலீபன்ராஜ் (வயது - 30) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (வ-4,107)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா
## மண்டலாய்விநாயகமூர்த்தி (பாலு)

**(திரியாய் அம்மன், இயக்கச்சி கண்ணகை அம்மன் ஆலயங்களின் பூசகரும், வடமாகாண சமாதான நீதிவானும்)**



**தோற்றம் : 02.10.1952**
**மறைவு : 07.09.2016**


கோயில்வயல் இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது நாவலர்வீதி கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாக வசித்து வந்தவருமாகிய செல்லையா மண்டலாய் விநாயகமூர்த்தி நேற்று (07.09.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.596, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**

## செல்வி அருள்நாயகி நைல்ஸ்



அத்தியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அருள் நாயகி நைல்ஸ் நேற்று (07.09.2016) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான ஜீவாநைல்ஸ் - மலர்நைல்ஸ் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ் சென்ற ஜெயசீலன், கிருபை நாயகி, தயாசீலன் மற்றும் ஜெபசீலன் **(UK)** ஆகியோரின் இளையசகோதரியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (08.09.2016) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**12. அம்பலவாணர் வீதி. அத்தியடி. யாழ்ப்பாணம்.**
**021 222 9215**

**தகவல் : ஜெபசீலன் (சகோதரன் UK)**

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை யோகேஸ்வரன்

**(ஓய்வு பெற்ற லிகிதர் வலயக்கல்விப்பணிமனை தீவகம்)**

இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகேஸ்வரன் நேற்று (07.09.2016 )புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான இராசேந்திரம் மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் சுதாநிதி ( ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்) யின் அன்புக் கணவரும் நிசாந்தன் (ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), அனுசாந்தன் (கனடா), யசோதா (ஆசிரியர், யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆர்த்தி (ஆசிரியர், யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), அனித்தா (கனடா), ஸ்ரீகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி திணைக்களம்) ஆகியோரின் மாமனும் பவளதேவி, பத்மநாதன், விசயகாந்தன், சந்திரகாந்தன், சறோயினி தேவி, சிறிகாந்தன் ஆகியோரின் சகோதரனும் கலாநிதி, பத்மநிதி, ஜெயநிதி, குலநிதி, உதயேந்திரன், தவேந்திரன், விஜயேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் அர்த்தஷா, அக்நிஷன், அரியானா, அர்நிஷா, ஆதீஷ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.09.2016) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**16. கைலாசபிள்ளையார் கோயில் வீதி. நல்லூர்.**

**தகவல் : யோ. நிஷாந்தன் (மகன்)**
**077 7110816**

## கதிர்காமு பாலகிருஷ்ணன்

**பிறப்பு** 11 . 09 . 1946



**இறப்பு** 07 . 09 . 2016

நெல்லியடி வடக்கு, கோட்டைத்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு பாலகிருஷ்ணன் நேற்று (07.09.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சுப்பிரமணியம், செல்லம்மா, தங்கவேலாயுதம், பாக்கியலட்சுமி ஆகியோரின் சகோதரனும் பொன்னம்பலம் (கனடா), பார்வதி (பிரான்ஸ்) ஆகியோரின் இளைய சகோதரனும் ரில்டுஷா (லண்டன்), சந்திராதா(லண்டன்), தணிகைவேள் (ஆசிரியர் யா/ஹாட்லிக் கல்லூரி), காலஞ்சென்ற செந்தில்வேள் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிதாஸ் (லண்டன்), சிவகுமார்(லண்டன்), ஜனாதனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபிதா(லண்டன்), பறின்(லண்டன்), அஸ்மிதா (லண்டன்), அர்ச்சனா(லண்டன்), தேஷ்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2016) வியாழக்கிழமை அம்பிகைவாசா, கோட்டைத்தெரு, நெல்லியடி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணிக்கு ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : தணிகைவேள் (மகன்)**
**077 1240087**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி தட்சணாமூர்த்தி

வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி இரத்தினபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி தட்சணாமூர்த்தி நேற்று (07.09.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-சொர்ணம் தம்பதியரின் அன்பு மகளும், தட்சணாமூர்த்தியின் அன்பு மனைவியும், சோமாதேவி (வட்டக்கச்சி), சரோஜினிதேவி (இந்தியா), சகுந்தலாதேவி (லண்டன்), இந்திராதேவி (இந்தியா), மஞ்சுளாதேவி (ஆசிரியை, அன்னை சாரதாதேவி வித்தியாலயம், கிளிநொச்சி), ஆனந்தகுமார் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவநீதன், நுதர்சன் (ஆஸ்திரேலியா), பார்த்தீபன், பிரசாந்தினி, துஷாந்தினி (மாணவிகள், கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இரத்தினபுரத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இரத்தினபுரம், கிளிநொச்சி.**
**T.P: 077 967 1577** (j/4424) (10,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## தம்பு ஜெகநாதன்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக இராசபாதை வீதி, வெள்ளவாய்க்காலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு ஜெகநாதன் நேற்று (07.09.2016) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குணரெட்னம்-பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் சிறிமதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரட்னேஸ்வரி, வைத்திய நாதன் மற்றும் இராஜேஸ்வரி, பத்மநாதன் ஆகியோரின் சகோதரனும் சற்குணபாலதேவி, சலதராங்கம், சிவகுலசிங்கம்(GS-ஓய்வு நிலை), தெய்வீகராணி ஆகியோரின் மைத்துனரும் அர்ச்சனா(சுவிஸ்), நிரோஜனா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**268,இராஜவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல் : குடும்பத்தினர். 077 9595792**

## திருமதி
## லூட்ஸ் மேரி புஸ்பராணி ஸ்ரனிஸ்லோஸ்



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் மிசிசாகா கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூட்ஸ் மேரி புஸ்பராணி ஸ்ரனிஸ்லோஸ் 31.08.2016 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லோஸ்(பிரதமலிகிதர் - சுகாதாரத்திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான D.M. சுவாம்பிள்ளை(அதிபர்) - எலிசம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆசிரியர்களான ஞானப்பிரகாசம் - சலோமை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வநாயகியின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் - மேரிறோசம்மா, மரியராஜரட்ணம் - றோசம்மா, அருட்சகோதரி சென்.போல்.ஜெயராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் லொயிட்(கனடா), கொஸ்கா(புஸ்பன் - கனடா), அருட்பணி, நெவில் ஞானராஜா (ஆஸ்திரேலியா), அனோஜா(ஆசிரியர் - யாழ் .திருக்குடும்பக் கன்னியர்மடம்), யூடிற் உஷாந்தா (கனடா), மெல்வின்(தர்மன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் எமா(கனடா), டொறின்(கனடா), F.X.அன்ரன (கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்), பிரதீபா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் நிக்கலின், றொஸ்லின், மாறியோ, அல்வின், றொட்னி, நெல்வின், மவுறியா, ஆரோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சற்குணராஜா(கனடா), ஆனந்தராஜா(ஓய்வு நிலை உதவிமுகாமையாளர், மக்கள் வங்கி), அருட்பணி. கிறிஸ்ரி, ராணி(கனடா), ஜெயம்(நோர்வே), அருட்பணி. ஞானேந்திரன் (கனடா) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் 10.09.2016 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றைய தினம் மாலை 4 மணிக்கு விசேட இரங்கல் திருப்பலி யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R) ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் கலந்து செபிக்க அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**37/7, மாட்டின் வீதி. யாழ்ப்பாணம்.**

**தகவல்: அனோஜா அன்ரன் (மகள்)**

**077 950 6683**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரையிறுதியில் கெர்பர்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்திலுள்ள வீராங்கனையான கெர்பர்.

நடப்பு வருடத்தின் கடைசி பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான அமெரிக்கத் தொடர் அந்த நாட்டின் தலைநகர் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டமொன்றில் ஜேர்மனின் கெர்பரை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 7 ஆம் இடத்திலுள்ள இத்தாலியின் வின்சி மோதினார். ஆட்டத்தின் முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கெர்பர். அவர் அடுத்த செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)






## பிரேமதாச மைதானத்தில் விடைபெறுகிறார் டில்சான்

இலங்கை - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி-20 ஆட்டம் கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டமே டில்சான் இலங்கை அணியைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கும் இறுதி ஆட்டமாக அமைந்துள்ளது.

தொடரில் இரண்டு ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்று 1:0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் நாளை நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றால் மட்டுமே அந்த அணியால் தொடரை 1:1 என்று சமநிலையில் முடித்துக்கொள்ள முடியும். மாறாக ஆஸ்திரேலியா வெற்றிபெற்றாலோ அல்லது ஆட்டம் கைவிடப்பட்டாலோ கிண்ணம் ஆஸியிடமே செல்லும். டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஏற்கனவே விடைபெற்ற டில்சான், ஆஸ்திரேலி யாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்துடன் பன்னாட்டு ஒருநாள் ஆட்டங் களிலிருந்து விடைபெற்றார். இவர் நாளை நடைபெறவுள்ள இரண்டாவது ரி-20 ஆட்டத்துடன் பன்னாட்டு கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுக்கப் போவதாக ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில் இந்த ஆட்டம் அவரின் கடைசிப் பன்னாட்டு ஆட்டமாக அமைந்தது. (ம)

## பரா ஒலிம்பிக் இன்று ஆரம்பம்

மாற்றுத்திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் தொடர் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் இன்று இலங்கை நேரப்படி ஆரம்பமாகிறது.

இன்று ஆரம்பமாகும் இந்தத் தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி முடிவடையும். இலங்கை நேரப்படி காலை 8.30 மணிக்கு பெண்களுக்கான 10 மீற்றர் துப்பாக்கி சுடுதல் நடைபெறவுள்ளது. இதுவே நடப்பு வருட பாரா ஒலிம்பிக் தொடரின் முதல் போட்டியாக அமைந்தது. உலகெங்கிலும் இருந்து ஒட்டு மொத்தமாக 163 நாடுகள் இந்த ஒலிம்பிக் தொடரில் கலந்துகொள்கின்றன. 23 விளையாட்டுக்களில் ஒட்டு மொத்தமாக 538 போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (ம)


கோப்புப்படம்


## இரண்டு பிரிவுகளாக டெஸ்ட்; வீரர்கள் பெருமளவு ஆதரவாம்

டெஸ்ட் ஆட்டங்களை இரண்டு பிரிவாக நடத்தும் திட்டத்துக்கு வீரர்களிடையே பெரிய ஆதரவு இருப்பதாக பன்னாட்டு கிரிக்கெட் வீரர்களின் சம்மேளனம் அறிவித்தது.

டெஸ்ட் ஆட்டங்களில் விறுவிறுப்புத் தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் சில திட்டங்களை பன்னாட்டு கிரிக்கெட் சபை அறிவித்தது. பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை நடத்துதல், நான்கு நாள்கள் கொண்டதாக மட்டுப்படுத்தல், இரு பிரிவாக தொடர்களை நடத்துதல் என்பன அவற்றில் முக்கியமானவையாகும். பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களுக்கு பெரும்பாலான கிரிக்கெட் சபைகள் தமது ஆதரவைத் தெரிவித்ததையடுத்து அத்தகைய ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நான்கு நாள்கள் கொண்டதாக ஆட்டங்களை மட்டுப்படுத்தும் திட்டத்துக்கு இந்திய, ஆஸ்திரேலிய, இங்கிலாந்துச் சபைகள் எதிர்ப்பை வெளிப்படுத்தியமையால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

மூன்றாவது இரு பிரிவாக தொடர்களை நடத்தும் திட்டம். அதாவது ஆப்கானிஸ்தான், அயர்லாந்து நாடுகளுக்கு டெஸ்ட் அந்தஸ்தைக் கொடுத்து பன்னாட்டு தரப்படுத்தலில் முதல் 7 இடங்களில் உள்ள நாடுகளுக்கு ஒரு பிரிவாகவும், அடுத்த 5 இடங்களில் உள்ள நாடுகளுக்கு இன்னொரு பிரிவாகவும் தொடரை நடத்துவதாக பன்னாட்டு கிரிக்கெட் சபை திட்டமொன்று முன்வைத்தது. இந்தத் திட்டத்துக்கு கிரிக்கெட் உலகில் ஆதிக்கம் செலுத்தும் சபைகளாகக் கருதப்படும் இந்திய, ஆஸ்திரேலிய, இங்கிலாந்துச் சபைகள் தமது எதிர்ப்பை வெளியிட்டன. இதனால் இந்தத் திட்டம் கைவிடப்படும் தருவாயில் இருந்தது. ஆனால் பன்னாட்டு கிரிக்கெட் வீரர்களின் சபை, இரு பிரிவாக டெஸ்ட் ஆட்டங்களை நடத்த வீரர்களி டையே ஆதரவு உள்ளது எனத் தெரிவித்தது. இதனையடுத்து இந்தத் திட்டம் மீண்டும் பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்றாக அமைந்தது. (ம)



## ஒருநாள் தரப்படுத்தல்; வில்லியர்ஸ் முதலிடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஒருநாள் ஆட்டங்களுக்கான புதிய தரப்படுத்தலிலும் வில்லியர்ஸ் முதலிடத்தில் தொடர்கிறார்.

குறித்த தரப்படுத்தலில் கடந்த சில வாரங்களாக முதலிடத்தில் இருந்துவரும் வில்லியர்ஸை எவராலும் வீழ்த்த முடியவில்லை.

அவருக்கும் இரண்டாவது இடத்தில் உள்ள கோக்லிக்கும் இடையே கிட்டத்தட்ட 74 புள்ளிகள் வித்தியாசம் பேணப்படுகிறது. 10 ஆவது இடத்தில் டில்சான் உள்ளார். தரப்படுத்தலில் முதல் 10 இடங்களுக்குள் இலங்கையிலிருந்து இடம்பெற்ற ஒரேயொரு வீரர் டில்சான் மட்டுமே.

வில்லியர்ஸ் 887 புள்ளிகளையும், கோக்லி 813 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். 778 புள்ளிகளுடன் அம்லா மூன்றாவது இடத்திலும், 758 புள்ளிகளுடன் ரூட் நான்காம் இடத்திலும், 752 புள்ளிகளுடன் வில்லியம்சன் ஐந்தாம் இடத்திலும் உள்ளனர்.


ஆறு முதல் பத்து வரையிலான இடங்களுக்குள் [illegible] டி ஹொக், டில்சான் ஆகியோர் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்ரெம்பர் 30 ஆம் திகதியை ஆவலுடன் எதிர்நோக்கும் யுவி

செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதியை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தெரிவித்தார் இந்திய அணியின் சகலதுறை வீரரான யுவராஜ்.

இந்திய அணியின் தலைவரான டோனியின் வாழ்க்கை வரலாறு 'எம்.எஸ்.டோனியின் சொல்லப்படாத கதை' என்ற தலைப்பில் திரைப்படமாக எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியாகிறது. கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் இந்தப் படத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். கிரிக்கெட் வீரர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்த நிலையில் திரைப்படம் வெளியாகும் செப்ரெம்பர் 30 ஆம் திகதியை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக யுவராஜ் தெரிவித்தார். டோனியின் வாழ்க்கை தொடர்பான படத்தைக் காண்பதற்கு பெரும் ஆவலாய் உள்ளேன். இந்திய அணிக்குள் அவருடன் ஏராளமான நாள்கள் இருந்துள்ளமையால், இந்திய அணிக்கு வருவதற்கு முன்னர் டோனியின் வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை அறிந்துகொள்ளவே குறித்த எதிர்பார்ப்பு என்னில் நிலவுகிறது என யுவராஜ் மேலும் தெரிவித்தார். (ம)



# தேசியமட்ட கூடைப்பந்தாட்டம் யாழில் நாளை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், செப். 8
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட இரண்டாம் கட்டப் போட்டிகள் நாளை ஆரம்பமாகி எதிர்வரும் ஞாயிறுவரை நடைபெற வுள்ளன. கூடைப்பந்தாட்டத் தொடர்கள் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.


இரண்டாம் கட்டத்தில் கூடைப்பந்தாட்டம், கபடி, ஹொக்கி, வலைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், எல்லே, கால்பந்தாட்டம், சைக்கிளோட்டம், கராத்தே, குத்துச்சண்டை, ஜிம்னாஸ்டிக் ஆகிய போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலும், பெண்கள் பிரிவு ஆட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி மைதானங்களிலும் நடைபெறவுள்ளன.

இருபாலாருக்குமான கபடி, மாத்தறை உயன்வத்த வித்தியாலயத்திலும், ஆண்களுக்கான ஹொக்கி கொழும்பு டொறிங்ரன் மைதானத்திலும், பெண் களுக்கான ஹொக்கி சிறிமாவோ கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் குருநாகல் சென். ஆன்ஸ் கல்லூரியிலும், இருபாலாருக்கு மான பூப்பந்தாட்டம் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, றோயல் கல்லூரிகளின் உள்ளரங்கிலும், ஆண்களுக்கான எல்லே குழியாப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரியிலும், ஜே.ஆர். ஜெயவர்த்தனா வித்தியாலயத்திலும், பெண்களுக்கான எல்லே தர்மானந்த மகா வித்தியாலயத்திலும், பேகலராவத மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

இருபாலாருக்குமான குத்துச்சண்டை மருதானை சென். ஜோசப் வித்தியாலயத்திலும், ஜிம்னாஸ்டிக் கொழும்பு விளையாட்டு அமைச்சிலும், கராத்தே கிரியத்தகொட மித்திர மகா தேவி பாலிகா வித்தி யாலயத்திலும், இருபாலாருக்குமான கால் பந்தாட்டம், சைக்கிளோட்டம் என்பன அநுராத புரத்திலும் நடைபெறவுள்ளன. (ம-422)



# அமெரிக்க ரென்னிஸ் தொடர்; அரையிறுதியில் ஜோகோவிக்

அமெரிக்க ரென்னிஸ் தொடரின் அரை யிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார் பன்னாட்டத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான ஜோகோவிக்.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர் களில் ஒன்றான அமெரிக்க ரென்னிஸ் தொடர் அந்த நாட்டின் தலைநகரான நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள சேர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து பிரான்ஸின் சோங்கா மோதினார். முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படை யில் கைப்பற்றிய ஜோகோவிக், இரண்டாவது செற்றையும் 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி னார். மூன்றாவது செற்றிலும் ஜோகோ விக் வெற்றிபெற்றால் 3:0 என்ற நேர் செற் வெற்றியைப் பதிவுசெய்யும் நிலை இருந்தது.

ஆனால் காயம் காரணமாக சோங்கா வெளியேற ஜோகோவிக் அரையிறுதிக் குத் தகுதி பெற்றார். (ம)

# கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 8
யாழ். மாவட்ட அணிகள் பங்கேற்கும் ஜனாதிபதி கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலும், ஆவ ரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமைதா னத்திலுமே ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில் முதல் சுற்றில் வழக்கம்பரை அம்பாள் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி யும், மட்டுவில் ஞானதீபம் அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் அணியும், நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியை எதிர்த்து மட்டு வில் மோகன்தாஸ் அணி யும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணியும், நாயன் மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து வசாவிளான் விளையாட்டுக் கழக அணியும், கோப்பாய் கே.எம். வி. அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் அணியும், புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து சங் கானை விளையாட்டுக் கழக அணியும் மோத வுள்ளன.

திறந்த வயதுப் பிரி வினருக்கான போட்டியில் முதல் சுற்றில் ஆவரங் கால் மத்திய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி யும், பாரதி அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய அணியும், கலைஒளி அணியை எதிர்த்து ஸ்டார் அணியும், புத்தூர் வளர் மதி அணியை எதிர்த்து சங்கானை விளையாட் டுக் கழக அணியும் மோத வுள்ளன. (ம-422)

## சப்ரகமுகவை தோற்கடித்தது யாழ். பல்கலை

யாழ்ப்பாணம், செப். 8
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலன எல்லேத் தொடரில் பெண்கள் பிரிவில் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தை தோற்கடித்தது யாழ். பல்கலை.

வயம்ப பல்கலைக் கழக மைதானத்தில் தொடர் நடை பெற்றுவருகிறது. யாழ். பல்கலைக் கழக பெண்கள் அணி நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் சப்ர கமுவ பல்கலைக் கழக அணியை எதிர்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலை நிர்ண யிக்கப்பட்ட 30 பந்துகளில் 5 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சப்ரகமுவ பல்கலைக் கழகமும் 5 ஓட்டங்களைப் பெற்றது. எனவே வெற்றி யாளரைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் மேலதிகமாக 5 பந்துகள் வழங்கப்பட்டன. யாழ். பல் கலைக் கழக அணி ஓர் ஓட்டத்தைப் பெற்றது. சப்ரக முவ பல்கலைக் கழகம் எந்தவித ஓட்டத்தையும் பெறாத தையடுத்து யாழ். பல்கலை வெற்றிபெற்றது. (ம-23)

# சென். யூட்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 8
சிலாவத்தை இளம் பறவைகள் விளை யாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொட ரில் சென். யூட்ஸ் அணி சம்பியனானது. இளம்பறவைகள் வி.கழக மைதானத்தில் அண்மையில் இந்த இறுதி ஆட்டம் நடைபெற்றது. சென். யூட்ஸ் அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் அணி மோதியது. இதில் சென். யூட்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. ஆட்டநாய கனாகவும், தொடராட்ட நாயகனாகவும் சென். யூட்ஸின் பியூஸ்லஸ் தெரி வானார். சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் கங்கைஅமரன் தெரி வானார். (ம-23)

## அரையிறுதி தவறியது

யாழ்ப்பாணம், செப். 8
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரி வில் அரையிறுதி வாய்ப்பைத் தவறவிட்டது யாழ். பல்கலைக் கழக அணி.

வயம்ப பல்கலைக் கழகத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் யாழ். பல் கலைக் கழக அணியை எதிர்த்து மொறட்டுவ பல்கலைக் கழக அணி மோதியது. இதில் மொறட்டுவ பல்கலைக் கழக அணி 39:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றதையடுத்து யாழ். பல்கலைக் கழக ஆண்கள் அணியின் பயணம் காலிறுதி யுடன் முடிவு கண்டது. (ம-23)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், செப். 8
குரும்பைகட்டி சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி என்பன எதிர்வரும் 11 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளன. எனவே போட்டிகளில் பங்கு பற்றவிரும்பும் கழகங்கள் மற்றும் வீரர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தின் பெண்கள் கால் பந்தாட்ட அணிக்கான சீருடை மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்தால் நேற்றுமுன் தினம் வழங்கி வைக்கப்பட்டது. (ம-ரி3)



யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வர்ண விருதுகள் வழங்கும் நிகழ்வு குறித்த கல்லூரியில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. தேசிய, பன்னாட்டுப் போட்டிகளில் சாதித்த வீரர்கள் கௌரவிக் கப்பட்டனர். கல்லூரியின் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச் சின் செயலாளர் இ.ரவீந்திரன் கலந்து கொண்டார். (ம-23)

# ஹர்பஜன் சிங்கே எனது முதல் எதிரி

## பொண்டிங் வெளிப்படுத்தினார்

ஆஸ்திரேலியாவின் சிறந்த துடுப்பாட்ட வீரரும், முன்னாள் அணித்தலைவருமான ரிக்கி பொண்டிங், ஆசிய ஆடுகளங்களில் தனது முதல் எதிரியாக ஹர்பஜன் சிங்கை குறிப்பிட்டார்.

பொண்டிங்கின் சொந்த மாநிலமான டாஸ்மியாவின் பயிற்சியாளராக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அவரை அண்மையில் நியமித்தது. ஆஸ்திரேலிய அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருவதால், ஆசிய ஆடு களங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. இதற்குப் பதில் வழங்குகையிலேயே பொண்டிங் அவ்வாறு குறிப்பிட் டார்.

ஆசிய ஆடுகளங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டால் எனது நினைவில் முதலில் வருபவர் ஹர்பஜன் சிங்கே. அவரை இப்போது நினைத்தால் கூட எனக்கு உதறல் எடுக்கும். ஏனெனில் டெஸ்ட் ஆட்டங்களில் என்னை 10 முறை போல்ட் முறையில் ஆட்டமிழக்கச் செய்துள்ளார் என பொண்டிங் மேலும் குறிப்பிட்டார். (ம)

V2 TRAVELS
11/09/2016 ஞாயிற்றுக்கிழமை
பருத்தித்துறை திறப்புவிழாவில் பணப்பரிசு
நீங்கள்
ரூபா 1000/= பணப்பரிசு
வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா?
விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
UK – 550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
முற்பதிவு ஆரம்பமாகி விட்டது
முற்பதிவுகளுக்கு - 0768226240



# டெஸ்ட் தொடரில் மீண்டும் வருவேன்

## கெய்ல் தெரிவிப்பு

ரி-20 ஆட்டங்களின் முடிசூடா மன்னனாக வலம்வரும் கிறிஸ் கெய்ல் மீண்டும் டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பேன் என்று தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகளின் அணியை ரி-20, டெஸ்ட், ஒருநாள் என மூன்று விதமான ஆட்டங்களிலும் பிரதிநிதித்துவம் செய்துவந்த கெய்ல் கடந்த சில மாதங்களாக ஒருநாள், டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து புறக்கணிக்கப்பட்டு ரி-20 ஆட்டங்களில் மட்டும் விளையாடி வருகிறார். இந்த நிலையிலேயே அவர் மீண்டும் டெஸ்ட் ஆட்டங்களுக்குத் திரும்புவது தொடர்பாக வெளிப்படுத்தினார்.


மேற்கிந்தியத் தீவுகளின் ரி-20 அணி பலமாக உள்ளது. ஆனால் ஒருநாள், டெஸ்ட் ஆட்டங்களில் அணி மோசமான தருணத்தைச் சந்தித்துள்ளது. அதிலும் குறிப்பாக டெஸ்ட் ஆட்டங்கள் படுமோசமாக அமைகின்றன. அனுபவ வீரர்கள் இல்லாதமையே தீவுகளின் தோல்விக்கான பிரதான காரணம். மீண்டும் டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பேன். மேற்கிந்தியத் தீவுகளை டெஸ்ட்டில் பலப்படுத்திய பின்னரே ஓய்வு தொடர்பாகச் சிந்திப்பேன் என கெய்ல் மேலும் தெரிவித்தார். (ம)

# பல்கலைகளின் வீதியோட்டம் வயம்பவில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 8

இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான வீதியோட்டப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

வயம்ப பல்கலைக் கழகத்திலேயே போட்டி நடைபெறவுள்ளது. இருபாலாருக்குமான கராத்தே நாளையும், நாளை மறுதினமும், ஆண்களுக்கான கால்பந்தாட்டம் நாளை ஆரம்பித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரையும் நடைபெறவுள்ளது. (ம-23)



காயம் காரணமாக கடந்த சில மாதங்களாக ஓய்விலிருந்த போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான றொனால்டோ ரியல் மட்ரிட் அணியுடன் நேற்று இணைந்து பயிற்சிகளை மேற் கொண்டார். (ம)





புதியதோர் நாட்டில் முன்னேறிச் செல்ல நினைப்பவர்கள் வாருங்கள்
70 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாட
செப்டம்பர் 10 ஆம் திகதி காலை
9 மணிக்கு கெம்பல் மைதானத்திற்கு
ஐக்கிய தேசியக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.